ஸ்ரீ அகத்தியர் துணை

# அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள்

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்களுக்கும்,
அன்பர்களுக்கும் தொகுத்து வழங்குபவர்:

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று உலகறியச் செய்யும் வள்ளல்,
பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**


**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**
ஓங்காரக்குடில்,
115, நகர் விரிவாக்கம், துறையூர் – 621 010.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
✆ 04327 – 455684, 455384.

உரிமை : துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்திற்கே

முதற் பதிப்பு : 17.09.2000
(ஓங்காரக்குடிலாசான் 24 ஆம் ஆண்டு தவநிறைவு விழா வெளியீடு).

இரண்டாம் பதிப்பு : 08.03.2001
(தஞ்சை பெரியகோவிலிலுள்ள கருவூரார் சந்நதியில் நடைபெறும் மாசிமக விழா வெளியீடு).

மூன்றாம் பதிப்பு : 14.04.2002
(தஞ்சை பெரியகோவிலிலுள்ள கருவூரார் சந்நதியில் நடைபெறும் தமிழ்ப்புத்தாண்டுவிழா வெளியீடு).

வெளியீடு : ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில்,
துறையூர் – 621 010.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
✆ STD : 04327
குருநாதர் : 455684
அலுவலகம் : 455384, 455184.
**Fax** : 455284
www.agathiar.com

அச்சிடுவோர் : வாஞ்சி மறுதோன்றி அச்சகம், துறையூர். ✆ 443638


அகத்தியர் துணை

## முன்னுரை

அடியேன் என் வாழ்க்கையில் பல குருமார்களிடம் சென்றிருக்கிறேன். அவரவர்கள் பல வகைகளிலும் ஆன்மீகத்தைப்பற்றி சொன்னார்கள். அதில் 1955–ல் துறையூர் அவல்பட்டறை சந்தில் **செ. பெ. சின்னசாமி சாஸ்த்திரி** என்ற தத்துவமேதை இருந்தார். அவர்களிடம் சென்று ஆன்மீகத்தை அறிந்துகொள்ள விரும்பினேன். அவர்தான் மகான் அகத்தீசன் பற்றியும், மற்றும் ஞானிகளைப் பற்றியும், பூஜை செய்யும் முறைகள் பற்றியும் மற்றும் பிராணாயாமமாகிய யோகப்பயிற்சிப் பற்றியும், இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய இரகசியங்களைப் பற்றியும் சொன்னார்கள். அதிலிருந்து நான் தினமும் அகத்தீசனை பூஜை செய்து வந்தேன். மேலும்

ஆசான் அகத்தீசனை பூஜை செய்யச் செய்யத்தான் எது உண்மை, எது பொய் என்று ஓரளவிற்கு அறிந்துகொள்ள முடிந்தது. முழுமையாக அறிந்துகொள்வதற்கு இன்னும் எனக்கு பக்குவம் இல்லை. எனக்குத் தெரிந்த சில ஆன்மீக அனுபவங்களை இந்த நூலில் அமைத்துள்ளேன். இதில் குறைகள் இருக்கலாம். காரணம், போதிய கல்வியறிவு இல்லாத காரணமாகும். கற்றுணர்ந்த பெரியோர்கள் குறைகள் இருந்தால் பொறுத்துக்கொள்ளும்படி திருவடி பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நூலில் சில நல்ல கருத்துக்களும் இருக்கலாம். அவை ஆசான் அகத்தீசன் ஆசியால் சொல்லப்பட்டதாகும். இதே நூலில் பல தவறுகளும் இருக்கலாம். அது எனது அறியாமையாகும்.

இந்த அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் வெளி வருவதற்கு அன்பர் இரா. மாதவன் அவர்கள் பல அலுவல்கள் இருந்தாலும், சிறிதும் சோர்வில்லாது, நான் கருத்துக்களைச் சொல்லச் சொல்ல எழுதினார். எனவே அவரும் அவரது குடும்பத்தார்களும் மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் எல்லா நலமும் வளமும் பெற்று நீடு வாழவேண்டும் என்று நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

அன்பர்கள் இந்த நூலைப் படித்து பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக்கு,
குடிலாசான் கையொப்பம்
(தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்)
ஓங்காரக்குடிலாசான் அவர்கள்.

**தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்,**
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில்,
துறையூர் – 621 010.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு ✆ 04327 – 455684.

குறிப்பு : இந்த நூலைப்படித்து இதிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டினால் திருத்தம் செய்து வெளியிட வாய்ப்பாகயிருக்கும்.

## உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 01. | ஞானிகள் அருளிய அருட்கவிகள் | 1 |
| 02. | ஆசான் அகத்தீசன் அருளிய கொடி வணக்கம் | 18 |
| 03. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு | 19 |
| 04. | ஆசான் கருவூரார் ஆசிகாண்டம் | 25 |

| | | |
|---|---|---|
| 06. | மகான் அருணகிரிநாதர் ஆசியின் வாழ்த்து மடல் | 34 |
| 07. | உண்மைப் பத்திரிக்கை | 37 |
| 08. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 1<br>கற்றதின் பயனே அகத்தீசரை பூஜிப்பதுதான் | 50 |
| 09. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 2<br>இல்லறமே நல்லறம் | 53 |
| 10. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 3<br>ஞானிகளை பூஜிப்போம், ஞானம்பெற்று வாழ்வோம். | 61 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 4<br>மனம் ஒருநிலைப்பட தியானமே முக்கியம் | 68 |
| 12. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 5<br>அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்களின் சிறப்புகள் | 75 |
| 13. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 6<br>கருத்துக்கள் தொகுப்பு | 79 |
| 14. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 7<br>புண்ணியச் செயல்களின் விவரம் | 86 |
| 15. | அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 8<br>சித்தர்கள் வழிபாட்டின் நன்மைகள் | 92 |
| 16. | நாம் பாவத்திலிருந்து விடுபட | 98 |
| 17. | ஆசான் அகத்தீசர் ஆசி காண்டம் | 99 |
| 18. | சன்மார்க்க திருமண நெறிமுறை விளக்கம் | 101 |
| 19. | மனிதன் கடவுளாக | 103 |
| 20. | ஜென்மத்தை கடைதேற்ற வேண்டுமா? | 106 |
| 21. | குருநாதர் உபதேசம் | 111 |
| 22. | உலக மக்கள் உய்வதற்கு ஒரு உபாயம் | 116 |
| 23. | தஞ்சை மாசிமக விழாவில் வெளியிட்ட பத்திரிக்கை | 120 |
| 24. | அகத்தீசனை பூஜித்தால் அனைத்தும் சித்தி | 124 |


அகத்தியர் துணை

## ஞானிகள் அருளிய அருட்கவிகள்

**நந்தி அகத்தியர்மூலர் புண்ணாக்கீசர்**
**நற்றவத்துப் புலத்தியரும் பூனைக்கண்ணர்**
**கந்திடைக்காடரும் போகர் புலிக்கைமீசர்**
**கருவூரார் கொங்கணர் காலாங்கி அன்பிற்**
**சிந்தில் அழுகண்ணர் அகப்பையர் பாம்பாட்டி**
**தேரையரும் குதம்பயையருஞ் சட்டைநாதர்**
**செந்தமிழ்ச் சீர்சித்தர் பதினெண்பேர் பாதம்**
**சிந்தையுணிச் சிரத்தணியாச் சேர்த்தி வாழ்வாம்.**

**தனிப்பாடல் – 1.**

**மேற்கண்ட கவியின் சாரம் :**

ஆசான் நந்திசர், மகான் அகத்திசர், திருமூலதேவர், மகான் புண்ணாக்கீசர், பிரம்மமுனிவர், புலத்திசர், ஆசான் பூனைக்கண்ணார், மகான் இடைக்காடர், ஜோதி ரிஷியாகிய போகர், மகான் புலிப்பாணி சித்தர், அருள்மிகு கருவூரார், வினை தீர்க்கும் கொங்கண மகரிஷி, மகான் காலாங்கிநாதர், அழுகண்ண மகரிஷி, அகத்தின் இயல்பை அறிந்த அகப்பைச் சித்தர், பக்குவமுடைய பாம்பாட்டி சித்தர், தெளிவுமிகு தேரைய மகரிஷி, குணம் மிகுந்த குதம்பைச் சித்தர், தேகமென்னும் சட்டை நீக்கிய சட்டை முனிவர் மேற்கண்ட முத்தமிழ் வித்தகர்களாகிய பதினெட்டு சித்தர்களும் மகா அருள் வல்லவர்கள் ஆவார்கள். அவர்களை தினமும் வரிசைப்படுத்தி நாமஜெபம் செய்து வந்தால் பலபிறவிகளில் "யான்" என்ற கர்வத்தாலும், பொருள் வளமென்னும் செருக்காலும், ஆள்படை அகந்தையாலும் மற்றும் உத்யோக திமிராலும், பொல்லாத காமதேகத்தின் கொடுமையாலும், கொடிய சினத்தாலும் மேலும் புலால் உண்ணுதல், உயிர்க்கொலை செய்தல் போன்ற கொடிய பாவத்தாலும் வந்த கேடுகள் அத்தனையும், மேற்கண்ட ஞானிகளின் நாமத்தை சொல்லி வந்தால் பாவங்கள் எல்லாம் பொடிப்பொடியாகிவிடும்.

மேலும் சிறப்பறிவு உண்டாகும். "நாம் யார்?" "நமது பிறவி என்ன?" "நமது பிறவியின் தன்மை என்ன?" ”இந்த பிறப்பால் அடையக்கூடிய லாபநஷ்டமென்ன?” என்பதை அறிய முடியும். நஷ்டத்தை நீக்கி ஆன்ம லாபம் பெற்றுக்கொள்ள முடியும். தொடர்ந்து வருகின்ற பிறவிக்கு அறியாமைதான் காரணம் என்பதை அறிந்துகொள்ள முடியும். ஆன்ம இயக்கமும், அதை தாங்குகின்ற உடம்பு பற்றியும், அந்த உடம்பால் வருகின்ற நன்மை, தீமைகள் பற்றியும் அறிந்துகொள்ள முடியும்.

உடம்பில் நன்மையும், தீமையும் சேர்த்தே இயற்கை அன்னை படைத்துள்ளாள். இந்த உடம்பில் தீமை சேர்த்து படைத்ததின் காரணம், நெல்லுக்கு உமி இல்லை என்றால் மீண்டும் முளைக்காது. ஆகவே, இந்த தேகத்தில் கேட்டையும், ஆக்கத்தையும் சேர்த்து படைத்திருக்கிறாள். கேடாகிய உமி நீங்கினால் அரிசி மீண்டும் முளைக்காது. (புற உடம்பாகிய மும்மல தேகம் நீங்கினால்) அதேபோல் கேடான மும்மலம் என்னும் உமி நீங்கினால் மலமற்ற ஒளி உடம்பாகிய ஜோதி உடம்பு உண்டாகும். ஜோதி உடம்பு உண்டானால் மீண்டும் பிறக்காது (உமி நீங்கினால் அரிசி முளைக்காதது போல). ஆகவே, மேற்கண்ட பதினெட்டு மகான்களை உருகி தியானம் செய்தால், நாம் ஜென்மத்தை கடைத்தேற்றிக்கொள்ளலாம். எனவே, ஞானிகளை பூஜிப்போம்! நலம் பெற்று வாழ்வோம்!!

**அகத்திய மாரிஷி நமா என்றென்றோது**
**அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்**
**அகத்தியரே காஷாய வேட மீவார்**
**அப்போது சித்தரெல்லாம் கைக் கொள்வார்கள்**
**அகத்தியரைத் தெண்டனிட்டு மேரு செல்ல**
**யாருக்குந் தடையில்லை அரசே யென்பார்**
**அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி**

**மகான் கொங்கண மகரிஷி அருளிய கவியின் சாரம்:**

மனித வர்க்கத்தில் ஒரு சிலர் நெறியுடன் வாழ்ந்தும், பக்தி செலுத்தியும் வருவார்கள். நோக்கம், கடவுளை அடைய வேண்டும் என்பதற்காக. கடவுளை அடைய வேண்டும என்றால் உண்மை பொருளை அறிந்தவர்களுடைய ஆசி வேண்டும். ஆசி இல்லாமல் நாம் என்ன முயன்றாலும் விடுபேறு அடைய முடியாது.

விடுபேறு அடைய விரும்புகின்றவர்கள், மகான் கொங்கண மகரிஷி அருளிய கடைக்காண்டம் 500ல் எழுபத்தாறாம் கவியான அகத்திய மாரிஷி நமா என்றென்று நாமஜெபம் செய்ய வேண்டும் என்றும், அப்படி நாமஜெபம் செய்து வந்தால் ஆசான் அகத்தீசர் அவர்கள் நமது உணர்வோடும் உணர்ச்சியோடும் நாடி நரம்புகளில் ஊடுருவி, தேக கசடை நீக்கி அஷ்டமா சித்தியையும் தருவார். அதுமட்டுமல்ல குளிகை என்று சொல்லப்பட்ட வாசியையும் நடத்தி வருவார். மேலும், மலமாயையும், மனமாயையும் மற்றும் தேகபந்த பாசத்தையும் நீக்கி, நமக்கு அகத்தீசன் காவி உடை தருவார். ஆசான் அகத்தீசர் காவி உடை தந்தால் அதற்கு பிறகு ஆசான் அகத்தீசர் ஆசிபெற்ற எண்ணிலடங்கா ஞானிகள் நமக்கு உற்ற துணையாக இருந்து அருள் செய்வார்கள்.

எனவே, அகத்தீசனை திருவடியை உருகி தியானம் செய்து வந்தால், யாராலும் அடைய முடியாத மேற்கதி அடையலாம். அகத்தீசனை பூஜை செய்து வருகின்ற மக்களுக்கு எந்த தடைகளும் இருக்க முடியாது. அவர் ராஜயோகம் பெற்ற பெருமை கொள்வார். ஆசான் அகத்தீசர், சுப்ரமணியர் என்று சொல்லப்பட்ட மூலக்கனலில் தோன்றியவராவார்.

எனவே, அகத்தீசரை பூஜை செய்து வருகின்ற அன்பர்களுக்கு ஆயிரத்தெட்டு அண்டத்திலுள்ள தேவர்களெல்லாம் கைகட்டி சேவை செய்வார்கள். ஆகவே ஆசான் அகத்தீசன் பெருமைக்கு ஈடு இவ்வுலகில் இல்லை. எனவே ஆசான் அகத்தீசனை பூஜிப்போம்! எல்லா நலமும் வளமும் பெற்று இன்புற்று வாழ்வோம்!!.

**ஐயனே போற்றி போற்றி அருள்பெற்ற தேவே போற்றி**
**மெய்யனே போற்றி போற்றி மெய்சுடர் அணிந்தாய் போற்றி**
**கையனே போற்றி போற்றி காசினி முனிவா போற்றி**
**உய்யனே எனையாட் கொண்ட உந்தியில் உதிக்குந்தேவே**
**உந்தியிலுதிக்குந்தேவே ஒருபொருள் உகந்தாய் போற்றி**
**சிந்தையில் நினைந்த போதே திருநட மிட்டாய் போற்றி**
**வந்தித்தேன் உந்தன் பாதம் வானமுந் திறந்தாய் போற்றி**
**அந்தித்தேன் குருவே ஐயா அடியினைப் போற்றி போற்றி**

**மகான் புலத்தியர் – 3.**

**போற்றென்ற அடியேன் உள்ளம் பூரண மதுவும் காட்டி**
**சாற்றென்று யோக ஞானம் சாதனம் அதுவுங்காட்டி**

சரணத்தில் விழுந்தேன் கோவே சச்சிதானந்த மூர்த்தி
சரணத்தில் முன்ன மின்னம் தானது கருக்களன்னக்
கரணத்தில் வழலை தானுங் கபாலத்தில் ஒழிந்து போக
அரணத்தில் உதித்த பாதம் அறுசுவை ஒழித்துப்போடே

மகான் புலத்தியர் – 4.

குருவடி பொற்றாள் சரண்சரணம் கும்பமுனியே சரண்சரணம்
திருவடி நாதா சரண்சரணம் சித்தர்களின் அருளே சரண்சரணம்
அருள்வடி வானாய் சரண்சரணம் அமரர்கள் கோவே சரண்சரணம்
பொருளடி மூலங் காட்டிற்று போதித்த குருவே சரண்சரணம்
போதித்த குருவே சரண்சரணம் பொதிகை வளர்அம்பலர் சரணம்
வேதித்தெனையே ஆட்கொண்ட விமலா சரணம் மெய்ஞ்ஞானம்
சாதித்த தேவே சரண்சரணம் சமுசயந்தீர்த்தாய் சரண்சரணம்
ஓதித்தருவாய் சரண்சரணம் உண்மைப்பொருளே சரண்சரணம்.

மகான் புலத்தியர் – 5.

லபிக்கவழி(சித்திக்க வழி) சொல்லுகிறேன் ஆத்தாளே நந்திதிருமூலரையும்
லபிக்கக்காளாங்கியையும் ஆத்தாளே நாதாந்தபோகரையும்
சத்திசிதம்பரமும் ஆத்தாளே சட்டமுனி பூசைசெய்வாய்
உத்தமக்கொங்கணரை ஆத்தாளே உசிதமாய் பூசைசெய்வாய்
கருவூரார் ஆனந்தர் ஆத்தாளே கண்டு வழிதெரிந்தோர்
ஒருநெறியாய் இவர்களையும் ஆத்தாளே உண்மையுடன் பூசைசெய்தால்
சண்டாளன் ஆனாலும் ஆத்தாளே தான் வேதைகாண்பானே
கண்டசேதி சொன்னேன் நான் ஆத்தாளே.

மகான் அழுகண்ணர் – 6.

அகத்தியரே பெரும்பேற்றை அடைந்தோர் ஆவார்
    அம்மம்மா வெகுதெளிவு அவர் வாக்குத்தான்
அகத்தில் உறைபொருள் எல்லாம் வெளியாய்ச் சொல்வார்
    அவர்வாக்கு செவி கேட்க அருமையாகும்
அகத்தியரின் பொதிகையே மேருவாகும்
    அம்மலையும் அகத்தியரின் மலையுமாகும்
அகத்தியரின் அடையாளம் பொதிகைமேரு
    அவர்மனது அவரைப்போல் பெரியார் உண்டோ.

மகான் காகபுஜண்டர் – 7.

**மகான் காகபுஜண்ட மகரிஷி அருளிய கவியின் சாரம்:**

உலத்தில் தன்னை அறிந்து தம்முள் இருக்கும் அரும்பொருளாகிய பரம்பொருளை தவமுயற்சியால் தட்டி எழுப்பியவர்கள்தான் ஞானிகளாவர். அந்த வரிசையில் காகபுஜண்டர் என்று சொல்லப்பட்ட ஞானியே மிக உயர்ந்தவர் ஆவார். அவர் பலகோடி யுகங்கள் வாழ்கின்றவர். யுகம் முடியும் காலத்தில் காக்கை வடிவாக உருமாறி, மீண்டும் உலகத்தில் உயிரினங்கள் தோன்றும்போது மக்களுக்கு மக்களானவர்களுக்கு மனமிரங்கி உபதேசிப்பார்.

இவரும் ஆசான் அகத்தீசருடைய சீடராவார். ஆசான் அகத்தீசருக்கு எண்ணிலடங்கா ஞானிகள் சீடர்கள் ஆவர்.

அகத்தீசன் பெருமையை கணக்கிட்டு சொல்வதற்கு யாராலும் முடியாது. ஆசான் புஜண்ட மகரிஷி அவர்கள் காகபுஜண்டர் காவியம் ஆயிரத்தில் "அகத்தியரே பெரும்பேற்றை அடைந்தோர் ஆவார்" என்று முதல் வரியில் சொல்லியுள்ளார்.

ஆசான் அகத்தீசர் அவர்கள் அரும்பெரும் தவம் செய்தவர். அவரை காலையில் பத்து நிமிடம், "ஓம் அகத்தீசாய நம" என்றும், மாலையில் அதேபோல் பத்து நிமிடம் நாமஜெபம் செய்து வந்தால் அவர் பெற்ற பெரும் அருளை நமக்கு வழங்குவார். அவருடைய பாடல்கள் அத்தனையும் சாதாரண கல்வி கற்றவரும், எளிதில் படிக்கக்கூடிய முறையில் மிக ஆழமான கருத்துக்களை எளிய முறையில் பாடியுள்ளார். ஞானம் என்பது இன்னதென்று சொல்லமுடியாத ஒரு ரகசியம் ஆகும். அந்த ரகசியங்களை எவ்வாறு சொன்னால் வருங்கால தொண்டர்கள் உணர முடியுமோ? அதற்கேற்றாற்போல் வெளியாக பாடியுள்ளார். மேலும், அவர் பாடல் கேட்பதற்கு இனிமை உடையதாகவும் இருக்கும். அவர் தவம் செய்து தங்கிய இடம், பொதிகை மலை என்ற மேருவாகும். பொதிகை மலைக்கு அரசனும் அவரே ஆவார். அவருடைய கருணையே மேருமலைக்கு ஒப்பாகும். அவர் கருணையால்தான் இதற்குமுன் பலகோடி ஞானிகளும் கடவுள்தன்மை அடைந்துள்ளார்கள். மேலும், வருங்காலத்திலும் பலகோடி மானுடர்கள் பாவத்திலிருந்து விடுபட்டு கடவுள்தன்மை அடைய இருக்கிறார்கள். எனவே, அகத்தீசன் நாமத்தை சொன்னால் நவகோடி சித்தர்களும் நமக்கு உற்ற துணையாக இருந்து மலமாயையும், மனமாயையும், பந்த பாசத்தையும் நீக்கி என்றும் அழியாத பேரின்ப வாழ்வு தருவார்கள்.

நாம் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான வேதங்களையும் மற்றும் நூல்களையும் படித்தபோதிலும் அதிலுள்ள நுட்பங்கள் நமக்கு புரியாது. ஆனால் "ஓம் அகத்தீசாய நம" என்று நாம நாமஜெபம் செய்தால் எல்லா நூல்களையும் படித்து அறிய முடியாத ஞான ரகசியங்களை நாமே அறிந்து உய்ய முடியும்.

ஒருசிலர் பல சாஸ்திரங்களை படித்துபடித்து முதுமை வந்து இறந்து போனாரே தவிர ஒரு கடுகளவும் உண்மை தெரிந்துகொள்ளவில்லை. காரணம், ஆசான் திருவடியை பூஜைசெய்துபூஜைசெய்து ஆசி பெறவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு தோன்றுவதில்லை. ஞானவாழ்வு என்பது குரு அருளால்தான் கைகூடும் என்று புண்ணியவான்களுக்கு மட்டுமே புலப்படுவதாகும். நல்வினை இருந்தால்தான் குருவருள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பார்கள். புண்ணிய பலம் இல்லாத கசடர்கள் தம்தம் திறமை கொண்டு முன்னேற முயற்சிப்பார்கள். இவர்களெல்லாம் களம் சார்ந்த பதராகும். அவர்களிடம் உண்மையை உணர்ந்தவர்கள் சொன்னாலும் யார் உபதேசமும் எனக்கு தேவையில்லை, எனக்கு கல்வி உள்ளது நானே படித்து தெரிந்து கொள்வேன் என்பார்கள். இவர்கள்தான் நடமாடும் சவமாகும்.

அகத்தியர் சன்மார்க்க சங்கத்தார்கள் மட்டும்தான், குருவருள் ஒன்றுதான் ஜென்மத்தை கடைத்தேற்ற முடியும் என்று உறுதியாக நம்பி தினமும் ஆசான் அகத்தீசனை பூஜை செய்து வருகிறார்கள்.

மகான் காகபுஜண்டர் உலகமக்கள்பால் கருணை கொண்டு மேற்கண்ட பாடலை அருளியுள்ளார். வருங்கால ஆன்மிக தொண்டர்களுக்கு இந்த பாடலே உபதேசமாகும். எனவே அகத்தீசனை பூஜித்து ஆசிபெற்று கொள்வோம்! பெரும்பேற்றை பெற்று பேரின்பம் பெறுவோம்!!.

காப்பான கருவூரார் போகநாதர்
   கருணையுள்ள அகத்திசர் சட்டைநாதர்
மூப்பான கொங்கணரும் பிரம்மசித்தர்
   முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்
கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்
   கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
வாப்பான வாதத்திற்கு ஆதியான
   வாசமுனி கமலமுனி காப்புத்தானே.

மகான் ரோமரிஷி – 8.

நெஞ்சார நினைப்பவர்க்கு நிழல் ஆவானை
   நீங்காதார் குலம் தழைக்க நிதியாவானைச்
செஞ்சாலி வயற்பொழில்சூழ் தில்லை மூதூர்ச்
   சிலம்பொலி போல் பாடுகின்ற சித்தன் தன்னை
வெஞ்சாபமுமில்லை ஒரு வினையுமில்லை
   வேலுண்டு துணைவருங்கால் வெற்றியுண்டாம்
அஞ்சாதீர் என்று யுகயுகத்தும் தோன்றும்
   அகத்தியனை அருட்குருவை அகத்துள் வைப்பாம்.

தனிப்பாடல் – 9.

போடுவது திலதமடா மூலர் மைந்தர்
   போகர் கருவூராரைத் தியானம் பண்ணு
நாடுநகர தனிலுள்ள ஜீவசெந்து
   நாதாக்கள் சித்தருக்கும் தோணாதையா
ஏடுதனில் எழுதினதோர் பாடல் என்று
   எண்ணாதே ஒருநாளும் தப்போ இல்லை
தேடினபேர் பொருள்கோடி தனமீந்தாலும்
   செப்பாதே இக்கருவை(ரகசியத்தை) உலகத்தோர்க்கே.

மகான் சட்டைமுனிநாதர் – 10.

குருபோக நாதரைத்தான் கூறுடன் பூஜைசெய்து
   குருமூலர் சட்டடைநாதர் கொங்கணர் காலாங்கி பாதம்
குருவென்று பூஜை செய்து கூறும் இச்சுவடி வைத்து
   குருவென்று பதம் பணிந்தோர் கூறுடன் வேதைகாண்பார்
ஆமப்பா யுத்தி சொன்னேன் அழிபுத்தி சொல்லவில்லை
   ஆமப்பா வேதைகண்டால் கற்பத்தை அதன்பின்கொள்ளு
ஆமப்பா சித்தியாகும் அன்புடன் செய்து பாரு
   ஆமப்பா குருவைக்காணு அன்புடன் சொல்லினேனே.

–மகான் கருவூர் முனிவர் –11

**மகான் கருவூர் முனிவர் அருளிய கவியின் சாரம் :**

சித்தர்கள் அத்தனைபேரும் ஒரே தன்மையுடையவர்கள் ஆவார்கள். இவர்கள் ஆசான் அகத்தீசன் திருவடியை பூஜை செய்தவர்கள் ஆவார்கள். அகத்தீசனை பூஜைசெய்ய பூஜைசெய்யதான் உடம்பையும் உயிரையும் பற்றி அறிந்துகொள்ள முடியும். உயிரின் இயக்கமே

மூச்சுக்காற்று நாள் ஒன்றுக்கு 21,600 முறை வந்து போவதாகும். இந்த காற்றை ஞானிகள் என்ன செய்கின்றார்கள் என்றால், ஆசான் அகத்தீசன் ஆசியால் ரேசகம், பூரகம், கும்பகம் ஆகிய இயக்கத்தை அறிந்து ஆசான் திருவடியை உருகி தியானிக்கின்றார்கள். என்னதான் மூச்சுக்காற்றை பற்றி அறிந்திருந்தாலும், சுழிமுனையில் வாசியை செலுத்த முடியாது. அகத்தீசன்தான் அவரவர் பக்குவத்தை அறிந்து வாசியோடு வாசியாக கலந்து வாசி நடத்தி தருவார் (மூச்சுக்காற்றை இயக்கச் செய்வார்). அவர் வாசி நடத்தாமல் நாமே முயன்றால் கொடிய நோய்வாய்ப்பட்டு இறந்து விடுவோம்.

எனவே, எல்லா ஞானிகளும், ஆசான் அகத்தீசனை பூஜை செய்து பூஜை செய்து ஆசி பெற்றதால்தான் மரணமில்லா பெருவாழ்வு பெற்றுள்ளார்கள். அந்த வரிசையில் போகமகாரிஷி, திருமூலதேவர், சட்டை முனிவர், கொங்கணர், காலாங்கிநாதர் ஆக ஐவரும் ஆசான் அகத்தீசரை பூஜை செய்து ஆசி பெற்றதால்தான் அளவிலா சித்தி பெற்றுள்ளார்கள்.

இவர்கள் பெருமையை கருவூர் முனிவர் அவர்கள், நன்கு உணர்ந்து தம் நூலில் அவர்களை புகழ்ந்து பாடியுள்ளார். நாமும் கருவூர் முனிவர் நூலை படித்தும், பூஜித்தும் ஆசிபெற்றால் பலகோடி ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கி ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்ளலாம்.

கருவூர் முனிவரும் ஆசான் அகத்தீசர் ஆசி பெற்றவர்தான். எந்த ஞானிகளை நாம் பூஜை செய்தாலும், எல்லா பூஜையும் ஆசான் அகத்தீசன் திருவடியையே சாரும். எனவே மேற்கண்ட ஐந்து ஞானிகளையும் மற்றும் கருவூர் முனிவரையும், அகத்தீசரையும் பூஜித்து ஆசிபெற்றுக் கொள்வோம்.

இந்த உபதேசம் கருவூர் முனிவர் சொன்னதாகும். இதை நல்மனதுடன் சொல்கின்றேன் என்றும், இதை நீங்கள் பின்பற்றினால் ஞானம் பெறலாம் என்றும் சொல்லியுள்ளார். நாமும் கருவூர் முனிவர் நற்கருணையுடன் சொன்னதை பின்பற்றி ஞானிகளை பூஜிப்போம்! நலம் பெற்று வாழ்வோம்!!.

**தான் என்ற கொடும்பாவம் தீர்க்கும் ஆசான்**
**தர்மத்தின் வழிசொல்லிக் கருணை வைப்பான்**
**ஊன் என்ற மந்திரமே உபதேசித்து**
**உண்மையுடன் சுழிமுனையிலே இருக்கும் என்று**
**கோன் என்ற சிவரூபம் கண்ணில் காட்டி**
**கோபமென்ற முனைபோக்கி ஆசை போக்கி**
**நான் என்ற ஆணவங்கள் தன்னைப்போக்கி**
**நாட்டுவார் குருநாதன் மோட்சந் தானே.**

**மகான் கொங்கண மகரிஷி – 12.**

**மகான் கொங்கண மகரிஷி அருளிய கவியின் சாரம் :**

மனிதன் எண்ணிலடங்கா பிறவிகள் எடுத்துள்ளான். ஆறுகளில் உள்ள மணல்களை எண்ணி கணக்கிட்டாலும், நமது பிறவியை கணக்கெடுக்க முடியாது. இத்தனை பிறவிகளிலும் காமத்தாலும், பொருள் வெறியாலும், ஜாதி வெறியாலும், மத வெறியாலும், நான் என்ற கர்வத்தாலும், தனக்குள்ள ஆள்படையாலும், கல்வி கற்றோம் என்ற கர்வத்தாலும், உத்யோக பெருமிதத்தாலும் அடாது பாவங்கள் செய்திருப்போம். இந்த பாவங்கள்தான் அறிவை மங்க செய்துவிடும். அதன் காரணமாக பாவம் எது? புண்ணியம் எது? என்று உணர முடியாது. அப்படியே அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் சொன்னாலும் நமது பாவத்தின் காரணமாக உணர முடியாது. மூர்க்கத்தனமே மிஞ்சி இருக்கும். இதுபோன்ற கொடுமைகள்

எல்லாம் பல ஜென்மங்களில் செய்திருந்தாலும், ஆசான் அகத்தீசன் திருவடியை நம்பி தொடர்ந்து பூஜை செய்து வந்தால் பாவம் எது? புண்ணியம் எது? என்று உணர்த்துவார்கள்.

ஒரு மனிதன் பாவியாவதற்கு காரணம், மனைவியினுடைய இயல்பை அறியாமல் அவள்மீது சந்தேகப்படுதலும், அடிமைபோல் எண்ணி அடித்தலும், கொடுமையாக பேசுதலும், மேலும், கல்வி அறிவு இருப்பதால் உடன் பிறந்தவர்களின் சொத்தை அபகரித்தலும், மேலும் தாய் தந்தை நமக்கு செய்த உதவிகளை நன்றி மறந்துவிடுவதும், மேலும் நம்மிடம் வேலை செய்கிறவர்களுக்கு நியாயமான கூலி கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமையும், பொருள் சேர்க்கும் பொழுது மற்றவர்கள் சொத்தை அபகரித்து கொள்ள வேண்டும் என்ற அறியாமையும்தான் பாவம் சேர்வதற்கு காரணங்கள் ஆகும். மேற்கண்ட பாவங்களைப் பற்றி ஆசான் அகத்தீசர் உணர்த்தியும், மேலும் பாவங்கள் செய்யாமல் இருப்பதற்குரிய பரிபக்குவத்தையும் ஆசான் நமக்கு அருள்செய்வார்.

மேலும், உடம்புதான் ஞானவீடு என்றும், இந்த உடம்பாகிய வீட்டை அறிந்து வீட்டை உறுதிபடுத்தி கொள்ளவும் ஆசான் அகத்தீசர் உபதேசிப்பார். அவர் உபதேசித்தபின் இந்த உடம்பில் பாவமும் புண்ணியமும் சேர்ந்தே அமைந்துள்ளது என்பதை உணர முடியும். மேலும், பாவமாகிய மும்மல தேகத்தை நீத்து புண்ணியமாகிய ஒளி உடம்பு பெற அருள்செய்வார். புண்ணிய உடம்பு பெறுவதற்கு இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய இயல்பை அறிந்து சுழிமுனையில் வாசி செலுத்தினால் அது ஓங்கார ரீங்காரமாக ஓசை உண்டுபண்ணி தசநாதமாக பின்பு விரிவடையும். மேலும், அமிழ்தமும் சிந்தும், ஜோதியும் தோன்றும். ஆசானே நம்முன் தோன்றி அருள்செய்வார். அதுமட்டுமல்ல கோபத்தால்தான் பல பிறவிகளில் பாவம் வந்தது என்று அறிந்து அந்த கோபத்தின் முனையையும் மழுங்கச்செய்துவிடுவார். அதுமட்டுமல்ல ஆசைதான் பிறவிக்கு காரணம் என்பதை அறிந்து மூலக்கனலை எழுப்பச் செய்து அந்த ஆசைகளை வேரோடு எரித்துவிடுவார். மேலும், கொடூரமான எண்ணங்கள் நீங்கி சாந்தம் உண்டாகும்.

எனவே, ஆசான் அகத்தீசரை தினமும் "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்து வந்தால் முன்செய்த பாவங்களும் தீரும். ஊனாகிய உடம்பைப்பற்றி அறிகின்ற அறிவும் வரும். சுழிமுனையாகிய இரகசியமும் தெரியும். சிவவடிவாக உள்ள அகத்தீசன் நம்முன் தோன்றி காட்சி தருவார். மூர்க்கத்தனம் நீங்கி சாந்தம் உண்டாகும். இதுவ மேற்கண்ட பாடலின் சாரமாகும்.

**திறமான கொங்கணர் போல் ஆருமில்லை**
**செகத்திலே இப்படித்தான் உண்டோபிள்ளை**
**உறமான செய்திஎல்லாம் பார்த்து வந்தார்**
**ஒவ்வொரு நாளாக யிருக்க முத்தி**
**அறமான தவஞ்செய்தார் சட்டமுனி மெய்க்க**
**அவர்பிதா போகர்மெய்க்க காலாங்கி மெய்க்க**
**திறமான திருமூலத்தேவர் மெய்க்க**
**நித்திரைப்போல் மூன்று கற்பஞ் சமாதிகாணே.**

**மகான் அகத்திய மகரிஷி அருளிய கவியின் சாரம்**

சித்தர்களிலே உருகி தியானிப்பவர்கள் ஒருசிலரே. அந்த சிலரில் கொங்கண மகரிஷியே உருகி தியானிப்பதில் மிக வல்லவர் ஆவார். உருகி தியானிக்க தியானிக்கத்தான் பாவங்கள் நீங்கும், புண்ணியம் பெருகும், சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவினால்தான் உடம்பை பற்றி அறிகின்ற அறிவு வரும். உடம்பு என்று சொல்லப்பட்டது தூலமும் (நரகம்), சூட்சுமமும்(சொர்க்கம்) பொருந்தியதாகும். தூல தேகத்தின் துணை கொண்டுதான் சூட்சும தேகத்தை ஆக்கம்பெற செய்ய முடியும் என்பதை ஆசான் கொங்கணமகரிஷி நெக்குருக பூஜை செய்ததால் தெரிந்து கொண்டார். அவருடைய பூஜைக்கு இறங்கி அருள் செய்யாத ஞானிகளே இல்லை என்று சொல்லலாம்.

புஜண்ட மகரிஷி, சட்டை முனி, போகர், காலாங்கிநாதர், திருமூலர், நந்தீசர், ஞானபண்டிதரான சுப்ரமணியர், கோரக்கர், பிருகு மகரிஷி, பிரம்ம முனிவர், தன்வந்திரி, சிவயோகமாமுனி, ரோமரிஷி, வியாக்ரமர், பதஞ்சலியார் போன்ற மகான்களும் ஆசான் கொங்கண மகரிஷியை மகிழ்ந்து ஆசி தந்துள்ளார்கள். ஆகவே கொங்கண மகரிஷியை தினமும் "**ஓம் கொங்கணேஷ்வராய நம**" என்று நாமஜெபம் செய்தால் ஒன்பது கோடி சித்தர்களும் உனக்கு என்ன வேண்டும்? என்ன வேண்டும்? என்று கேட்டு வேண்டிய அனைத்தும் நமக்கு தருவார்கள். மேலும், நாம் செய்த பாவங்களையும் நீக்குவார்கள். ஞானமும் தருவார்கள், மரணமிலா பெருவாழ்வும் தருவார்கள். ஆசான் கொங்கண மகரிஷியை பூஜிப்போம்! ஆசிபெற்று வாழ்வோம்!!.

**குறிப்பு –1 :** நித்திரை போல் மூன்று கற்பம் என்பது சம்பை சரக்காகிய மூலிகைகள். அதாவது சிவகரந்தை, சத்தி சாரணி வேர், வல்லாரை சூரணம் ஆகிய இவைகளே முதல் கற்பமாகும். அடுத்து பச்சரிசி, பாசிப்பயறு, பசும்பால், பசு நெய், பழங்கள், சர்க்கரை இவை இரண்டாம் கற்பமாகும். மூலக்கனல் தோன்றுவதால் உச்சிக்கு கீழ், உண்ணாவிற்கு மேல் அமிழ்தபானம் சிந்தும். இது மூன்றாவது கற்பமாகும்.

இந்த மூன்றும் ஆசான் ஆசியில்லாமல் அணு அளவும் சித்திக்காது. ஆசான் சொல்லாமல் நாமாக மூலிகைகளையும், வேர்களையும், உப்பில்லா உணவுகளையும், வேறு வேறு வகையான கற்பங்களையும் உண்டால் நோய்தான் வருமே தவிர சித்தி பெற முடியாது. ஆகவே கொங்கண மகரிஷி துன்பமில்லாமல் இந்த மூவகை கற்பங்களையும் அறிந்து சமாதியாகிய ஞானசித்தியை பெற்றார். எனவே ஆசான் கொங்கண மகரிஷியை பூஜித்து ஞானம் பெறுவோம்!.

**குறிப்பு –2 :** கொங்கண மகரிஷியை பூஜித்தால், இறை வழிபாடு என்ற பெயரில் ஆடு, கோழி, பன்றி, கடா இவைகளைக் கொல்லுவதால் பாவம்தான் சூழுமே தவிர வேறு எந்தவித பயனும் ஏற்படாது என்பதை உணரலாம். அலகு குத்திக்கொள்ளுதல், அங்கம் புரளுதல், பால் குடம் எடுத்தல். முடி எடுத்தல், காவடி எடுத்தல், புனித நீராடுதல் போன்ற சடங்குகள் எல்லாம் மனமகிழ்ச்சியை உண்டுபண்ணுமே தவிர பிறவிப் பிணிக்கு மருந்தாகாது என்பது பெரியோர் கருத்து. பிறவிப் பிணியை நீக்கவேண்டும் என்றால் ஏழை எளிய மக்களுக்கு பசியாற்றி வைப்பதாலும், மனைவி மக்கள் சார்ந்தவர்கள் இவர்களிடம் பக்குமாக நடந்துகொள்ளுவதாலும் மேலும் வேலையாட்கள் நண்பர்கள் இவர்களை மதித்து நடப்பதாலும், விருந்தை உபசரிப்பதாலும், புலால் உணவை மறுத்தலும், திருமந்திரம், திருவருட்பா, திருக்குறள், திருவாசகம் போன்ற அறநூல்களைப் படிப்பதலும், ஞானிகளை தினம் பூஜை செய்தலும் ஆகியவைகளே பிறவிப்பிணியை நீக்கி, மோட்ச லாபம் தரும்.

**கங்கையிலே காவிரியில் நூறுமுறை மூழ்கி**
**கணக்கற்ற திருக்கோயில் கால்தேய சுற்றி**
**வெங்கொடிய பலநோன்பு ஏற்றுடலை வருத்தி**
**வேதங்கள் கூறுகின்ற யாகமெல்லாம் செய்து**
**பங்கமிலா வேதியர்கை பணம்அள்ளி தந்து**
**பசுவதைப் பூசித்து அதன்கழிவை உண்டு**
**தங்களுயிர் மோட்சத்தை அடைவதற்கே முயலும்**
**தயவில்லார் சத்தியமாய் முத்தியதை யடையார்.**

**மகான் இராமலிங்க சுவாமிகள் – 14.**

மேற்கண்ட 14 பாடல்களிலும் ஞானிகளைப் பூஜைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஞானிகள் என்றாலே நல்வினை தீவினையை நீத்து, தம்முள்ளே அருட்பெருஞ்ஜோதியைக் கண்டவர்கள் ஆவார்கள். அவர்கள் ஆக்கல், அழித்தல், காத்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் செய்யும் வல்லவர்கள் ஆவார்கள்.

இவர்கள் திருவடியைப் பூஜிக்க வேண்டும் என்றால், புண்ணியம் செய்திருக்க வேண்டும் அல்லது உண்மைப் பொருள் அறிந்த ஆசானின் உபதேசம் பெற்றிருக்க வேண்டும்.

உலகத்தில் சிலர் சிறுதெய்வ வழிபாட்டில் ஈடுபட்டு, உயிர்பலி கொடுத்தலும், சிறுதெய்வங்களுக்கு கோவில் கட்டியும், கும்பாபிஷேகம் செய்தும் மற்றும் வீண் ஆரவாரச் சடங்குகள் செய்தும் இந்த அரிய மானுடப் பிறவியை பயனற்றதாக்கிக் கொள்கிறார்கள். விஷயம் தெரிந்தவர்களோ, முற்றுபெற்ற முனிவர்களை வணங்கினால்தான் நாம் செய்த பாவங்களைப் போக்கிக்கொள்ள முடியும் என்றும், பாவங்கள்தான் அறியாமையை உண்டுபண்ணும் என்றும், ஞானிகளைப் பூஜை செய்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்கிறார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ள வேண்டும் என்றால் மேற்கண்ட பாடல்களில் உள்ள ஞானிகளை குருவாக ஏற்று, தினமும் உருகி நாமஜெபம் செய்ய வேண்டும். நாமஜெபம் செய்யசெய்யத்தான் சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு உள்ள மக்கள்தான் உடம்பைப் பற்றியும், உயிரைப்பற்றியும் அறிந்து உடல் மாசையும் உயிரைப்பற்றிய மாசையும் நீக்கிக்கொள்கிறார்கள். நீக்கிக் கொண்டவர்கள்தான் தம்முள் அருட்பெருஞ்ஜோதியைக் கண்டு அளவில்லாப் பேரானந்தம் அடைகிறார்கள்.

இவர்கள்தான் கோடிக்கணக்கான யுகங்கள் வாழ்கின்றவர்கள் ஆவார்கள். இவர்கள் பெருமையைக் கணக்கிட்டுச் சொல்ல இதுவரையிலும் யாரும் பிறந்ததில்லை. இனி யாரும் பிறக்கப்போவதும் இல்லை.

எனவே, ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் காட்டுகின்ற மார்க்கம் மிகச் சிறந்ததாகும். இதை ஆன்மீக அன்பர்கள் அறிந்து கொண்டு, பின்பற்றி ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

எடுத்துக்காட்டு :

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

**நீத்தார் பெருமை குறள் – 22.**

சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு ஒன்றில்லை
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு காட்டும்
**குருவை வழிபடின் கூடலும் ஆமே.**

**–திருமந்திரம் கவி 2119**

குறிப்பு : மேற்கண்ட ஞானிகளின் பாடல்கள் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க, மகான் புஜண்ட மகரிஷி மண்டபத்தில் வரவேற்பு மண்டபத்தின் இரு பகுதிகளிலும் எழுதப்பட்டுள்ளன.

**அகத்தியர் துணை**

## ஆசான் அகத்தீசன் சுவடி மூலம் அருளிய கொடி வணக்கம்

வல்லமையே செந்நிறத்தின் கொடியே போற்றி
வஞ்சகத்தை அழித்திடுமோர் குணமே போற்றி
நல்வாழ்வை நிலைநாட்டி தீதழித்து
நன்னெறியை விளக்கிடுமோர் நிறமே போற்றி

நிறவெறியை அழித்திடுமோர் நெஞ்சே போற்றி
நேர்மைமிகு செயல்புரிந்து குருதிவெள்ளம்
சிறப்பாக நடைபெற செய்வாய் போற்றி
செல்வமுடன் வாழவைக்கும் பசுமைபோற்றி

பசுமையதின் வளர்ச்சிநிற கொடியே போற்றி
பலதேசம் வாழ்ந்திடவும் வகையும்செய்து
நிசமான உயர்வளிக்கும் நிறமே போற்றி
நிறமதற்கும் ஏற்றவார் பணிவே போற்றி

பணிவுடனே சுபவிசேடம் மஞ்சள் போற்றி
பாக்கியங்கள் தந்திடுமோர் நிறமே போற்றி
துணிவுமிகு நற்காரியம் செய்யவல்ல
துயர்நீக்கும் மங்களத்தின் நிறமே போற்றி

போற்றியே புவிமாந்தர் வாழ்ந்தபின்னும்
புகழ்கீர்த்தி தொடக்கமுதல் கடைநாள் மட்டும்
ஏற்றமிகு ஒற்றுமையே சமாதானம்
ஏற்படுத்தும் வெண்நிறத்தின் ஒளியே போற்றி

ஒளிநிறத்தின் அடையாளம் ஞானமோட்சம்
உயர்வாழ்வை அளித்திடுநல் வெண்மை போற்றி
பளிச்சிட்டு பரவெளியில் சூட்சம்தன்னை
பார்அறியும் சோதியாம் போற்றிபோற்றி.

அகத்தியர் துணை

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

**திருமந்திரம் – 1598.**

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மிகம் என்று உலகறியச் செய்யும் வள்ளல்,
பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** தொகுத்து வழங்கிய

## சித்தர்கள் போற்றித்தொகுப்பு

ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி
ஓம் அகப்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் அசுவினித்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் அத்திரிமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் அநுமான் திருவடிகள் போற்றி
ஓம் அம்பிகானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் அருணகிரிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் அருள்நந்தி சிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் அல்லமாபிரபு திருவடிகள் போற்றி
ஓம் அழுகண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி 10

ஓம் இடைக்காடர் திருவடிகள் போற்றி
ஓம் இராமலிங்க சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் இராமதேவர் திருவடிகள் போற்றி
ஓம் இராமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் உமாபதி சிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் ஔவையார் திருவடிகள் போற்றி
ஓம் கஞ்சமலைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடைப்பிள்ளைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடுவெளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கண்ணானந்தர் திருவடிகள் போற்றி 20

ஓம் கண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கனநாதர் திருவடிகள் போற்றி
ஓம் கணபதிதாசர் திருவடிகள் போற்றி
ஓம் கதம்பமகரிஷி திருவடிகள் போற்றி

ஓம் கமலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் கல்லுளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கலைக்கோட்டு முனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கவுபாலச்சித்தர் திருவடிகள் போற்றி 30

ஓம் கனராமர் திருவடிகள் போற்றி
ஓம் காகபுஜண்டர் திருவடிகள் போற்றி
ஓம் காசிபர் திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் குகை நமச்சிவாயர் திருவடிகள் போற்றி
ஓம் குதம்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் குமரகுருபரர் திருவடிகள் போற்றி
ஓம் குருதட்சணாமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் குருராஜர் திருவடிகள் போற்றி
ஓம் குறும்பைச்சித்தர் திருவடிகள் போற்றி 40

ஓம் கூர்மானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் கௌசிகர் திருவடிகள் போற்றி
ஓம் கௌதமர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கமுனிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கர மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் சங்கிலிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சச்சிதானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டநாதர் திருவடிகள் போற்றி 50

ஓம் சண்டிகேசர் திருவடிகள் போற்றி
ஓம் சத்யானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சிவயோகமாமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி
ஓம் சிவானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுகபிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60

ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி

ஓம் ஜம்புமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70

ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகைதேவர் திருவடிகள் போற்றி 80

ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் தூர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் தேரையர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி
ஓம் நந்தீஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

ஓம் பத்ரகிரியார் திருவடிகள் போற்றி
ஓம் பதஞ்சலியார் திருவடிகள் போற்றி
ஓம் பரத்துவாசர் திருவடிகள் போற்றி
ஓம் பரமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் பராசரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பாம்பாட்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பிங்களமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் பிடிநாகீசர் திருவடிகள் போற்றி
ஓம் பிருகுமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பிரும்மமுனிவர் திருவடிகள் போற்றி 100

ஓம் பிர்முகமது திருவடிகள் போற்றி
ஓம் புண்ணாக்கீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலத்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலிப்பாணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பூனைக்கண்ணார் திருவடிகள் போற்றி
ஓம் போகமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் மச்சமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் மஸ்தான் திருவடிகள் போற்றி
ஓம் மயூரேசர் திருவடிகள் போற்றி
ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி 110

ஓம் மார்க்கண்டேயர் திருவடிகள் போற்றி
ஓம் மாலாங்கன் திருவடிகள் போற்றி
ஓம் மிருகண்டரிஷி திருவடிகள் போற்றி
ஓம் முத்தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் மெய்கண்டதேவர் திருவடிகள் போற்றி
ஓம் மௌனசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யாகோபு திருவடிகள் போற்றி
ஓம் யூகிமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் யோகச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யோகானந்தர் திருவடிகள் போற்றி 120

ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வசிஷ்டமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரதரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வராகிமிகி திருவடிகள் போற்றி
ஓம் வால்மீகி திருவடிகள் போற்றி
ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள் திருவடிகள் போற்றிபோற்றி

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே

## ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகள்

ஜீவ காருண்யமும்,
பசியாற்றுவித்தலும்,
கடவுள் அகத்தீசன்தான் என்று அறிந்து திருவடியை பூஜைசெய்தலுமே ஆகும்.

அகத்தியர் துணை

# ஆசான் கருவூரார் ஆசிகாண்டம்

28.03.1999 அன்று திருச்சி, செந்தண்ணீர்புரம் ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிட நிலையத்தில், துறையூர் துறவியார், குருநாதர், தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களுக்கு தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தை ஸ்தாபிக்க அருள்செய்த ஆசான் கருவூர் முனிவர் அருளிய அருள்வாக்கு.

இந்த நூலை பயபக்தியுடன் படித்தால் தொழில், விவசாயம் மற்றும் குடும்ப முன்னேற்றமும், பண்புள்ள புத்திர பாக்கியமும் அமைந்து வாழ்க்கையில் பல வெற்றி பெறுவார்கள். மேலும் ஞானமும் கைகூடும். இந்த அரியநூலை தினமும் பூஜித்து வருவது நல்லது.

## ஆசான் கருவூரார் ஆசிகாண்டம்

குருவாக விளங்கிட்ட கருவூரார் யான்
குருமுனியின் அவதார அரங்கருக்கு
அருவுருவாய் சுவடி வழி ஆசிபாகம்
அறிவிப்பேன் வெகுதானிய சேலின் திங்கள் (பங்குனி மாதம்) 1

திங்களிலே தெளிவுபெற ஆசியளிப்பேன்
தெளிவடைந்து உண்மைப்பொருள் மக்களுணர்ந்து
ஓங்கார ஆசான் உன்பதம் பணிந்து
உயர்ந் தோங்கி சென்மத்தை தேற்றிக்கொள்ள 2

தேற்றிடவே பரிபூரண ஆசி அளிப்பேன்
தவசித்தன் பரம்பொருளும் அரங்கர் ஆசான்
பற்றறுத்த மும்மலத்தை வென்றாரென்போம்
பாருலகில் யோக மார்க்கம் அறிந்த வேந்தன் 3

வேந்தனாம் சோழ நாட்டின் ராஜ ராஜன்
வேந்தனாகி வாழும்கால் அருளை பொழிந்தேன்
விந்தைபல புரியவல்லோன் அரங்க ராசன்
வேல் கொண்டு வினையகற்றும் சூட்சுமத்தோன் 4

சூட்சமத்தின் சூட்சுமத்தை அறிந்த யோகி
சுழிமுனையின் தத்துவமே அரங்க ராசன்
திட்டமுடன் தெளிவில்லா மாந்தர் யாவும்
தெளிவடைந்து அரங்கனவர் பதத்தை நாடி 5

நாடியே ஊழகற்றி பேரின்பம் தான் (முன் பாவங்கள் நீக்கி)
நானிலத்தில் அடைந்திட ஆசியளிப்பேன்
நாடியே தொண்டு செய்தோர் ஞானியாவார்
நலம் பெறவே அன்பர்கட்கும் தொண்டர்கட்கும் 6

தொண்டர்கட்கும் கருவூரார் என் ஆசியுண்டு
துயரில்லா வாழ்வு காண ஆசியளிப்பேன்
கண்டுமே அரங்கர் வழி செல்பவர்க்கு
கோடான கோடி பாவம் நீங்கும் 7

நீங்கியே சென்மம்தான் கடை தேறுமே
நவக்கோளும் விலகி நிற்கும் அரங்கர் ஆசி
ஓங்காரன் உரைத்திட்டால் ஏவல் செய்யும்
உலகத்தை மாற்றி வைக்கும் சக்தி அரங்கர் 8

சக்திதனை உணரவே மக்கள் தொண்டு
சர்வ நாளும் செய்துமே தெளிவீரய்யா
முக்திதனை அளிக்கவல்ல சக்தி அரங்கர்
முழுமுதல் பரம்பொருளாம் கல்கி அரங்கர் 9

கல்லையும் கனியாக மாற்றி வைப்பார்
கருவூரார் என்மைந்தன் அரங்கா வாழ்க
சொல்லனைத்தும் பலிக்குமப்பா உரைத்துவிட்டால்
சொல்லிவிட்டால் சித்தரெல்லாம் ஆசி அளிப்போம் 10

அளித்துமே மக்களுக்கு அமுது ஈவோம்
அருள் ஞானம் பொருளனைத்தும் அளிப்போமப்பா
தெளிவடைய உன் அருளும் வேண்டுமப்பா
தொண்டுதனை செய்தவர்க்கே ஞானம் கிட்டும் 11

**கிட்டிடும் ஞானமே இதை படிப்பவர்க்கும்**
கவி உணர்ந்து உன் அருளை நாடி நின்றால்
கேட்டதோர் வரமனைத்தும் கிடைக்குமப்பா
**கருவூரார் ஆசியுண்டு மக்களுக்கு** 12

மக்களும் தெளிவடைய ஆசி தந்தேன்
மகானாவார் மலேய நாட்டு அன்பர் யாவும்
முக்தியுண்டு தொண்டர்கட்கும் மோட்சம் தானே
முழுமைபெற பிறவிதனை அறுத்து நிற்பார் 13

பிறவிப் பெருங்கடலை நீந்தி வாழ்வார்
பேதமிலா நெஞ்சத்தோடு குடிலில் தொண்டு
தரணியிலே செய்பவர்க்கு ஞானம் உண்டே
தசவாசல் ஆசானும் திறந்து விட்டால் 14

திறந்துவிட்டால் அருள்மழைதான் பூமி எங்கும்
தவம் செய்த சக்திதனை தொண்டர் அடைந்து
திறந்துமே தெளிவடையும் சூட்சா சூட்சுமம்
தரங்கையதில் கருவூரார் ஆசி தந்தேன் 15

ஆசியுண்டு அறிகின்ற அன்பர்கட்கும்
அரங்கர்தனை வாழ்த்தியே மகிழ்வோம் நாங்கள்
ஆசியுண்டே கருவூரார் மகிழ்ந்தளித்தேன்
ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 16

**சுபம்**

அகத்தியர் துணை

## மகான் ரோமரிஷி ஆசிகாண்டம்

16.06.1999 அன்று திருச்சி சங்கிலியாண்டபுரத்தில் உள்ள ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிட நிலையத்தில் மகான் ரோமரிஷி நூல் பார்க்கப்பட்டது. ஓங்காரக்குடில் ஆசான் தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களுக்கு மகான் ரோமரிஷி அருளிய அருள்வாக்கு. ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் காட்டும் மார்க்கமே உண்மை மார்க்கம். அதுவே சன்மார்க்கம். மேலும் இதுவே சத்திய மார்க்கம். எனவே இந்த அரிய நூலை ஆன்மிகவாதிகளும், அன்பர்களும் பயபக்தியோடு படித்தால் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

### மகான் ரோமரிஷி ஆசி காண்டம்

அருள் வடிவே அரங்கனே அரசா வாழ்க
**அவதார கல்கியே தேசிகா வாழ்க**
அருள்ஞான பரம்பொருளே துறவியே வாழ்க
அறுமுகனே சரவணனே வாழ்க வாழ்க 1

வாழ்கவே ரோமரிஷி வாழ்த்தினேனே
**வையகத்தை காக்க வந்த இறையருள் நீயே**
ஊழ்வினையை (முன் பாவங்களை) மக்களுக்கு அகற்ற வந்தாய்
உத்தமனே மெய்ஞானம் அளிப்போன் நீயே 2

அளித்துமே அகிலம் வாழ வழியைச் செய்தாய்
தரணியெங்கும் உன்னருளால் ஓங்குதப்பா
தெளிவடைய வைத்தாயே மக்கள் தன்னை
தேவாதி தேவனாய் விளங்குவாயே 3

விளக்கங்கள் பல அளிப்பாய் மக்களுக்கு
வினையகற்ற உபதேசம் பல அளித்தாய்
விளக்கமதை உணர்ந்துமே நடப்பவரெல்லாம்
வினையில்லா பேரின்ப வாழ்வு காண்பார் 4

**காண்பாரே சத்தியமே ரோமரிஷி வாக்கு**
**கண்டுரைத்தேன் சுவடி மூலம் ஜீவமொழியில்**
**காண்கவே ஆசியுண்டு தொண்டர்கட்கும்**
கருணைக்கடல் உந்தனின் அன்பர்கட்கும் 5

**அன்பர்கட்கும் ரோமரிஷி ஆசியுண்டு**
**அன்பு கொண்டு அளித்திடுவேன் இதுநாள் தன்னில்**
அன்புதரும் இறையாசான் அரங்கருக்கும்
அளித்திடுவேன் பரிபூரண ஆசிதன்னை 6

**தன்னிலே அரங்கர் தொண்டே ஞான மார்க்கம்**
**தான் தவத்தின் சக்தி தரும் இன்ப மார்க்கம்**
**நன்மைதனை அளித்திடுமோர் உண்மை மார்க்கம்**
**நல்ஞானம் வளர வைக்கும் அருளின் மார்க்கம்** 7

**மார்க்கமே இறைமார்க்கம் உண்மை மார்க்கம்**
**மகத்தான பொதிகைமுனி (அகத்தியர்) சன்மார்க்கம்தான்**
**மார்க்கமான மெய்ஞான இறையின் மார்க்கம்**
**மார்க்கமதின் முறைப்படியே வாழ்பவர்க்கு** 8

வாழ்பவர்க்கு ஞானிகளின் ஆசியுண்டு
வருமுலகில் இடர்நீங்கி இன்பமுண்டு
ஊழ்நீங்கி உண்மைநெறி உணர்வார்தானே
**உண்மைபொருள் கொண்டமார்க்கம் அரங்கர்மார்க்கம்** 9

**அரங்கர்வழி பின்செல்ல வினைகள் அண்டா**
**அருள்வாக்கு உரைத்தேனே ரோமரிஷியான்**
அரங்கர் ஆசி பெற்றவர்க்கு உயர்வு உண்டு
அருளுண்டு பொருளுண்டு இன்பமுண்டு 10

இன்பமுண்டு பரிபூரண ஆயுளுண்டு
இன்பப் பெருங்கடலே அரங்கா வாழ்க
துன்பம்தனை அகற்றிட்டாய் மக்களுக்கு
துயர்நீக்கி ஞானத்தை அளித்தாயப்பா 11

அப்பனே அறிகின்ற மைந்தனுக்கும்
அவனியிலே ரோமரிஷி ஆசியுண்டு
ஒப்பில்லா இனிவரும் ஆசியாவும்
உதயகாலம் அறிந்திட வேண்டுமென்பேன் 12

என்பேனே ஞானிகளின் ஆசியுண்டு
இறைவனே அரங்கர்தான் கலியுகத்தில்
**உண்மையுடன் ஞானசித்தர் காலம் தன்னை**
**உருவாக்கி வைத்திடுவார் தொடரும் ஆண்டில்** 13

ஆண்டாண்டாய் மக்களுக்கு ஏற்றமுண்டே
அறிவித்தேன் ரோமரிஷி ஆசிதன்னை
கொண்டுரைத்தேன் தெரிந்தனையா இதன் காலம் தான்
கூறிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 14

**–சுபம் –**

மேற்கண்ட 14 பாடல்களும் முக்காலம் உணர்ந்த முனிவரும், அன்பர்கள் அழைத்தால் அக்கணமே "அஞ்சேல் மகனே!" என்று அருள்செய்யும் **மகான் ரோமரிஷி அவர்கள்** குருநாதர் அவர்களுக்கு அருளியதாகும். இந்த நூலை போற்றி பாதுகாப்பது நன்மை தரும்.

மேலும் ஓங்காரக்குடிலாசான் **தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** பல ஜென்மங்களிலே ஞானிகளுக்கு தொண்டுசெய்து ஆசிபெற்றதனால், உண்மைப்பொருளை நன்கு உணர்வதற்கு ஞானியர்கள் ஆசி தந்துள்ளார்கள். அதனால் குருநாதர் அவர்கள் காட்டுகின்ற மார்க்கமே உண்மை சன்மார்க்கமாகும். அதுவே சத்திய மார்க்கமாகும். மேலும், பிறப்பறுக்கும் பேரின்ப மார்க்கமாகும்.

ஆகவே, குடில் தொண்டர்களும், குடிலைச் சார்ந்த அன்பர்களும், பொதுமக்களும் இதை நன்கு பயன்படுத்தி தங்கள் ஜென்மத்தை கடைத்தேறிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

## குருநாதர் அவர்களின் உபதேசம்

மனிதன் விடுபேறு அடையவேண்டுமென்றால் தானமும், தியானமும் செய்ய வேண்டும். தானம் செய்ய வேண்டும் என்றால் பொருள் வேண்டடும். பொருள் இருந்தாலும் கொடுக்ககூடிய மனம் வேண்டும். மனம் இருந்தாலும், தானம் செய்வதற்குரிய இடமும், சூழ்நிலையும் அமைய வேண்டும். பண்புள்ள தொண்டர்களும் அமைய வேண்டும். இதற்கு ஆசான் அகத்தீசன் ஆசி இருக்க வேண்டும்.

மேலும் தியானம் செய்ய வேண்டுமென்றால் யாரை தியானித்தால் ஆசிபெற முடியும் என்ற அறிவு வேண்டும். அப்படியே அறிவு இருந்தாலும் ஆசானை என்ன கேட்க வேண்டும், எப்படி கேட்க வேண்டுமென்ற உபதேசம் வேண்டும். எந்த எந்த நேரத்தில் எவ்வளவு நேரம் பூஜை செய்வது என்று உபதேசிக்க வேண்டும். இல்லையென்றால் கடவுளை அடைவதற்கு வழி தெரியாமல் தடுமாறுவார்கள். எனவே நன்கு அனுபவப்பட்ட சொற்குரு ஒருவர் இருக்க வேண்டும். இதற்கு ஆசான் அகத்தீசன் ஆசி வேண்டும்.

தினமும் ஆசான் அகத்தீசரை தியானம் செய்யும்பொழுது அடியேன் தானம் செய்வதற்கும், தியானம் செய்வதற்கும் எனக்கு ஆசி வேண்டும் என்றும், உன் ஆசியால்தான் தடைபடாது தானமும் தியானமும் செய்ய முடியும். தானமும் தியானமும் செய்யாவிட்டால் ஜென்மத்தை கடைத்தேற்ற முடியாது என்பதை உன்திருவருள் கடாட்சத்தால் தெரிந்து கொண்டேன். அதுநான் முன்செய்த நல்வினையே.

ஒரு சிலர் பிராணாயாமம் (வாசி பழக்கம்) செய்வார்கள், நோக்கம் கடவுளை அடையவேண்டுமென்று செய்வார்கள். அதிக நேரம் மூச்சு கட்டுவதால் குன்மநோய்(வயிற்று வலி) வரும், குடல் புண்(அல்சர்) வரும், இரத்த அழுத்தம் (BP) வரும், அஜீரண கோளாறோடு வயிற்றுப்போக்கு ஏற்படும். மேலும் கை, கால், வயிறு வீங்கி மனைவி மக்களை அனாதையாக விட்டுவிட்டு அநியாயமாக சாவார்கள். இதற்கு காரணம் தக்க ஆசான் இல்லாத குறையும், முன்செய்த தீவினையும் ஆகும்.

மேலும் சிலர் கற்பம் உண்டு சாகாமல் இருப்பதற்காக செந்தூரம், பற்பம், சுண்ணம், லேகியம், இன்னும் அனேக மூலிகைகளையும் மற்றும் பாசான சரக்குகளையும் சாப்பிட்டுவிட்டு சாகமாட்டோம் என்று கற்பனை செய்து கொள்வார்கள். ஆனால் அவர்கள் அநியாயமாக மாண்டுபோவார்கள். இவர்களிடம் விவரம் தெரிந்தவர்கள் என்ன சொன்னாலும் கேட்கமாட்டார்கள். இதற்கு காரணம் அவர்களின் தீவினையே.

சிலபேர் வைத்திய வாதநூலை படித்துவிட்டு, வாதம் என்ற தங்கம் செய்ய நினைத்து முயற்சிப்பார்கள். தங்கம் என்பது சித்தர்களின் பரிபாஷை ஆகும். அதைப்புரியாது வாதம் என்ற தங்கம் செய்ய முயற்சிப்பவர்கள் எல்லாப்பொருளையும் இழந்து மனைவி மக்களை விட்டுவிட்டு, திருவோடு வாங்கக்கூட காசில்லாமல் கடன் சுமைப்பட்டும், அவமானத்திற்குட்பட்டும் நலிந்துபோவார்கள். அவர்களிடம் விவரம் தெரிந்தவர்கள் எதைச்சொன்னாலும் கேட்க மாட்டார்கள். இதுவும் அவர்கள் செய்த தீவினையே.

சாகாமைக்குரிய கற்பம் உண்டு என்பது உண்மையே. அந்த கற்பமும் ஆசான் ஞானபண்டிதன் ஆசியாலும், ஆசான் அகத்தீசன் ஆசியாலும், மகான் ரோமரிஷி ஆசியாலும்தான் அறிந்துகொள்ள முடியும். எனவே ஆசான் ஞானபண்டிதனையும், அகத்தீசனையும், ரோமரிஷியையும் பூஜித்து அமிர்தபானம் உண்டு மரணமிலா பெருவாழ்வு பெறுவோம்.

ஒருசில போலி ஆன்மீகவாதிகளின் பேச்சை கேட்டு மனைவி பொய் என்றும், பிள்ளைகள் பொய் என்றும், நாம் சேர்க்கக்கூடிய பொருள் பொய் என்றும் சொல்வார்கள். ஆனால் அவர்கள் இதை சொல்லிவிட்டு இல்லறத்தானிடம் பொருள் பறிப்பார்கள். இது என்ன ஞானமோ கடவுளுக்கே வெளிச்சம்.

கடவுளை அடைய விரும்புகிறவர்கள், தாய் தந்தையிடம் அன்பு காட்டியும், மனைவியை மதித்தும், பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்தும், விருந்தை உபசரித்தும், பொருள் சேர்க்கும் பொழுது நெறிக்குட்பட்டு பொருளைச் சேர்த்தும், சேர்க்கப்பட்ட பொருளை தன் குடும்பத்தார்க்கும், தாய் தந்தைக்கும் மற்றும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும், நண்பர்களுக்கும் செலவு செய்தும், மற்றும் வறியவர்களுக்கு உதவி செய்தும் தினமும் காலை, மாலையில் 10 நிமிடம் **"ஓம் அகத்தீசாய நம", "ஓம் நந்தீசாய நம", "ஓம் திருமூலதேவாய நம", "ஓம் கருவூர்தேவாய நம", "ஓம் ரோமரிஷி தேவாய நம"** என்றும் நாமஜெபம் செய்து, அடியேனுக்கு ஞானம் சித்திக்கவேண்டும் என்றும், அதற்குரிய அறிவும், பரிபக்குவமும் வைராக்கியமும் வேண்டும் என்றும் ஆசான் அகத்தீசனை வேண்டிக்கொள்ள வேண்டும்.

உண்மைப்பொருளை அறிந்த அனுபவவாதிகள் உலகத்தை வெறுக்காமலும், கிடைக்கக்கூடிய இல்லறத்தையும் மற்றும் உள்ள சூழ்நிலைகளையும் அரிய வாய்ப்பாகக் கருதி நன்கு பயன்படுத்தி ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்வார்கள். இதற்கெல்லாம் பல ஆண்டுகள் ஆகும் என்பதை அறிந்தவர்கள் உணர்ந்து, அவசரப்படாமல் அடக்கமாக இருப்பார்கள்.

மேலும் **"ஓம் அகத்தீசாய நம"** என்று நாமஜெபம் செய்தால் முன்செய்த வினைகள் நிங்கும். முன் செய்த வினைகள் நீங்கினால் சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு இருந்தால்தான் ஆன்மா(லாபம்) ஆக்கத்தைப்பற்றியும், ஆன்மா(தெளிவு) விளக்கத்தைப்பற்றியும், ஆன்மா(மோட்சம்) வீடுபேறு அடைவதை பற்றியும் அறிந்துகொள்ள முடியும். எனவே தடைபடாத தியானமே கடவுளை அடைய துணை புரியும்.

அகத்தியர் துணை

## ஸ்ரீ அருணகிரிநாதர் ஆசியின் வாழ்த்து மடல்

28.08.1999 சனிக்கிழமை அன்று திருச்சி சங்கிலியாண்டபுரத்தில் உள்ள ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிட நிலையத்தில் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க தொண்டர்களுக்கும், அன்பர்களுக்கும் பரப்பிரம்ம சொரூபியாகிய ஆசான் அருணகிரிநாதர் ஆசிகாண்டம் பார்க்கப்பட்டது.

**ஓங்காரக்குடில் ஆசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களுக்கும், அன்பர்களுக்கும், தொண்டர்களுக்கும், பரப்பிரம்ம சொரூபியாகிய ஆசான் அருணகிரிநாதர்**

அன்பர்களும், தொண்டர்களும் இவ்வரிய நூலை படித்து போற்றிப் பாதுகாப்பது நன்மை தரும்.

## ஸ்ரீஅருணகிரிநாதர் ஆசியின் வாழ்த்து மடல்

அருள்ஞான இறையருளே அரங்கா போற்றி
அருள்ஞானம் அனைத்திற்கும் அரசா போற்றி
அருள்ஞான பண்டிதனே தேசிகா போற்றி
அருள்ஞான அறுமுகனே உமைபோற்றி போற்றி 1

போற்றிடுவேன் எனக்கருளிய சக்தியே போற்றி
பூவுலகை காக்கின்ற அருளே போற்றி
போற்றியே அருணகிரி அளிப்பேன் ஆசி
பூவுலகை காக்கின்ற இறையே அரங்கர் 2

அரங்கர் தான் கலியுக கல்கி என்பேன்
**அருணகிரி ஆசியுண்டு தொண்டர்கட்கு**
அரங்கரின் இருபான் மூன்றாண்டு தவநிறைவு
**அருணகிரியான் நேரிடையாய் கலந்து ஆசி** 3

**ஆசியே அளித்திடுவேன் தொண்டர்கட்கு**
**அன்பர்கட்கும் நேரிடையாய் ஆசியுண்டு**
**ஆசியுண்டு பக்குவமாய் தொண்டு செய்தோர்**
**அன்புடனே பணிவிடைகள் செய்பவர்க்கு** 4

**செய்பவர்க்கு அருள்ஞானம் ஓங்குமப்பா**
**செப்பிடவே ஞானியாவார் ஆசியுண்டு**
மெய்ஞான அருட்ஜோதி அரங்கர் தானே
மனம்மகிழ்ந்து அருணகிரி அளிப்பேன் ஆசி 5

ஆசியே அருட்குருவே அரங்கா வாழ்க
அன்பர்களுக்கு அன்பனே வாழ்க வாழ்க
ஆசிதரும் அருட்ஜோதி தேசிகா வாழ்க
அகிலத்தின் நாயகனே வாழ்க வாழ்க 6

வாழ்க்கையின் தத்துவமே அரங்கா வாழ்க
வையகத்தின் பேரின்ப அரசா வாழ்க
ஊழ்நீக்கும் யோகியே தேசிகா வாழ்க
உலகத்தின் தலைவனே வாழ்க வாழ்க 7

வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்க வாழ்க
வையகத்தின் துறவியே சித்தனே வாழ்க
வாழ்வளிக்கும் அறுமுகனே கல்கியே வாழ்க
**வாழவைக்கும் பிரம்மரிஷி அரங்கா வாழ்க** 8

அரங்கரின் தவநிறைவு இருபான் மூன்றாண்டு
அவனியெங்கும் ஆசானருளால் நலமே ஓங்கும்
அரங்கரால் உலகமெங்கும் அமைதி ஓங்கும்
அரங்கர்தான் அகிலமதை காத்து நிற்பார் 9

காத்துமே நாள்நாளும் அமுதை (உணவு) அளிப்பார்
கருணைத்தாய் வடிவமே அரங்கா வாழ்க
உத்தமனே உலகாளும் சித்தே வாழ்க
உயர்வுபெற தவம்சடுதி நிறைவும் காண 10

காணவே அருணகிரி அளித்தேன் ஆசி
கருணைக்கடல் அரங்கரையே போற்றுவோமே
ஊனமதை அகற்றும் சக்தி அரங்கா வாழ்க
உயர்வான திருவருளே வாழ்க வாழ்க 11

வாழ்கவே ஆசியதை அளித்தேன் இன்னாள்
வழுத்தினேன் பிரமாதி யாளிதிங்கள் (ஆவணி மாதம்)
தாழ்பணிந்து அருளதற்கு அளித்தோம் ஆசி
தாமுரைத்தேன் ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 12

**சுபம்**

**28.08.1999 அன்று பரப்பிரம்ம சொரூபியாகிய ஆசான் அருணகிரிநாதர்,**
**ஓங்காரக்குடில் ஆசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களுக்கு**
**''பிரம்மரிஷி'' பட்டம் அருளியுள்ளார்கள்.**

அகத்தியர் துணை

# உண்மைப் பத்திரிக்கை

நெஞ்சார நினைப்பவர்க்கு நிழல் ஆவானை
நீங்காதார் குலம் தழைக்க நிதியாவானைச்
செஞ்சாலி வயற்பொழில்சூழ் தில்லை மூதூர்ச்
சிலம்பொலி போல் பாடுகின்ற சித்தன் தன்னை
வெஞ்சாபமுமில்லை ஒரு வினையுமில்லை
வேலுண்டு துணைவருங்கால் வெற்றியுண்டாம்
அஞ்சாதீர் என்று யுகயுகத்தும் தோன்றும்
அகத்தியனை அருட்குருவை அகத்துள் வைப்பாம் – தனிப்பாடல்.

## இந்த பாடலின் சாரம்

ஆசான் அகத்தீசனை மனமார பூஜித்தால் நோயும், வறுமையும், பகைமையும், மன உளைச்சலுமாகிய வெப்பம் தணிய ஆசான் அகத்தீசன் குளிர்ச்சி பொருந்திய நிழல்போல் இருந்து அருள் செய்வார். மேலும், ஆசான் அகத்தீசனை பூஜைசெய்தால் தனக்கும் தன் சந்ததிகளுக்கும் செல்வநிலை பெருகச் செய்வார். மேலும், ஆசான் அகத்தீசரின் பாடல்கள் அத்தனையும் வளப்பம் பொருந்திய தில்லைவாழ் அம்பலவாணரின் கால் சிலம்பொலிபோல் கேட்க இனிமை உடையதாக இருக்கும். காரணம் ஆசான் அகத்தீசனின் பாடல்கள் அத்தனையும் பிறவிப்பிணிக்கு மாமருந்தாக இருப்பதால் படிக்கவும், கேட்கவும், சிந்திக்கவும் இனிமை உடையதாக இருக்கும். மேலும், ஆசான் அகத்தீசனை பூஜித்தால் அறியாமை காரணமாக பல ஜென்மங்களில் செய்த பாவத்தால், பிறரால் சபிக்கப்பட்ட கொடுஞ்சாபங்களும் நீங்கும், பாவங்களும் நீங்கும். அதுமட்டுமல்லாமல் "**முருகா!** " என்றால் ஈரேழு பதினான்கு லோகமும் கிடுகிடுவென நடுங்கும் ஆற்றல்பெற்ற ஆசான் சுப்ரமணியரின் வேல்படை நமக்கு உற்றதுணையாக இருக்கும். மேலும் வெற்றிகளும் உண்டாகும். தொடர்ந்து ஆசான் அகத்தீசனை பூஜைசெய்தால் நாம் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் ஆசான் அகத்தீசர் குருவாக வந்து "**அஞ்சேல்!** " என்று ஆட்கொண்டு அருள்செய்வார். எனவே ஆசான் அகத்தீசரை தினமும் பூஜிப்போமாக!.

அன்புடையீர், வணக்கம்.

27 ஆண்டுகளாக எங்கள் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் முதுபெரும் தாலைவன் ஆசான் ஞானபண்டிதனான சுப்ரமணிர் அருளோடும், ஆசான் அகத்தீசன் ஆசியோடும் ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி சமநோக்கோடு பிரதிபலன் எதிர்பாராது "**மக்கள் தொண்டே மகேசன் தொண்டு**" என்று நமது குருநாதர்,

பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்கள்**

- 11.02.1988 முதல் இதுவரை ஓங்காரக்குடிலில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் அன்னதானத்தில் சுமார் 2 கோடி மக்களுக்கு **பசியாற்றியுள்ளோம்.** மேலும் தினசரி ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.
- 1989 ஆம் ஆண்டு **சித்ராபௌர்ணமி** முதல் இதுநாள் வரை 2714 ஏழை எளிய மக்களுக்கு **இலவசத் திருமணம்** செய்து வைத்துள்ளோம்.
- 1993 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் துறையூர் மற்றும் சுற்றுப்புற கிராம மக்களுக்கு தினசரி சுமார் 25 ஆயிரம் நபர்களுக்கு மேலாக எங்கள் சங்க **இலவச குடிநீர்** லாரி மற்றும் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கி வருகிறோம்.
- 1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் ஓங்காரக்குடிலில் நடைபெறும் மாதாந்திர **பௌர்ணமி** பூஜையில் பெண்களுக்காக நடைபெறும் **திருவிளக்கு பூஜையில்** இதுநாள் வரையிலும் சுமார் 36,000 பெண்கள் கலந்துகொண்டு ஞானியர்களின் அருளாசி பெற்றுள்ளார்கள். இதில் சுமார் 1,500 பேர் விதவைப் பெண்கள் ஆவார்கள். விதவைப் பெண்களின் திருவிளக்கு பூஜையை ஏற்று ஆசான் அகத்தீசன் அருள் செய்கிறார்.
- ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம், அன்னை சமூகசேவை நிறுவனம், ரோட்டரி சங்கம், ஜோசப் கண் மருத்துவமனை, திருச்சி மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கங்கள் இணைந்து 27.07.1997 முதல் ஓங்காரக்குடில் மகான் புஜண்ட மகரிஷி மண்டபத்தில் ஒவ்வொரு மாதம்தோறும் இரண்டாம் சனிக்கிழமைகளில் **இலவச கண்சிகிச்சை முகாம்** நடத்திவருகின்றோம். இம்முகாமில் பயனடைந்தவர்கள் விபரம் : 4320 ஆண்கள், 4135 பெண்கள், 395 குழந்தைகள். இவர்களில் 1427 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்து லென்ஸ் பொருத்தப்பட்டது.
- **பெருமாள்மலை அடிவாரத்தில்** வீரப்ப முதலியார் அன்னதான சத்திரத்திலும், செட்டியார் மண்டபத்திலும் தினசரி காலையிலும், மதியமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.
- நகராட்சி நிர்வாகம் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் நடத்தும் போலியோ சொட்டு மருந்து முகாம் மற்றம் மஞ்சள் காமாலை தடுப்பூசி முகாம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த இடவசதி செய்து கொடுத்து, அவர்களுக்குத் தேவையான இடவசதி, உணவு மற்றும் உதவிகளும் செய்து வருகிறோம்.
- 11.04.1999 முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து மாலை 6 மணிக் கிராம மக்கள் உண்மை ஆன்மீகத்தை அறிந்து கொள்வதற்காக **ஆன்மீகச் சொற்பொழிவு மற்றும் வழிபாட்டினை** ஆசான் அகத்தீசன் நல்லாசியோடு செயல்படுத்தி வருகிறோம்.
- துறையூரைச் சார்ந்துள்ள கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு **ஆசான் அகத்தீசனை பூஜைசெய்து அருள்பெற பிரசாதம்** இதுவரை பல லட்சம் மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
- கோடைக்காலங்களில் துறையூர் நகரத்தில் **கம்மங்கஞ்சி, நீர்மோர்** தினசரி ஆயிரக்கணக்கான மக்களுக்கு வழங்கிவந்துள்ளோம்.
- ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் மாலை 6 மணிக்கு ஆசான் மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம், கீர்த்தித்திருஅகவல், போற்றித்திருஅகவல், ஆசான் திருமூலதேவர் அருளிய

திருஞானசம்பந்தர் அருளிய கோளறு திருப்பதிகம், ஔவையார் அருளிய விநாயகர் அகவல் பாராயணம் நடைபெற்று வருகிறது.

- ❋ பூச நாளிலும், பௌர்ணமி நாளிலும், மாலை 6.00 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்கசுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் நடைபெற்று வருகிறது.
- ❋ பூச நன்னாளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணிவரையிலும், மாலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரையிலும் அருட்பெருஞ்ஜோதி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ❋ மேலும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக, சென்னை, சேலம், ராசிபுரம், கஞ்சமலைசித்தர் கோவில், திருச்சி, மங்காதேவன்பட்டி, தஞ்சை, பைங்காநாடு போன்ற ஊர்களிலும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.
- ❋ ஏழை எளிய மக்களுக்கு வேஷ்டி, சேலைகள் கொடுத்து வந்துள்ளோம்.

## குருநாதர்
## தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களின் உபதேசம்

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே

**திருமந்திரம் – உபதேசம் – கவி என் 138.**

திருவடிஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடிஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடிஞானம் சிறைமலமீட்கும்
திருவடிஞானமே திண்சித்திமுத்தியே

**திருமந்திரம் – திருவடிப்பேறு – கவி என் 1598.**

## நவகோடி சித்தர்களுக்கு தலைவனாகிய ஆசான் அகத்தீசனை தியானித்தால் ஏற்படும் நன்மைகள்

**ஓம் அகத்தீஸ்வரா!** உன் திருவடியை கோடானுகோடி ஆன்மீகவாதிகள் உருகி தியானம் செய்ததால் அவர்களுடைய முன்ஜென்மத்தில் செய்த வினைகளும் இந்த ஜென்மத்தில் செய்த வினைகளும் நீங்கி நல்வினை, தீவினை பற்றி புரிந்து நல்வினையை பெருக்கியும், தீவினையை நீக்கியும் ஆசிபெற்றார்கள். நல்வினை, தீவினை பற்றி புரிந்து கொள்வதே பேரறிவாகும்.

நல்வினையை பெருக்கிக்கொண்ட மக்கள்தான் தூல உடம்பாகிய புறஉடம்பையும், சூட்சும தேகமாகிய அகவுடம்பையும் அறியமுடியும். புறஉடம்பாகிய தூலதேகத்தையும் அகவுடம்பாகிய சூட்சுமதேகத்தையும் அறிந்துகொள்ள உமது ஆசியின்றி முடியாது என்று அறிந்து கொள்ளவும் உமது ஆசிவேண்டும். உமது ஆசியின்றி எத்தனை சாஸ்திரங்கள்,

உன்திருவடியை பற்றி உருகி தியானிக்க நினைக்கிறேன், ஆனால் நான் செய்த பாவங்களோ என்னை தியானிக்க முடியாமல் தடை செய்கிறது. அந்த தடையை நீரே உடைத்து நாயினும் கடையேனாகிய என்னையும் ஒரு பொருட்டாக மதித்து என்னை ஏற்று அருள்செய்யும்படி உமது திருவடிய பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

உருகி தியானிக்க நினைக்கிறேன், முன் செய்த பாவத்தால் கல்மனம் உருகவில்லை. கல்மனம் உருகி தியானிக்க ஆசி வேண்டும். உடனே கல்மனம் உருகாது என்பது உன் திருவருளால் அறிந்து கொண்டேன். உன்னை தியானிக்க தியானிக்கத்தான் கல்மனமாகிய என் மனம் உருகி தியானிக்க முடியும் என்பதையும் உமது திருவருளால் உணர்ந்து கொண்டேன்.

## குறிப்பு

1. நன்னெறியைக் கடைபிடிக்க வேண்டும் என்றால் தலைவன் ஆசான் அகத்தீசன் தான் என்று அறிந்து பூஜை செய்யவேண்டும். பூஜை செய்தால்தான் நன்னெறி எது, தீநெறி எது என்று உணர முடியும். எனவே பூஜை செய்தால்தான் நன்னெறியைக் கடைபிடிக்க முடியும்.
2. ஆசான் அகத்தீசனை பூஜிக்க பூஜிக்க வினை நீங்கும். மேலும் மேலும் பூஜிக்க பூஜிக்க தன்னை பற்றி அறியக்கூடிய சிறப்பறிவு உண்டாகும். மேலும் மேலும் உருகி தியானிக்க ஆன்மா மும்மலமாகிய சிறையில் அகப்பட்ட விபரம் தெரியும். மேலும் மேலும் விடாது திருவடியை பற்றி உருகினால் சிறைப்பட்ட ஆன்மா விடுபட்டு ஆன்ம ஜோதி தோன்றும். மேலும் ஜீவான்மா பரமான்வாகும் (எல்லாம் வல்ல இயற்கை நாமாகவும், நாமே எல்லாம் வல்ல இயற்கையாகவும்). அதுவே விடுபேறு அல்லது மோட்சமாகும்.
3. சரியை, கிரியை, யோக, ஞானம் அல்லது அறம், பொருள், இன்பம், விடு ஆகிய இரண்டும் ஒன்றேயாகும். இந்த நான்கும் அறியவேண்டுமென்றால் ஆசான் அகத்தீசன் அருள் இருக்க வேண்டும். ஆசான் அருள்பெற காலை, மாலை "**ஓம் அகத்தீசாய நம**" என்று முடிந்த அளவிற்கு நாமஜெபம் செய்யவேண்டும். நாமஜெபம் செய்ய செய்யத்தான் மேற்கண்ட நான்கு படிகளையும் அறிந்து கடக்கமுடியும். நாமாக கற்றுத்தெளிவது என்பது முடியாததாகும். எனவே ஆசான் அகத்தீசன் திருவடியை பூஜித்து ஆசிபெறுவோம். விடுபேறு அடைவோம்.
4. சாகாக்கல்வி என்பது – முற்றுப்பெற்ற முனிவராகிய ஆசான் அகத்தீசரிடம் இனி நான் பிறவாதிருக்க வேண்டும் என்று உருகி தியானிப்பதே சாகாக்கல்வி ஆகும்.

கடவுள் அருள் பெறுவதற்காக ஆடு, கோழி, பன்றி, எருமைகிடா போன்ற உயிர்களை பலியிடுகின்றார்கள். அப்படி பலிகொடுத்தால் இறையருள்பெற முடியாது. பாவம்தான் மிகுதியாக வந்து சேரும். உயிர்பலி கொடுக்க கொடுக்க வறுமையும், பிணியும், பகைமையும், மன உளைச்சலும் ஏற்படும் என்று ஆசான் சிவவாக்கியரும், அருட்பிரகாசவள்ளலாரும், மகான் திருவள்ளுவரும் தங்கள் பாடலில் அருளியுள்ளார்கள்.

எடுத்துக்காட்டு

தங்கள் தேகம் நோய்பெறின் தனைப்பிடாரி கோயிலிற்
பொங்கல்வைத்தும் ஆடுகோழிப் பூசைப்பலியை இட்டிட
நங்கச்சொல்லு நலிமிகுந்து நாளுந்தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள்குலத் தெய்வமும் உங்கள் உருக்குலைப்பது உண்மையே.

**ஆசான் சிவவாக்கியர் பாடல் – கவி 535.**

நலிதரு சிறிய தெய்வம் என்று ஐயோ
        நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றி குக்குடங்கள்
        பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
        புத்திநொந்து உளம் நடுக்கு உற்றேன்
கலியுறு சிறிய தெய்வம் வெங்கோயில்
        கண்ட காலத்திலும் பயந்தேன்

**திருவருட்பா – பிள்ளைப்பெரு விண்ணப்பம் கவி 59.**

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

**திருக்குறள் – கொல்லாமை 327.**

கங்கையிலே காவிரியில் நூறுமுறை மூழ்கி
        கணக்கற்ற திருக்கோயில் கால்தேற சுற்றி
வெங்கொடிய பலநோன்பு ஏற்றுடலை வருத்தி
        வேதங்கள் கூறுகின்ற யாகமெல்லாம் செய்து
பங்கமிலா வேதியர்கை பணம்அள்ளி தந்து
        பசுவதனைப் பூசித்து அதன் கழிவை உண்டு
தங்களுயிர் மோட்சத்தை அடைவதற்கே முயலும்
        தயவில்லார் சத்தியமாய் முக்தியதை யடையார்.

**திருவருட்பா – இறவா நிலை.**

**மேற்கண்ட பாடலின் சாரம்**

தான் செய்த பாவங்கள் நீங்குவதற்காக கங்கை, காவிரி இன்னும் அநேக புனித தீர்த்தங்களில் நீராடினால் பாவம் தீரும் என்று நினைப்பவர்கள் உண்டு. பெருமைக்குரிய கோவில்களுக்கு பாதயாத்திரை சென்று வழிபாடு செய்துவந்தால் இறையருள் பெருகும் என்று நினைப்பவர்களும் உண்டு. மேலும் விரத அனுஷ்டானம் கடைபிடித்து பட்டினி கிடந்து உடம்பை வருத்தி இறையருள் பெறலாம் என்று நினைப்பவர்களும் உண்டு. மேலும் அநேக வேதங்களில் சொல்லப்பட்ட வேள்விகள் செய்து அதன்மூலம் கடவுளின் ஆசி பெறலாம் என்று நினைப்பவர்களும் உண்டு. இன்னும் சிலர் அந்தணர்களாகிய வேதியர்களுக்கு அவர் விரும்புகின்ற அனைத்தும் அள்ளித்தந்து இறையருள் பெறலாம் என்று நினைப்பவர்களும் உண்டு. மேலும் பசுவை பூஜித்தும் அதனுடைய பால்மட்டும் பருகி இறையருள் பெறலாம் என்று நினைப்பவர்களும் உண்டு. மேலே சொல்லப்பட்ட அத்தனை கருத்துக்களையும் பின்பற்றி நடந்தபோதிலும், பசித்த ஏழைகளுக்கு பசியாற்றி வைக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டால் எந்த வகையிலும் ஆன்மலாபம் பெறமுடியாது என்பது அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய ஆசான் இராமலிங்கசுவாமிகளின் உபதேசமாகும்.

## ஆசான் அகத்தீசரை பூஜித்தால் ஏற்படும் நன்மைகள்

எல்லாம் வல்ல இயற்கை படைப்புகளில் மனிதர்களே தலைசிறந்தவர்களாவார்கள். மனித தேகத்துக்குள் சொர்க்கத்தையும், நரகத்தையும் எல்லாம் வல்ல இயற்கை அன்னை வைத்திருக்கிறாள். நாகமாகிய மலமாயையும், மனமாயையும் அறிந்து ஆசான் அகத்தீசன்

மேலும் தாமே சிவமென்று அறிகின்ற அறிவு உண்டாகும். இதை முற்றும் உணர்ந்தவர் ஆசான் அகத்தீசன் ஆவார்.

உலகத்திலுள்ள கோடானுகோடி ஞானிகள் ஆசான் அகத்தீசன் திருவடியை பூஜித்து மலமாயையும், மனமாயையும், பந்தபாசங்களையும் நீக்கி பேரருள் பெற்றிருக்கிறார்கள். இதுமட்டுமல்லாது எல்லாம் வல்ல பரஞ்ஜோதியை தம்முள் கண்டு பரப்பிரம்மம் ஆகியிருக்கிறார்கள். இதற்கு ஆசான் அகத்தீசர் ஆசியோடு நல்வினை, தீவினையை உணர்ந்து தீவினையை நீக்கியும், நல்வினையை பெருக்கியும் ஆசான் அகத்தீசனின் ஆசி பெற்றிருக்கிறார்கள். அவர்கள்தான் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழிலையும் செய்யும் வல்லமை பெற்றிருக்கிறார்கள். எனவே ஆசான் அகத்தீசரை பூஜித்து மரணமில்லா பெருவாழ்வு பெறுவோமாக.

எடுத்துக்காட்டு

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**திருக்குறள் – துறவு அதிகாரம் – 250.**

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்.

**ஔவைக்குறள் – அதிகாரம் 2 உடம்பின் பயன்.**

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு.

**ஔவைக்குறள் – அதிகாரம் 2 – உடம்பின் பயன்.**

**குறிப்பு**

ஆன்ம லாபம் பெற விரும்புகிறவர்கள் ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமானால் ஜீவகாருண்ய கடவுள்களான இராமலிங்கசுவாமிகள், மாணிக்கவாசகர், தாயுமான சுவாமிகள், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், அகத்தீசர், திருமூலதேவர், கருவூர் முனிவர், பட்டினத்தார், போகமகாரிஷி, கோரக்கர், நந்தீசர், காளாங்கிநாதர், சட்டைமுனிநாதர், சண்டிகேசர், சிவவாக்கியர், திருவள்ளுவர் போன்ற மகான்களின் நாமத்தை தினசரி நாமஜெபம் செய்வதே பூஜையாகும். அதுவே தவமும் ஆகும். நாமஜெபம் செய்தால் வன்மனம் நீங்கும், லோபித்தனம் நீங்கும், வறுமை தீரும், மனித நேயம் அல்லது மனிதாபிமானம் உண்டாகும். எனவே, பெரியோர்களின் ஆசி இல்லாமல் ஆன்மலாபம் பெற முடியாது. ஜீவகாருண்யத்தையும் கடைப்பிடிக்க முடியாது. ஆகவே, ஞானிகளைப் பூஜித்து எல்லா நன்மைகளையும் அடைவோமாக.

அகத்தியர் துணை

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை –1

## 02.09.1999

## கற்றதின் பயனே அகத்தீசரை பூஜிப்பதுதான்

உலகத்தில் உள்ள எல்லா ஆன்மீகவாதிகளும் பூஜை செய்வார்கள். ஆனால் யாரை

முனிவராகிய அகத்தியரை பூஜை செய்த ஆசி பெற வேண்டுமென்று அந்த சிலரில் ஒருசிலருக்குத்தான் தெரியும். ஆசான் அகத்தீசரை அறிந்து கொள்வதற்கே 1000 கோடி புண்ணிம் செய்திருக்க வேண்டும். காரணம் **"சிந்தையில் நினைந்த பொழுதே திருநடம் இட்டாய் போற்றி"** என்று முன்னோர்களும் ஆசான் அகத்தீசன் பெருமையைப் பாடியிருக்கின்றார்கள்.

ஆசான் அகத்தீசரை பூஜை செய்யும்பொழுது **"அடியேன் இனி பிறவாதிருக்க வேண்டும்"** என்று கேட்பதே உண்மையான வேண்டுகோளாகும். ஆசான் அகத்தீசரைப் பற்றி அறிந்துகொள்வதும், அவர் திருவடியைப் பூஜித்து ஆசி பெறுவதுதான் உண்மையான கல்வி என்றும், அதுவே சாகாக்கல்வி என்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

தலைவன் யார் என்று அறியாமலும், அவன் திருவடியைப் பூஜிக்கும் முறை தெரியாமலும் இருப்பவர்கள், அவர் கற்ற கல்வி அனைத்தும் நன்றாக பிழியப்பட்ட கரும்பு சக்கைக்கு ஒப்பாகும். கரும்பு சக்கையாவது எரிபொருளுக்கு பயன்படும். இவர்கள் கற்ற கல்வி பயனற்றதாகும்.

எனவே எல்லாம் கற்ற வள்ளுவன் சொன்னதுபோல்

கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

**திருக்குறள் – கடவுள் வாழ்த்து –2.**

மும்மலமாகிய பாசதேகம் நீங்கியவன் அறிவுதான் தூய்மையான அறிவாகும். அதுபோன்ற அறிவுடையவர்கள் திருவடியைப் பூஜித்து ஆசி பெறுவதுதான் உண்மையான கல்வி ஆகும்.

வள்ளுவர் எல்லாம் கற்றவர் என்று போற்றுவது எதனால் என்றால் அறம், பொருள், இன்பம், வீடு அல்லது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய அனைத்தும் கசடறக் கற்றவர் வள்ளுவர் ஆவார். வல்லவரும் ஆவார்.

எல்லாம் கற்றோம் என்று உலகத்தில் சிலர் பெருமிதம் கொள்வார்கள். அவரைப்பார்த்து நீர் இந்த அளவிற்கு கற்றபோதிலும், யாதொரு பயனும் இல்லை. மீண்டும் உமக்கு பிறவித்துன்பம் உண்டு. மீண்டும் பிறப்பவர்கள் கற்றும் அறிவிலிகள் ஆவார்கள். ஒருவர் கற்றதன் பயன் மீண்டும் பிறக்கக்கூடாது. அவர்தான் பேராற்றல் பெற்றவர் ஆவார். அவர் கற்ற கல்வியே சாகாக்கல்வி ஆகும். எனவே நாமும் ஆசான் அகத்தீசர், ஆசான் நந்தீசர், ஆசான் திருமூலதேவர், ஆசான் கருவூர் முனிவர், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்கசுவாமிகள், எல்லாம் கற்ற வள்ளுவபெருமான் இவர்கள் திருவடியைப் பூஜித்து, பிறப்பு என்னும் பேதமையை நீக்கிக்கொள்ள வேண்டும். இதுதான் உண்மையான ஆன்மீகவாதிகள் கற்று, அறிந்து, உணர்ந்த ஒன்றாகும்.

சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு ஒன்றில்லை
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு காட்டும்
**குருவை வழிபடின் கூடலும் ஆமே.**

**திருமந்திரம் கவி – 2119.**

**குறிப்பு**

அறம், பொருள், இன்பம், வீடு அல்லது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவைகளை நாமாக கற்று அறிந்துகொள்ள முடியாது. சற்குருநாதராகிய ஆசான்

முன்செய்த தீவினை நீங்கும். முன்செய்த தீவினை நீங்கினால்தான் மனமாசற்று அறிவு தெளிவடையும். அறிவு தெளிய தெளிய நூல்களை படித்தால் அதன் நுட்பம் உணரமுடியும்.

## பூஜை செய்யும் விதிமுறைகள்

சற்குருநாதராகிய அகத்தீசரை பூஜைசெய்ய வேண்டுமென்றால் தனித்திருந்து கொசு, ஈ, எறும்பு, துர்நாற்றம் இல்லாத சமமான இடத்தில் வெண்ணிறத்துணியை விரித்து அதன்மேல் அமர்ந்து **"ஓம் அகத்தீசாய நம"** என்று காலை ஐந்து முதல் பத்து நிமிடம் நாமஜெபம் செய்யவேண்டும். மாலையிலும் பத்து நிமிடம் நாமஜெபம் செய்யவேண்டும். திசை முக்கியமில்லை. எந்த திசையை நோக்கியும் அமர்ந்து நாமஜெபம் செய்யலாம். மனம் ஒருநிலையடையவில்லை என்றால் சோர்வடையவேண்டாம். எல்லோருக்கும் அது இயல்புதான். நாமஜெபம் செய்யச்செய்யத்தான் மனம் ஒருநிலைப்படும். பல ஆண்டுகளும் ஆகலாம். அதற்காக சோர்வடைய நியாயம் இல்லை. நாம் பெறப்போகும் ஆன்மலாபம் கணக்கில் அடங்கா பெருமையுடையதாகும். பலகோடி யுகங்கள் வாழலாம். மரணமே இராது.

**ஆகவே, சற்குருநாதராகிய அகத்தீசரை பூஜிப்போம்,**
**பிறப்பில்லா பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.**

அகத்தியர் துணை

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை –2

**25.09.1999**

## இல்லறமே நல்லறம்

சருகருத்தி நீர்குடித்துச் சாரல்வாழ் தவசிகாள்
சருகருத்தில் தேகங்குன்றிச் சஞ்சலமுண் டாகுமே
வருவிருந்தோடு உண்டு உடுத்தி வளர்மனை சுகிப்பிரேல்
வருவிருந்தோன் ஈசனாகி வாழ்வளிக்குஞ் சிவாயமே.

**மகான் சிவவாக்கியர் பாடல் – கவி 532.**

### இப்பாடலின் சாரம்

இயற்கை படைப்புகளில் மனித வர்க்கமே சிறந்ததாகும். மனிதனுக்குள் எல்லாம் வல்ல இயற்கை அன்னை, சொர்க்கத்தையும், நரகத்தையும் வைத்திருக்கிறாள். நரகமாகிய மும்மலதேகம் துணைகொண்டுதான் சூட்சும தேகமாகிய ஒளிஉடம்பு பெறமுடியும். எல்லாம் வல்ல இயற்கை அன்னை பெறுதற்கரிய மானுட தேகம் தந்ததே, இல்லறத்தில் இருந்து விருந்தை உபசரித்தும், மனைவி, மக்கள், தாய், தந்தை மற்றும் உறவினர்கள் துணையோடு நித்தமும் காலையிலும், மாலையிலும் **"ஓம் அகத்தீசாய நம"** என்று நாமஜெபம் செய்து, ஆசான் அகத்தீசன் ஆசி பெறுவதற்கே.

காம விகாரம் தணிதற்கு மனைவி அவசியம். காம விகாரம் தணியாமல் மனம்

முடியாது. இல்லறத்தில் இருந்தால்தான் நமக்கு எந்த உணவு உடம்பிற்கு ஒத்துக்கொள்ளுமோ அந்த உணவை மனைவி சமைத்துத் தருவாள். அது மட்டுமல்லாமல் ஏழை எளியவர்களுக்கு பசியாற்றவும் துணையாக இருப்பாள். தாய் தந்தைக்கு செய்யக்கூடிய கடமைக்கும் துணையாக இருப்பாள். மனம் தளர்ச்சி அடையும்பொழுது பிள்ளைகளைத் தொடுதலாலும், அவர்களது மழலைச்சொல் கேட்பதாலும் மனம் ஆறுதல் அடையும். மேலும் தகுதியுள்ள நண்பர்களை விட்டிற்கு அழைத்து அவர்கள் மகிழும்படியாக உணவுவகைகள் கொடுத்து, நட்பை பெருக்கவும் அவள் துணை இருக்க வேண்டும். தகுதியுள்ள இல்லறத்தான் தான் கடவுளை அடையமுடியும்.

ஒருவன் கடவுள் தன்மை அடையவேண்டுமென்றால் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் ஆகலாம். வினை காரணமாக கூடும் அல்லது குறையும். ஆகவே வாழ்க்கையின் நிலை உணர்ந்து மக்கள், இருக்கக்கூடிய இல்லறத்தையும் மற்றும் உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலையையும் நன்கு பயன்படுத்தி, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்வார்கள். ஆகவே, நித்திய கடமைகளை சலிப்பில்லாமல் செய்துவரவேண்டும். பொருள் ஈட்டுதல், நற்காரியங்களுக்குச் செலவு செய்தல் போன்ற பொருளின் இயல்பை அறிந்து **(நிலையில்லாத பொருளைப் பெற்றால் நிலையான அறத்தைச் செய்துகொள்ள வேண்டும்)** செயல்படுவார்கள்.

இதையெல்லாம் உணராத சிலர், மனைவி மக்களை விட்டுவிட்டு அனைத்தும் பொய் என்று வீண் கற்பனை செய்துகொண்டு, அருவிகள் உள்ள மலையடிவாரத்தில் தங்கி பச்சை காய்கறி இலைதழைகளைப் பறித்தால் பாவம் வரும் என்று எண்ணி, மரத்தில் இருந்து உதிரக்கூடிய சருகுகளை மட்டும் உண்டு அருவியில் வருகின்ற தண்ணீரைக்குடித்தும், தவத்தைச் செய்ய நினைப்பார்கள். சருகையும் தண்ணீரையும் சாப்பிட்டால் ஜீரணமாகாது வயிற்றில் தங்கிவிடும், மலச்சிக்கல் ஏற்படும் மனித வர்க்கத்திற்கென்றே உணவு வகைகள் இருந்தும் அதைப்பற்றி அறியாது வெறும் சருகைத்தின்றால் கிட்டத்தடட் 15 அல்லது 20 நாட்கள் அல்லது 1 மாதம் தான் அவர்களால் உயிரோடு இருக்கமுடியும். இப்படி அநியாயமாக சாவதற்காகத் தவம் செய்வதில்லை. வாழ்வதற்காகத்தான் தவம் செய்யவேண்டும். ஆகவே உடம்பின் இயல்பைப்பற்றியும், உணவின் அவசியத்தைப்பற்றியும் நன்கு உணர்ந்தவர்கள் இப்படி ஊர்ஊராகச் சுற்றிக் காலத்தை வீணாக்கமாட்டார்கள்.

ஆகவே, ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டுமென்றால், உடம்பின் இயல்பையும் உடலைக் காப்பாற்றிக் கொள்ள உணவின் இயல்பையும் அறிந்து நித்திய கடமைகளைச் செய்தும், ஆசான் அகத்தீசரை தியானம் செய்தும் முக்தி பெறுவார்கள்.

எ.கா

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

**இல்வாழ்கை – குறள் 47.**

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்.

**இல்வாழ்க்கை – குறள் 46.**

**குறிப்பு**

1. உடம்பின் இயல்பை அறிந்து, இல்லறத்தைச் செம்மையாக நடத்தியும், விருந்தை உபசரித்தும் மற்றும் அறப்பணிகளைச் செய்து வந்தால், தலைவனைத் தேடி நாம் போகவேண்டியதில்லை. தலைவன் நம்மை நோக்கி வருவான்.
2. சிலபேர் பச்சைக் காய்கறிகளைத் தின்றால் உடம்புக்கு பலவகையான சத்துக்கள் கிடைக்கும்

வைத்திருக்கின்றார்கள். இடையில் சிலபேர் உணவு பழக்கவழக்கங்கள் அறியாது பச்சைக்காய்கறிகள் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது என்று சொல்வார்கள். பாவம் அவர்கள் சாப்பிடட்டும், குற்றமில்லை. மற்றவர்களுக்குச் சொல்லாதிருப்பதே புண்ணியமாகும்.

3. ஒருவன் கடவுள் தன்மை அடையவேண்டுமென்றால், உடம்பைப்பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அறிந்தவர்கள்தான் இந்த உடம்பை கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாக எண்ணுவார்கள். அவர்கள்தான் காமத்தை மலரினும் மென்மையானது என்று உணர்வார்கள். உணர்ந்து தன் உடம்பை காப்பாற்றிக்கொள்வார்கள். அப்படி உடம்பை காப்பாற்றிக் கொண்டவர்கள்தான் ஒளி உடம்பு பெறுவார்கள். ஒளி உடம்பு பெற்றவர்கள் கோடானுகோடி யுகம் வாழ்வார்கள். அவர்கள் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்வார்கள். எல்லாம் வல்ல இயற்கை உயிரினங்களை தோற்றுவித்தல், வாழ்வித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை மட்டும்தான் செய்ய முடியும். ஆனால் இயற்கையை வென்றவர்களோ ஐந்தொழிலும் செய்வார்கள். இதையெல்லாம் நாம் அறியவேண்டுமானால் ஐந்தொழிலும் நினைத்தமாத்திரத்தில் செய்யக்கூடிய வல்லமையுள்ள ஆசான் அகத்தீசரைப் பூஜிக்க வேண்டும். பூஜிக்க பூஜிக்க தன்னைப்பற்றி உணரக்கூடிய அறிவு வரும். தனக்குள்ளே இருக்கும் பகைமையையும்(மும்மலம்), நட்பையும்(ஒளி உடம்பு) அறிய முடியும். அறிந்து பகைமையை நீக்கி நட்பாகிய ஞானதேகம் பெறலாம். இதுவே வீடுபேறு ஆகும்.

4. உடம்பின் இயல்பை அறியாதவர்கள் விந்து விட்டால் நொந்து விடுவான் என்று சொல்வார்கள். அது **யோகிக்கே உரிய வித்தைகள்** ஆகும். இவை புரியாது விந்து விடக்கூடாது என்று மனைவியை புறக்கணிப்பார்கள். இது திருமணம் செய்வதற்கு முன்பே இந்த புத்தி இருக்க வேண்டும். திருமணம் செய்துவிட்டு மனைவியை புறக்கணித்தால் ஆன்மீக நரகத்தில் சேர்வார்கள். விந்துவாகிய சுக்கிலம் உடம்பில் தேங்கினால் கொழுப்பு மண்டிவிடும். இரத்த சுத்தி ஏற்படாது. உடல் ஆரோக்கியம் இருக்காது. உடல் உஷ்ணம் அதிகமாகும். மேலும் மூளையும் வேலை செய்யாது. எனவே உடம்பைப் பற்றி அறிந்தவர்கள் இல்லறத்திலிருந்து உடம்பைப் பொன் உடம்பாக்கி கொள்வார்கள்.

## போலி ஆன்மீகவாதிகளின் செயல்

அறிவு தெளிவில்லாத போலி ஆன்மீகவாதிகள் நல்லதொரு இல்லறத்தானை அழைத்து மனைவியிடம் கூடாதே, பந்தபாசம் ஆகாது என்பார்கள். அவன் பாவ புண்ணியம் இல்லை என்று சொல்பவனைவிட கொடுமையானவன். எனவே, அதுபோன்ற ஆன்மீகவாதிகளிடம் சென்றால் ஆன்மீக நரகம்தான் கிட்டும்.

ஆன்மீக நரகம் என்பது கடவுள் நாட்டம் உள்ளவர்கள் உடல்கூறு தெரியாது பிராணயாமம் செய்தலும், பட்டினி கிடத்தலும் மற்றும் ஊர்ஊராய் சுற்றியும் அதனால் உடல் நலிவுற்று நோய்வாய்ப்பட்டு இறப்பதே ஆன்மீக நரகமாகும்.

**எடுத்துக்காட்டு**

மாதர்தோள் சேராத தேவர் மாநிலத்தில் இல்லையே மாதர்தோள் புணர்ந்தபோது மனிதர் வாழ்வு சிறக்குமே....

**மகான் சிவவாக்கியர் பாடல்.**

## மகான் சட்டைமுனிநாதர் அவர்களின்
## குருசூத்திரம் 20ல் – பாடல்கள் 17–18

அற்பமாம் மூடர் அறியாமல் யோகம்
சொற்பமாய் எண்ணி செய்தே மரித்தார்
கற்பம் இல்லாட்டால் காணுமோ ஞானம்

பார்த்தே சிலநூல் பாடினதைக் கற்று
காத்தே அடைத்து கனயோகி என்று
சேர்த்தே சீசரைச் செய்து உபதேசம்
கூத்திது ஆகும் கூடாது முத்தியே **–18**

## நல்ல வழியை நாடுவோம்

நல்ல வழிதனை நாடு – எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு – அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு

**கடுவெளிச்சித்தர் பாடல்.**

உலகத்திலேயே சிறந்தது அகத்தியர் சன்மார்க்க சங்கம்தான். அந்த சங்கத்தார்கள் காட்டுகின்ற பாதை மிகத் தெளிவானது. காரணம், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் நன்கு உணர்ந்தவர்கள் அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்கள். இவர்கள் மனைவியிடம் அன்பு காட்டுவார்கள், தாய் தந்தையர்களை உபசரிப்பார்கள், உடன் பிறந்தவர்களுக்குப் பாதுகாவலனாக இருப்பார்கள், நல்ல நட்பைத் தேர்ந்தெடுத்து நட்பைப் பெருக்கிக்கொள்வார்கள், விருந்தை உபசரிப்பார்கள், தன்னால் முடிந்த அளவிற்கு அன்னதானம் செய்வார்கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பொறாமை காரணமாக அல்லது அறியாமை காரணமாக இகழ்ந்து பேசினாலும் பொறுத்துக்கொள்வார்கள், ஜாதி மத துவேசம் பார்க்கமாட்டார்கள், சிறந்த முயற்சி உடையவராக இருப்பார்கள், மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக வீண் ஆரவார ஆடம்பரச் செலவுகள் செய்யமாட்டார்கள், மது அருந்துதல், சூதாடுதல் போன்ற தீய பழக்கத்திற்கு அடிமையாகமாட்டார்கள், தம் குடும்பம் நலம்பெறும் பொருட்டு சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப்பதைப் பாவம் என்று எண்ணுவார்கள், கட்டாயமாக காலை சிறிதுநேரம், மாலை சிறிது நேரம் அகத்தீசன் நாமத்தைச் சொல்லி நாமஜெபம் செய்வார்கள், அகத்தீசனைப் பூஜை செய்யும் பொழுது, **"அடியேன் ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டும்"** என்று அகத்தீசனை உருகி வேண்டிக்கொள்வார்கள், மேலும் சமுதாய நடைமுறை பழக்கவழக்கங்களை அறிந்து ஒப்புரவோடு நடந்துகொள்வார்கள், தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நண்பர்கள் சிறுசிறு குற்றம் செய்தால் அதை அனுசரித்து நடந்துகொள்வார்கள், எப்போதும் நாட்டிற்குத் தொண்டுசெய்ய வேண்டும் என்று ஆர்வத்தோடு இருப்பார்கள், மற்றும் புனித நீராடுதல், கும்பாபிஷேகம் பார்த்தல் போன்ற விஷயங்களில் ஆர்வம் காட்ட மாட்டார்கள், மற்றவர்களை அதுபோன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டால் அவர்கள் விருப்பம் என்று சொல்லி அதை தடுக்க மாட்டார்கள்.

ஆகவே எங்கள் அகத்தியர் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திருந்து எங்களால் சுட்டிக்காட்டப்படும் தலைவன் அகத்தீசனைப் பூஜை செய்து ஆசிபெற்றுக் கொள்ள வேண்டும். அதுவே நல்ல வழி என்றும், எங்கள் அகத்தியர் சன்மார்க்க சங்க அன்பர்களே வல்லவர்கள் என்றும், அவர்களைச் சார்ந்திருந்து அகத்தீசன் திருவடியைப் பூஜித்து ஆசிபெற்றுக்கொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**குறிப்பு**

எங்கள் அன்பர்களிடம், யாரேனும் உங்கள் வீட்டில் செய்வினை செய்திருக்கிறார்கள்

மாற்றவேண்டும் என்றும் சொன்னால் நம்ப மாட்டார்கள். காரணம் அகத்திசன் ஆசி இருக்கும்பொழுது எந்த தீமையும் நம்மை ஆணுகாது என்று உறுதியாக இருப்பார்கள், மேலும் பயப்பட மாட்டார்கள்.

**ஆகவே, சற்குருநாதராகிய அகத்தீசரை பூஜிப்போம்,**
**பிறப்பில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.**

அகத்தியர் துணை

24.10.1999

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 3
## ஞானிகளைப் பூஜிப்போம்!
## ஞானம் பெற்று வாழ்வோம்!!

இந்த கலிகாலத்தில் ஆன்மீகவாதிகள் பல கோவில்களுக்குச் செல்கிறார்கள். புனித தீர்த்தத்தில் நீராடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் நோக்கம், ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டும் என்பதற்காகத்தான். ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டுமென்றால் தக்க ஆசான் வேண்டும். உலகத்தில் உள்ள குருமார்கள் சிலர் பொருள் வெறியர்களாகவும், ஜாதி வெறியர்களாகவும், மத வெறியர்களாகவும், காமுகர்களாகவும், வீண் ஆரவார ஆடம்பர பிரியர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஆடம்பரம் செய்வது ஆன்மீக நாட்டம் உடையவர்களை வசப்படுத்தி, பொருளாதாரத்தைச் சேகரிக்கத்தான். அவர்களுக்கு உண்மைப்பொருள் தெரியாது.

மேலும், சிலர் ஜாலம் செய்வார்கள், சிலர் பரப்பிரம்மம்போல் காவி உடையும், ஜடா முடியும், புலித்தோல் ஆசனமும், யோக தண்டமும், உருத்திராட்ச கொட்டையும் அணிந்து மக்களை ஏமாற்றுவார்கள். இவர்களிடம் செல்லுகிறவர்கள் பொருளையும் இழப்பார்கள், நல்ல இல்லறத்தையும் விட்டு வந்துவிடுவார்கள் மேலும் போலி ஆசாமிகளின் பேச்செல்லாம் நாளுக்கு நாள் மாற்றம் அடைந்துகொண்டே இருக்கும். உறுதியான கருத்துக்களைச் சொல்ல மாட்டார்கள். பாவம் அவர்களுக்கே உண்மைப்பொருள் தெரியாது. இவர்களின் தன்மையை உயர வேண்டுமென்றால் தலைவனாகிய அகத்தீசன் ஆசி இருக்க வேண்டும்.

ஆசான் அகத்தீசனைப் பூஜை செய்தால் ஞானிகளின் பெருமையை உணர முடியும். ஞானிகளின் பெருமையை உணர்ந்தவர்கள் போலி ஆடம்பர ஆசாமிகளைப் புரிந்துகொள்ள முடியும். உண்மைப்பொருள் அறிந்த குருவருள் இல்லையென்றால், இதுபோன்ற மூடர்களிடம் அகப்பட்டு நரகத்திற்குச் செல்வார்கள். உண்மைப்பொருள் அறிந்த ஆசானிடம் சென்றால் எல்லா நன்மையும் உண்டாகும். குருவருள் விரும்பாதவர்களுக்குக் கேடுதான் வரும்.

**ஆசான் அகத்தியர் ஞானசைதன்யம் 51ல் நான்காம் கவியில் 3, 4 ஆகிய வரிகளில்**

**என்ன படித்தாலும் குருஇல்லாச் சீடன்**
**என்ன பிரயோசனமாம் அலைந்து சாவான்.**

என்று ஆசான் அகத்தீசர் தம் பாடலில் பாடியுள்ளார்கள். ஆகவே, ஞானிகளை வணங்கினால் நாம் செய்த பாவங்கள் தீரும், பாவங்கள் தீர்ந்தால் அறியாமை நீங்கி, தெளிவான அறிவு உண்டாகும். தெளிவான அறிவுள்ளவர்கள்தான் நல்வினை தீவினையை அறிய முடியும். நல்வினை தீவினையை அறிந்தவர்கள்தான் தீவினையை நீக்கி நல்வினையைப் பெருக்கிக் கொள்வார்கள். நல்வினையைப் பெருக்கிக் கொண்ட மக்கள்தான் வீடுபேறு அடைவார்கள்.

வீடுபேறு அடைய விரும்புகிறவர்கள், **மகான் ரோமரிஷி அவர்கள் இயற்றிய பூஜா விதி 7ல் கவி என் 2ல் பாடிய பாடல்**

**காப்பான கருவூரார் போகநாதர்**
**கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்**
**மூப்பான கொங்கணரும் பிரம்மசித்தர்**
**முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்**
**கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்**
**கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்**
**வாப்பான வாதத்திற்கு ஆதியான**
**வாசமுனி கமலமுனி காப்புத்தானே.**

மேற்கண்ட பாடலில் காப்பான கருவூரார் போகநாதர் என்றும், கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர் என்றும், மூப்பான கொங்கணரும் பிரம்மசித்தர் என்றும், முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர் என்றும், கோப்பான கோரக்கர் பதஞ்சலியார் என்றும், கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர் என்றும், வாப்பான வாதத்திற்கு ஆதியான வாமுனி(வாசமுனி என்பது துர்வாசர் ஆகும்) கமலமுனி என்றும் ஆசான் ரோமரிஷி அவர்கள் தம் கவியில் பாடியுள்ளார்கள். இவர்கள்தான் இல்லறம் மற்றும் துறவத்திற்கு பாதுகாவலர்களாக இருப்பார்கள்.

மாமேரு எனத்திகழும், இந்த 14 ஞானிகள் அடங்கிய இந்த பாடலை தினமும் காலையிலும், மாலையிலும் படித்து பாராயணம் செய்தும், தினமும் பூஜைசெய்தும் வந்தால், மனித வர்க்கம் அடையமுடியாத, அறியமுடியாத, உணர முடியாத ஒன்றை நாம் உணர முடியும். மேலும், பொல்லாத வறுமை தீரும், கொடிய நோய் தீரும் தீராத நியாமான வழக்குகள் தீரும், குடும்பத்தில் அமைதி ஏற்படும். தீய நட்பு நம்மை சார்ந்திருந்தாலும் தானே விலகிவிடும். பண்புள்ள புத்திரப்பாக்கியம் அமையும், சொந்த வீடு இல்லாதவர்களுக்குச் சொந்த வீடும் அமையும். தீராத கடன் சுமையும் தீரும், செல்வமும் பெருகும், தகுதியுள்ள நட்பும் அமையும், தீய பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தாலும், தீய பழக்கங்கள் நீங்கிவிடும். கொடிய பகையும் நீங்கும், மன அமைதி ஏற்படும். எதையும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய சிறப்பறிவு உண்டாகும். மேலும் ஆன்மா மாசுபடுவதை அறிந்து, மாசை நீக்கிக்கொள்ளவும் அறிவு உண்டாகும். நாம் மேற்கொள்ளும் காரியங்கள் எதுவானாலும் குறிப்பாக உத்தியோகம், தொழில், வியாபாரம், விவசாயம், இன்னும் குடும்பத்தில் சுபகாரியங்கள் எதுவானாலும் தடையில்லாமல் நடக்கும். எதிலும் வெற்றி! எப்போதும் வெற்றி! வெற்றியோ வெற்றி!

குறிப்பு

தவம் என்பதே ஞானிகளின் திருவடியைப் பூஜிப்பதுதான் தவமாகும். மற்றதெல்லாம் அவமாகும். ஆகவே அகத்தீசனைப் பூஜிப்போம்! அருள்பெற்று வாழ்வோம்!!.

**மகான் சட்டைமுனிநாதர் அவர்கள் இயற்றி ஞானவிளக்கம் 51–ல் 21–ஆம் பாடல்**

**போடுவது திலதமடா மூலர் மைந்தர்**
**போகர் கருவூராரைத் தியானம் பண்ணு**
**நாடுநகர தனிலுள்ள ஜீவசெந்து**
**நாதாக்கள் சித்தருக்கும் தோணாதையா**

**எண்ணாதே ஒருநாளும் தப்போ இல்லை**
**தேடினபேர் பொருள்கோடி தனமீந்தாலும்**
**செப்பாதே இக்கருவை(ரகசியத்தை) உலகத்தோர்க்கே.**

**இப்பாடலின் சாரம்**

வைணவர்கள் நெற்றியில் நாமம் இடும்பொழுது **"ஓம் நமோ நாராயணா"** என்றோ **"ராமா"** என்றோ நாமமிட்டுக்கொள்வார்கள். சைவர்களோ நெற்றியில் விபூதி வைக்கும்பொழுது **"ஓம் விக்னேஷ்வரா"** என்றோ **"ஓம் முருகா"** என்றோ **"ஓம் நமச்சிவாய"** என்றோ அல்லது **"சிவ சிவ"** என்றோ நெற்றியில் விபூதி வைத்துக்கொள்வார்கள். அது அவரவர்களின் கொள்கையாகும்.

மகான் சட்டைமுனிநாதர் அவர்களோ நெற்றியில் விபூதி வைக்கும் பொழுது **"ஓம் திருமூலதேவாய நம"** என்றும் அவர் மைந்தராகிய காளாங்கிநாதரை **"ஓம் காளாங்கிதேவாய நம"** என்றும் **"ஓம் போகதேவாய நம"** என்றும், **"ஓம் கருவூர் தேவாய நம"** என்றும் நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லி நெற்றியில் விபூதி வைத்தால் கணக்கில் அடங்காப் பிறவிகள் எடுத்துச் செய்த பாவங்கள் பொடிபட்டுப்போகும். மேலும், ஞானியும் ஆவார்கள்.

இந்த உலகத்தில் உள்ள சில ஆன்மீக வாதிகளோ மற்றும் உள்ள சில கல்வியாளர்களோ இதை யாரும் பின்பற்றுவதில்லை காரணம் அவர்களுக்கு யாரும் இந்த உயர்ந்த உபதேசத்தை உபதேசிப்பதில்லை. அப்படியே சிலர் உபதேசித்தாலும், சிலர் அதை கடைப்பிடிப்பதில்லை. அது அவரவர்களின் வினைப்பயன். இந்த உயர்ந்த மார்க்கத்தை ஆசான் சட்டைமுனிநாதர் ஏதோ ஏட்டில் எழுதி வைத்துவிட்டார் என்று லேசாக நினைத்துவிட வேண்டாம். இந்த மார்க்கம் புண்ணியம் செய்த மக்களே உணர்வார்கள். மற்றவர்களோ இதை உணரமாட்டார்கள். அது அவர்களின் வினைப்பயனாகும்.

இந்த உயரிய மார்க்கத்தை மகான் சட்டைமுனி அவர்கள் சொன்னதே உலக ஆன்மீகப் பிள்ளைகளே பிழைத்துக் கொள்ளுங்கள் என்று கருணையோடு சொன்னதாகும். எனவே காலை 5 மணிக்கு எழுந்து காலைக்கடன் முடித்துவிட்டு வெண்ணிறத்துணியை விரித்து, அதன்மேல் அமர்ந்து திருவிளக்கு ஏற்றியும், நறுமணம் உள்ள பத்தி ஒன்றை வைத்தும், காலையில் 10 நிமிடம், மாலையில் 10 நிமிடமும் **"ஓம் அகத்தீசாய நம"**, **"ஓம் திருமூலதேவாய நம"**, **"ஓம் காளாங்கிதேவாய நம"**, **"ஓம் போகதேவாய நம"**, **"ஓம் கருவூர் தேவாய நம"** என்று திரும்பத்திரும்ப நான்கு மகான்களின் நாமத்தை நாமஜெபம் செய்து வந்தால் விடுபேறு அடையலாம்(முக்தி பெறலாம்) மேற்கண்ட பாடல் வைரம் பெருந்திய தீவினையாகிய மரத்தை வேரோடு வெட்டித்தள்ளும் கோடாலி ஆகும்.

சில ஆன்மீகவாதிகள் பலப்பல சித்தச் தத்துவ நூல்களைப் படித்தும், பக்தி நூல்களைப் படித்தும் இதில் என்ன சொல்லியுள்ளது, அதில் என்ன சொல்லியுள்ளது என்று ஆராய்ச்சி செய்து கொண்டே இருப்பார்கள். பூஜை செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு முதுமை வந்துவிடும். அவர்களுடைய ஆராய்ச்சிகளுக்கும் முதுமை வந்துவிடும். ஆகவே எந்த ஆன்ம லாபமும் பெறமுடியாமல் வீணாகி விடுவார்கள். மேற்கண்ட நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லி பூஜை செய்து வந்தால் எந்த நூலையும் படிக்கவேண்டிய அவசியம்

பல சாஸ்திர நூல்களையும், தோத்திர நூல்களையும் படித்து, பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார்கள். இவர்கள் ஒரு எல்லைக்கு உட்பட்டே இருந்துவிடுவார்கள். சலிப்பில்லாமல் தினமும் ஞானியர்களைப் பூஜைசெய்து வருபவர்கள் எல்லையில்லாப் பேரானந்தம் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள்.

**நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லி பூஜிப்போம்,**
**மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று இன்புற்று வாழ்வோம்.**

**பெண்கள் நெற்றியில் பொட்டு(திலகம்) வைக்கும்பொழுது என்ன சொல்ல வேண்டும்**

பெண்கள் நெற்றியில் பொட்டு வைக்கும்பொழுது **"ஓம் திருமூலதேவாய நம", "ஓம் காளாங்கிதேவாய நம", "ஓம் போகதேவாய நம", "ஓம் கருவூர் தேவாய நம"** என்று சொல்லி நெற்றியில் பொட்டு வைக்க வேண்டும். இவ்வாறு காலை, மாலையில் நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லிவிட்டு, நெற்றியில் பொட்டு வைத்தால், உடல் ஆரோக்கியம் உண்டாகும், திருமணம் தடைபட்டவர்களுக்கு திருமணம் நடக்கும், பண்புள்ள புத்திரபாக்கியம் அமையும், தகுதியுள்ள கணவன் அமைவான், இனம் புரியாத கவலைகள் நீங்கும், தன்னம்பிக்கை உண்டாகும், எந்த துன்பத்தைக் கண்டும் சோர்வடையமாட்டார்கள், எதையும் தாங்கிக்கொள்ளும் மன உறுதி ஏற்படும், உதிரப்போக்கு, வெள்ளைப்படுதல், மலச்சிக்கல் நீங்கும், வீண் ஆடம்பரத்தில் நாட்டம் கொள்ளமாட்டார்கள், மற்றவர்கள் பிரச்சினையில் கவனம் செலுத்தமாட்டார்கள், தாம் உண்டு தன்வேலை உண்டு என்று தம் கடமையைச் செய்வார்கள், இன்னும் அநேக நற்குணங்களும் அமையும். மேலும், ஞானமும் சித்திக்கும்.

**ஞானியர்களின் திருவடியைப் பூஜிப்போம், ஞானம் பெற்று வாழ்வோம்.**

அகத்தியர் துணை

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 4

**22.11.1999**

## மனம் ஒருநிலைப்பட தியானமே முக்கியம்

தியானம் செய்ய வேண்டும் என்றால், மனம் ஒருநிலைப்பட வேண்டும். மனம் ஒருநிலைப்பட வேண்டும் என்றால், உடம்பைப்பற்றியும் உயிரைப்பற்றியும் அறிந்திருக்க வேண்டும். நமது தோற்றமே ஆண் பெண்ணின் காமத்தின் சேர்க்கையால் வந்ததாகும். ஆகவே, நமக்குக் காமவிகாரம் இருப்பது இயல்பே. இந்த காமவிகாரம் தணிவதற்கு, புனிதத்தலங்கள் சென்றாலோ, புனித நீராடினாலோ தணியாது. அதற்குத்தான் பெரியோர்கள் ஆண்பெண் சேர்க்கையாக இல்லறம் அவசியம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆண்பெண் சேர்க்கையாகிய இல்லற ஈடுபாடு இல்லையென்றால், உடம்பு கெட்டுவிடும். இல்லறத்தில் ஈடுபட்டவர்கள் இல்லற வாழ்வில் ஈடுபடாவிட்டால் உடல் உஷ்ணம் மிகுதியாகும், மலச்சிக்கல் ஏற்படும், இரத்த சுத்தி ஏற்படாது, மூளையும் வேலை செய்யாது, கண் எரிச்சல் ஏற்படும்.

எனவே, இயற்கையின் படைப்பே பெண்பாலையும் ஆண்பாலையும் சேர்த்தே தோற்றுவித்திருக்கிறது. உடம்பும் உயிரும், ஆண் பெண் சேர்க்கையில் வந்தது என்று அறிந்து அதன் போக்கிலேயே சென்று, தினமும் காலை 5 மணிக்கே எழுந்து காலைக்கடன் முடித்துவிட்டு

வணங்கி, அடியேனுக்கு ஞானம் சித்திக்க வேண்டும் என்றும், மனம் ஒருநிலைப்பட்டு உமது திருவடியைப் பற்றி தியானிக்க வேண்டும் என்றும், உடம்பையும் உயிரையும் பற்றி அறிந்துகொள்ள அருள் செய்ய வேண்டும் என்றும், உடல்மாசுபற்றி அறிந்து, உமது திருவருள் கடாட்சத்தால், உடல்மாசு நீங்க அருள்செய்ய வேண்டும் என்றும், உயிராகிய ஆன்மஜோதியைக் காணவேண்டும் என்றும், ஆன்மஜோதியைக் காண்பவர்கள்தான், ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாகும் என்பதை அறிந்து, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள் என்பதை உமது திருவருளால் அறிந்து கொள்ள வேண்டும்.

இயற்கையை நன்கு உணர்ந்த ஆன்மீகவாதிகள், இல்லறமே நல்லறம் என்று சொல்வார்கள். ஏனென்றால், ஒருவன் விடுபேறு அடையவேண்டுமென்றால், இருபது வருடம் ஆகலாம். இல்லறம்தான் ஜென்மத்தைக் கடைத்தேற்றத் துணையாக இருக்கும். இயற்கையைப்பற்றி அறியாதவர்களோ, பிரம்மச்சாரியம் கடைப்பிடிக்கவேண்டும் என்பார்கள். பாச பந்தம் கூடாது என்பார்கள். இதை நம்பி, ஆண்களும் பெண்களும் சிலர் இளம் வயதிலேயே துறவு மேற்கொள்வார்கள். வாழ்க்கை முழுவதும் மனப்போராட்டமாகவே இருக்கும். அவர்களால் மன ஒருநிலையோடு தியானமும் செய்ய முடியாது, தர்மமும் செய்ய முடியாது. ஆகவே வாழ்நாள் முழுவதையும் வீணாக்கிக்கொள்வார்கள்.

எனவே, துறவை விரும்புகிறவர்கள், சுத்த ஆன்மீகவாதிகளிடம் சென்று உபதேசம் பெறவேண்டும். அப்படிபெற வாய்ப்பில்லையென்றால் **"ஓம் அகத்தீசாய நம"** என்று காலை 10 நிமிடமும், மாலை 10 நிமிடமும் நாமஜெபம் செய்தால் ஆசான் சற்குருநாதராகிய அகத்தீசர் உணர்வோடும் உணர்ச்சியோடும், நாடி நரம்புகளில் சார்ந்திருந்து நமக்கு ஆசானாக இருந்து உணர்த்துவார்கள். இதுவே முக்தியடைவதற்கு உற்ற துணையாக இருக்கும். இதை விட்டு விட்டு போலி ஆன்மீகவாதிகளிடம் சென்றால், பந்தபாசம் கூடாது என்பார்கள், பட்டினி கிடக்கவேண்டும என்பார்கள், பிராணாயாமம் செய்ய வேண்டும் என்பார்கள்; ஊர்ஊராகச் சுற்றச் செய்வார்கள். உனக்கு உள்ள சொத்துக்களை எல்லாம் என்னிடம கொடு என்பார்கள், நமது பாவச்சுமை எல்லாம் பூரணமாக வாங்கிக்கொள்வார்கள். நாமும் தெளிவடைய முடியாது, ஏமாற்றப்படுவோம், அவர்களும் தேறமாட்டார்கள்.

## தியானம் செய்யும் முறை

தியானம் செய்யவேண்டும் என்றால், சமமான இடத்தில் வெண்ணிறத் துணியை விரித்து, அதன்மேல் அமர்ந்து நாமஜெபம் செய்ய வேண்டும். அங்கு கொசு, எறும்பு, ஈ, புகை மற்றும் துர்நாற்றம் இருக்கக் கூடாது. நறுமணம் உள்ள பத்தி இருக்கவேண்டும். முடிந்தால் திருவிளக்கு வைத்துக்கொள்ளலாம். இங்கு திசை முக்கியமல்ல. பக்திதான் முக்கியம். காலை மாலை உறுதியாகத் தியானம் செய்கின்ற மக்களுக்குத் தன்னிடம் உள்ள குணப்பண்புகளைப் பற்றியும், குணக்கேடுகளைப்பற்றியும் அறிந்துகொள்ள முடியும். நமது மனமே, நம்மைப்பற்றி உயர்த்தியே எண்ணிக்கொண்டிருக்கும். இது பாவத்தின் சின்னமாகும்.

தினமும் தியானம் செய்யச் செய்யத்தான் நம்மிடம் **"யான்"** என்ற கர்வம் உள்ளதா? பொறாமை உள்ளதா? பேராசை உள்ளதா? ஜாதிவெறி உள்ளதா? மதவெறி உள்ளதா? வஞ்சனை உள்ளதா? பழிவாங்கும் எண்ணம் உள்ளதா? லோபித்தனம் உள்ளதா? பிறரை மதிக்கக் கற்றுக்கொண்டோமா? இன்னும் அநேக பலஹீனங்களைப்பற்றியும் அறிந்துக்கொள்ள முடியும். தியானம் செய்யாவிட்டால், நமது மனம் நம்மை உயர்த்தியே எண்ணி, நரகத்தில் தள்ளிவிடும்.

எனவே, அன்னதானம் செய்வோம். தினமும் அகத்தீசனைக் குறித்து தியானம் செய்வோம். அகத்தீசன் ஆசி பெறுவோம். இன்புற்று வாழ்வோம்.

## இயற்கையின் செயல்பாடுகள்

ஆண் பெண் சேர்க்கையால், உயிரும், உடம்பும் சுக்கில சுரோணிதம் என்ற திரவப்பொருள் சேர்ந்து கரு கூடுகிறது(ஆண்பால் உள்ள சுக்கிலமும், பெண்பால் உள்ள சுரோணிதமும் ஆக இரண்டுமே பஞ்சபூதங்களின் சாரமாகும்). பின்பு 10 மாதம் தீட்டு வெளியாகாமல் கரு வளர்கிறது. பின் குழந்தை பிறக்கிறது. குழந்தை மென்மையும் சற்றுத் திடப்பொருளாகவும் இருக்கும். பிறகு வளரவளர மென்மையும் திடப்பொருளாகவும் வளர்கிறது. பிறகு நாளுக்கு நாள், பாலர் பருவம், வாலிபம், முதுமையுமாக பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டு நரை, திரை வரும். உடம்பு தளர்ந்து போகும். உடம்பை விட்டு ஆன்மா பிரிந்துவிடும். உயிர் தோன்றும்போது உடம்பும் உயிருமான சுக்கில, சுரோணிதமாகிய திரவப்பொருளாக இருந்த இந்த உடம்பு, திடப்பொருளாக மாறி இறந்துபோகிறது. இது மிக நுட்பமான இயற்கையின் செயல்பாடாகும். இதையெல்லாம் நன்கு அறிந்தவர்கள் ஆசான் அகத்தீசர் ஆவார்.

ஆகவே, இயற்கையின் இயல்பே பரிணாம வளர்ச்சியின் இயக்கமாகும். நாம் இதை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்றால், இயற்கையை வென்ற ஆசான் அகத்தீசரை பூஜைசெய்ய பூஜைசெய்ய மனித வர்க்கம் உணரமுடியாத ஒன்றை நமக்கு உணரச்செய்து அதற்குரிய பரிபக்குவத்தையும் தந்து, பரிணாம வளர்ச்சிக்கு அகப்படாத ஒளி உடம்பாகிய ஜோதி உடம்பு தருவார். அந்த உடம்பைப் பெற்றவர்கள் கோடானுகோடி யுகங்கள் வாழலாம், மரணமே இராது. இந்த வாய்ப்பு மனித வர்க்கத்திற்கு இருந்தும், தக்க ஆசானை நாடாமலும், தானும் அதைப்பற்றிச் சிந்திக்காமலும், வீணே காலத்தைக் கழித்தால், கபமும், இருமலும், முதுமையும், நரைதிரையும் வந்து நலிந்து, அழிந்து போவதைத்தவிர வேறு வழியில்லை. எனவே ஆசான் அகத்தீசனைப் பூஜித்து அழிவில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.

### குறிப்பு

இந்த உடம்பும் தாயின் உடம்பு, இந்த உயிரும், தாயின் உயிர். குழந்தை பிறக்கும் வரையில் தாய் இறக்காமல் இருந்தால், குழந்தை உயிரோடு இருக்கும். தாய் இறந்துவிட்டால் குழந்தையும் கருப்பையிலேயே இறந்துவிடும். ஆகவே குழந்தை பிறக்கும் வரையிலும் தாயின் உயிர்தான். மேலும் வாழ்வதும் தாயின் உயிர்தான்.

## பரிணாம வளர்ச்சியும் அதன் இயல்பும்

ஜடப்பொருள் நீங்கலாக மற்ற எல்லா ஜீவராசிகளும் அதனதன் அமைப்பின்படி பரிணாம வளர்ச்சிக்குட்பட்டிருக்கும். இதை உண்மைப்பொருள் அறிந்தவர்கள் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது. அதன் போக்கில்தான் சென்று சாகவேண்டும். ஆனால் மனிதன் மட்டும் தடுக்கவும் வெல்லவும் முடியும்.

**ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்**
**நீர்பறவை நாற் காலோர் பப்பத்துச் – சீரிய**
**பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த**

ஆக 84 லட்ச தோற்றபேத ஜீவராசிகளாகும். மேற்கண்ட பாடலில் 7 வகை தோற்றத்தைப்பற்றி உள்ளது. இந்த ஜீவராசிகள் நான்குவகை யோனி வாயிலாக தோன்றும். குறிப்பாக கருப்பை முட்டை மற்றும் வெப்பம், வியர்வைகளால் தோன்றும்.

தரையில் ஊர்ந்து செல்வது 11 லட்சம் தோற்றபேதங்கள் உதாரணமாக பாம்பு, பல்லி, தேள், நட்டுவாக்கிளி, புழு போன்றவைகள். மானுடம் 9 லட்சத் தோற்ற பேதமுடைய மனிதர்கள். நீர்வாழ் ஜீவராசிகள் பத்துலட்ச தோற்ற பேதமுடையவைகள். உதாரணமாக மீன், திமிங்கலம், முதலை, தவளை போன்றவை. பறவை இனங்கள் 10 லட்ச தோற்ற பேதமுடையவை. உதாரணமாக புறா, காகம், கிளி போன்றவை. நாற்காலோர்(நான்கு காலுடைய ஜீவராசிகள்) பத்து லட்ச தோற்ற பேதங்கள். உதாரணமாக யானை, குதிரை, மான் போன்றவை.

நமது கண்களுக்குப் புலப்படாத 14 லட்சம் தேவர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் ஆசான் சுப்ரமணியரால் படைக்கப்பட்ட தேவர்கள் ஆவார்கள். தாவரங்கள் மட்டும் 20 லட்சம் தோற்ற பேதங்கள் கொண்டவை. மனிதர்கள் உட்பட மற்ற எல்லா ஜீவராசிகளும் உயிர்வாழ இயற்கை கொடுத்தது. புல், செடி, கொடி, மரம் நான்குதான். புல் வகை என்பது குறுகிய கால பலன் தரக்கூடிய கம்பு, நெல், கேழ்வரகு, சோளம் போன்றவை. செடி என்பது மிளகாய், தக்காளி, கொத்தவரைக்காய், வெண்டைக்காய், கத்தரிக்காய் போன்றவை. கொடி வகைகள் : அவரைக்காய், புடலங்காய், பீக்கங்காய், சுரக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய் மற்றும் சில கொடி வகை மூலிகைகளும், வேலிப்பருத்தி முதல் உண்டு. மரம் : மா, தென்னை, பனை ஆகிய கணக்கில் அடங்கா வகைகள்.

### குறிப்பு 1

மனிதனுக்கும் மற்றும் எல்லா ஜீவராசிகளுக்கும் பசி இயற்கையே. அதனதன் உடல் இயல்புக்கேற்ப உணவும் இயற்கையே, அதை உண்ணுவதும் இயற்கையே, அதை உண்டபின் ஜீரணமாகக்கூடிய இயல்பும் இயற்கையே. உணவில் உள்ள சத் அசத்தை பிரித்து, அசத்சை நீக்கி, சத்தை மனிதனுக்கு 72 ஆயிரம் நாடி நரம்புகளையும் உரமேற்றுவதும் இயற்கையே. பின்பு அதன் காரணமாக மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்த கரணங்களும் இயற்கையே. மெய், வாய், கண், மூக்கு, செவி, என்று சொல்லப்பட்ட பொறிபுலன்கள் அடங்கிய தத்துவம் 96ம் இயற்கையின் செயல்பாடுகளே. நாம் நமக்கு பசி வந்ததாகவோ, நாம் உண்ணுவதாகவோ நினைக்ககூடாது. பசியும் இயற்கையே, நாம் உண்ணுவதும் இயற்கையே, அறுசுவையும் இயற்கையே, உறங்குவதும் இயற்கையே, உறங்கி விழிப்பதும் இயற்கையே, உடல் இன்பமும் இயற்கையே, கரு கூடி பின் குழந்தை ஆவதும் இயற்கையே. ஆக அனைத்தும் இயற்கையின் செயல்பாடாகும்.

மேற்கண்ட அத்தனையும் எல்லாம்வல்ல இயற்கை அன்னையால் படைக்கபட்டவையாகும். எல்லாம்வல்ல இயற்கை அன்னை படைக்கும்போதே பரிணாம வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் தந்து நம்மை அநியாயமாகக் கொன்றுவிடுவாள். இதை வெல்லுகின்ற வல்லமை ஆசான் அகத்தீசனுக்கே உண்டு. ஆசான் ஆசி பெறாமல் இயற்கை அன்னையின் செயல்பாட்டை அறிந்துகொள்ளமுடியாது. அவள் செயல்பாடே காப்பதுபோல் காத்து, அறுசுவைகளையும் மற்றும் உடல் இன்பத்தையும் தந்து நம்மைக் கொன்றுவிடுவாள். எனவே இயற்கை அன்னையை வெல்வதற்கு "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்வோம். ஞானம் பெற்று இன்புற்று வாழ்வோம்.

### குறிப்பு 2

ஆன்மீகவாதிகள் ஆரம்பகாலத்தில் பூஜைசெய்யும்பொழுது, மனம் ஒருநிலைப்படாது என்பது உண்மையே. அதற்கு சோர்வடைய வேண்டியதில்லை. எந்த அளவிற்கு பூஜையும், அறப்பணிகளும் செய்கிறார்களோ அந்த அளவிற்கு மனப்போராட்டங்களைப்பற்றி அறிந்து கொள்ளலாம். மனப்போராட்டங்களைப்பற்றி அறிந்து கொண்டாலே மனம் ஒருநிலைப்படுவது பற்றி அறிந்துகொள்ள முடியும்.

### குறிப்பு 3

இயற்கை அன்னை அந்த காமதேகம் தந்து அதன் உள்ளே வீடுபேறு அடைவதற்குரிய அற்புத சக்தியை படைத்திருக்கிறாள். புறதேகமாகிய காமதேகம் துணையில்லாமல், அகதேகமாகிய சூட்சுமதேகத்தை ஒளிஉடம்பு ஆக்கமுடியாது. எனவே, ஒன்றை துணைக்கொண்டுதான் மற்றொன்றை வளர்க்க முடியும்.

மேற்கண்ட தத்துவங்கள் அத்தனையையும் படித்து உணரவேண்டும் என்றால் அகத்தீசனை பூஜை செய்தால் தான் உணரமுடியும்.

**ஆகவே, சற்குருநாதராகிய அகத்தீசரைப் பூஜிப்போம்.**
**பிறப்பில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.**

அகத்தியர் துணை

01.12.1999

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 5
## அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்களின் சிறப்புகள்

இந்த கலிகாலத்தில் உண்மைப்பொருள் உணர்ந்த அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்கள் அகத்தியர் சன்மார்க் சங்கத்தை தலைமை தாங்கி நடத்தி வருவதால் அங்கே வருகின்ற மக்களுக்கு பசியாற்றவும் வாய்ப்புள்ளது. அதேசமயம் உண்மைப்பொருள் அறிந்து கொள்ளவும் வாய்ப்புள்ளது. மற்றமற்ற இடத்தில் எல்லாம் ஆன்மீகம் என்ற பெயரில் உயிர்பலி கொடுத்தலும், வீண் ஆரவார சடங்குகளும் மற்றும் ஊர்ஊராக சுற்றவும் சொல்வார்கள். அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில் மட்டும் பசியாற்றி வைத்தல் மற்றும் ஆசான் அகத்தீசர்தான் கடவுள் என்று அகத்தீசனை பூஜை செய்யச் சொல்வார்கள். மேலும், ஜீவகாருண்யமாகிய மனிதாபிமானம், மனித நேயம் போன்ற கொள்கைகளை சொல்வார்கள். ஜீவகாருண்யம் அல்லது மனித நேயம் அல்லது மனிதாபிமானம் இல்லாத வழிபாடுகள் எல்லாம் நெல்லில் பதறுபோன்று பயனற்றுப் போகும்.

ஆன்மீகவாதிகள் முன்னேற வேண்டுமென்றால் காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் கொசு, ஈ, எறும்பு மற்றும் துர்நாற்றம் இல்லாத சமமான இடத்தில் வெண்ணிற துணியை விரித்து அதன்மேல் அமர்ந்து **ஆசான் அகத்தீசன் நாம ஜெபமாகிய ஓம் அகத்தீசாய நம என்று பூஜை செய்ய வேண்டும்.** அப்படி செய்தால் பொல்லாத வறுமை தீரும். எது நன்மை, எது தீமை என்று உணர முடியும். உணர்ந்து தீவினையை நீக்கி நல்வினையை பெருக்கிக்

சொல்லுதல், மற்றவரை மதிக்காது இருத்தல், தன்னை உயர்த்தி நினைத்தல், தாமே பெரிய அறிவாளி என்று பெருமிதம் கொள்ளுதல், மற்றவர்களை அறிவில்லாதவர் என்று குறைத்து மதிப்பிடுதல் போன்ற குணக்கேடுகள் எல்லாம் நீங்கும்.

மனைவியை மதித்தல், மனைவி அறியாமல் செய்த குற்றத்தை மன்னித்தல், அனுசரித்து நடந்து கொள்ளுதல், தாய், தந்தை செய்த உதவியை நன்றி மறவாது கடமையை செய்தல், சகோதரர்களின் சொத்தை அபகரிக்காது இருத்தல், தன் மனைவியின் தாய், தந்தையாகிய மாமன்–மாமியை தம் தாய்–தந்தைபோல் பாராட்டுதல், உதவி செய்தல் மற்றும் பொருள் சேர்க்கும் பொழுது நீதிக்குட்பட்டு பொருள் சேர்க்க வேண்டுமென்ற சிறப்பறிவும் மேலும் விருந்தை உபசரித்தல், தன்னால் முடிந்த அளவிற்கு ஏழைகளுக்கு அன்னதானம் செய்தல் மற்றும் உறவினர்களும், நண்பர்களும் பண்பாளன் என்று போற்றும்படி வாழ்தல், சிறந்த முயற்சி உள்ளவராக இருத்தல், வரவுக்குட்பட்டு செலவு செய்தல், வீண் ஆடம்பர செலவுகளில் கவனம் செலுத்தாது இருத்தல், மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக ஆடை, ஆபரணங்களில் மிகுதியாக கவனம் செலுத்துதல், தேவையில்லாத ஆடம்பர பொருட்களை வீட்டில் குவித்தல் மற்றும் தகுதியில்லாத நண்பரோடு பழகுதல், அதன் காரணமாக தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல் போன்ற தீமைகள் எல்லாம் ஆசான் அகத்தீசரை பூஜை செய்வதால் நீங்கிவிடும். எனவே ஒவ்வொரு நாட்களையும் கிடைத்தற்கரிய ஒரு பொன்னான நாளாக கருதி அறப்பணிகளையும், தியானமும் செய்யவேண்டும். இதுவே ஜென்மத்தை கடைத்தேற்ற துணையாக இருக்கும்.

## குறிப்பு

1. யார் ஒருவர் தினமும் ஆசான் அகத்தீசரை கட்டாயமாக, உறுதியாக, சத்தியமாக பூஜை செய்து வருகிறார்களோ அவர்கள் மனதில் எப்போதும் அமைதி இருக்கும். அவர்கள் கடும் கோபம் கொள்ள மாட்டார்கள். மற்றவர்களிடம் குறைகள் காணமாட்டார்கள். எப்போதும் மனம் நிறைவாகவே இருக்கும்.
2. நம்மிடம் குடிப்பழக்கம் இருக்கலாம், சூதாடும் பழக்கம் இருக்கலாம், புலால் உண்ணும் பழக்கம் இருக்கலாம், தேவையில்லாமல் அதிகமாக பேசுதல், இன்னும் ஆநேக குணக்கேடுகளும் இருக்கலாம், இதையெல்லாம் ஒரு நாளில் நீக்கிவிட முடியாது. எத்தனை அறநூல்கள் படித்தாலும் நீங்காது. பூஜையாகிய வழிபாடுகள் செய்தால்தான் குணக்கேடுகள் எல்லாம் நாளுக்குநாள், நாளுக்குநாள் நசிந்து, மெலிந்துவிடும். உடனே எல்லா குணக்கேடுகளும் நீங்கும் என்று நினைப்பது மனம் சோர்வு தரும். பூஜை செய்யச் செய்ய சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு துணை கொண்டுதான் திருக்குறள், திருவருட்பா, திருமந்திரம் மற்றும் உள்ள அநேக அறநூல்களையும் படித்து உணர முடியும். இல்லையென்றால் படிக்கலாமே தவிற படித்து உணர முடியாது. உணர வேண்டுமென்றால் தினமும் பூஜை செய்ய வேண்டும்.
3. ஆசான் அகத்தீசன் ஆசி இருந்தால்தான், சிறுதெய்வங்களுக்கு ஆடு, கோழி வெட்டினால் நமது குடும்பத்திற்கும் நமக்கும் நன்மை உண்டாகும் என்று நினைப்பது பாவச்செயல் என்று உணர முடியும். உயிர்கள்பால் கருணை இருந்தால்தான் நமக்கும் நமது குடும்பத்தார்க்கும் பல நன்மைகள் உண்டாகும் என்று உணர முடியும்.
4. நாட்டுக்கு நாடு சந்தேகம், வீட்டுக்கு வீடு சந்தேகம், கணவன் மனைவிக்குள்

சந்தேகம், அதிகாரிகளுக்குள் சந்தேகம், அமைச்சர்களுக்குள் சந்தேகம், வாங்கக்கூடிய பொருட்களின் மீது சந்தேகம், எதை எடுத்தாலும் சந்தேகம் சந்தேகம் தான். ஆக இந்த சந்தேகம் தான் உலகத்தில் பலவகையான கேடுகளை தருகிறது. எதிலும் சந்தேகமில்லாது உண்மையை அறிய வேண்டுமென்றால், அருள் பலமும், புண்ணிய பலமும் வேண்டும். அருள் பலமும், புண்ணிய பலமும் பெற வேண்டுமென்றால் ஆசான் அகத்தீசரின் ஆசி பெறவேண்டும்.

**ஆகவே ஆசான் அகத்தீசனை பூஜிப்போம்,**
**ஆசிபெற்று வாழ்வோம்.**

அகத்தியர் துணை

22.12.1999

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 6
# கருகத்துகள் தொகுப்பு

1. துறையூர் ஜெமீந்தார் மேல்நிலைப்பள்ளி நிர்வாகி அவர்களின் வீட்டின் மதில் சுவற்றில் கீழ்க்கண்ட 20 பகுதியாக ஓங்காரக்குடிலாசான் அவர்களின் கருத்துக்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஆன்மீக அன்பர்களும், பெரியோர்களும், தாய்மார்களும் படித்து பயனடையும்படி திருவடி பணிந்து கேட்டுக்கொள்கிறோம்.
2. **ஓம் அகத்தீசாய நம, ஓம் நந்தீசாய நம, ஓம் திருமூலதேவாய நம, ஓம் கருவூர்தேவாய நம** ஆகிய இந்த நான்கு மகான்களின் நாமத்தை, தினமும் சொல்லி வந்தால் எல்லா நன்மைகளும் உண்டாகும். காரணம் இந்த நான்கு மகான்களும் மரணமில்லா பெருவாழ்வு பெற்ற முனிவர்கள் ஆவார்கள். இவர்களை தினமும் நினைத்தால், அக்கணமே வந்து அஞ்சேல் மகனே என்று அருள் செய்யும் வல்லமை இவர்களுக்கு உண்டு. ஆகவே, இவர்களின் நாமங்களை சொல்வோம். அருளாசி பெற்று நலமுடன் வாழ்வோம்.
3. மனிதர்கள்தான் ஆறறிவு படைத்தவர்கள் ஆவார்கள். அவர்கள்தான் கடவுளை அறியவும், அடையவும் முடியும். மேலும் கடவுளும் ஆகலாம். அதற்கு நல்ல மனம் வேண்டும். நல்ல மனம் வேண்டுமென்றால் நல்லவரும் வல்லவருமாகிய ஆசான் அகத்தீசனை "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்தால் தீய எண்ணங்களும், தீய பழக்க வழக்கங்களும் சிறிதுசிறிதாக நம்மைவிட்டு விலகிவிடும். விலகினால்தான் நல்ல மனம் வரும். நல்ல மனமும் அருள்பலமும் வேண்டுமென்றால் மாதம் ஒருவருக்காவது அன்னதானம் செய்ய வேண்டும். அப்படி செய்ய வாய்ப்பில்லை என்றால் விருந்தை உபசரிக்கலாம்.
4. அறப்பணி செய்வதற்கு குடும்பத்தில் உள்ளவர்கள் ஆதரவு வேண்டும். ஆதரவு வேண்டுமென்றால், குடும்பத்தில் உள்ளவர்கள், அவர்கள் மனம் மகிழும்படி நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் மேற்கொள்ளும் விருந்து உபசரித்தல், அன்னதானம் செய்தல் போன்ற காரியங்களுக்கு அவர்கள் துணையாக இருப்பார்கள். குடும்பத்தார்கள் ஆதரவு இருந்தால் இல்லறமும் சிறப்பாக நடைபெறும். நாம்

மேற்கொள்ளும் ஞானவாழ்வும் வெற்றி பெறும். "**ஓம் அகத்தீசாய நம**" என்போம் குடும்பத்தார்கள் போற்றும்படி வாழ்வோம்.

5. காப்பான கருவூரார் போகநாதர்
        கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்
   மூப்பான கொங்கணரும் பிரம்மச்சித்தர்
        முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்
   கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்
        கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
   வாப்பான வாதத்திற்கு ஆதியான
        வாசமுனி கமலமுனி காப்புத்தானே.

**ரோமரிஷி பூஜாவிதி 7ல் கவி–2.**

6. மேற்கண்ட பாடலில் 14 மகான்களின் நாமம் உள்ளது. இந்த பாடலை எழுதி வைத்துக்கொண்டு, தினமும் படித்து வந்தால், வறுமை தீரும், செல்வம் பெருகும், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். திருமணம் தடைப்பட்ட பிள்ளைகளுக்கு திருமணம் நடைபெறும். என்ன விவசாயம் செய்தால் லாபம் உண்டாகுமோ அதை நமக்கு ஞானிகள் உணர்த்துவார்கள். எனவே, இவர்களை பூஜிப்போம், அனைத்து நலனையும் பெறுவோம்.

7. அகத்திய மாரிஷி நமா என்றென்றோது
        அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்
   அகத்தியரே காஷாய வேட மீவார்
        அப்போது சித்தரெல்லாம் கைக் கொள்வார்கள்
   அகத்தியரைத் தெண்டனிட்டு மேரு செல்ல
        யாருக்கும் தடையில்லை அரசே யென்பார்
   அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி
        ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம் ஆணையாச்சே.

**–கொங்கணர் கடைக்காண்டம் 500ல் 76**

8. நாம் பலபிறவிகளில் ஆள்பலத்தால், அதிகாரபலத்தால், யான் என்ற கர்வத்தால் பலபாவங்கள் செய்திருப்போம். அந்த பாவங்கள் தீரவேண்டுமென்றால் தினமும் காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்தால் பல பிறவிகளில் செய்த பாவங்களெல்லாம் பொடிப்பொடியாகிவிடும். ஆகவே தினமும் பூஜை செய்வோம், பல நன்மை பெற்று நீடு வாழ்வோம்.

9. நாம் மனைவிமீது சந்தேகப்பட்டு கொடுமைகள் செய்வோம். இதற்கு காரணம் அருள்பலமும், புண்ணியபலமும் இல்லாமையே ஆகும். அருள்பலமும், புண்ணிய பலமும் இருந்தால் எதிலும் திடீரென்று முடிவெடுக்காமல் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டுமென்ற சிறப்பறிவு உண்டாகும். எந்த பாவத்தையும் செய்துவிட்டால் மீண்டும் அதை மாற்ற முடியாது. பாவம் செய்வதற்கு முன்னே புண்ணியவானாகிய அகத்தீசனை "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்தால், பாவம்செய்வதற்கு முன்னே தடுத்து ஆட்கொள்வார்கள்.

10. நமக்கு தக்க சமயத்தில் உதிவ செய்யக்கூடிய நண்பர்கள் மீது சந்தேகப்படுவோம். உண்மையாக தொண்டு செய்யும் வேலையாட்கள் மீது சந்தேகப்படுவோம். இந்த

நோய் தீர வேண்டுமென்றால், தினமும் "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்ததால் எது உண்மை, எது பொய் என்று அறிந்து கொள்ளலாம். நீடிய ஆயுளும் உண்டாகும். மன அமைதியும் வரும்.

11. ஒருசிலர் உங்கள் வீட்டில் செய்வினை செய்து வைத்துவிட்டார்கள் என்றும், இந்த செய்வினையை இரத்த கலப்பு உள்ளவர்கள் செய்தார்கள் என்றும், நண்பர்கள் செய்தார்கள் என்றும் சொல்லி விடுவார்கள். இந்த பேச்சை நம்பினால் உடன் பிறந்தவர்களின் பாசத்தையும் நட்பையும் கெடுத்துக் கொள்வார்கள். இதற்கு பரிகாரம் "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்தால் செய்வினை என்பது ஒரு மனப்பிரம்மையே என்று ஆசான் அகத்தீசர் நமக்கு உணர்த்துவார்கள்.
12. ஒருசிலர் மற்றவர்க்கு துன்பம் தந்து அதில் மகிழ்ச்சி அடையும் வன்மனம் இருக்கும். இதற்கு காரணம் பலஜென்மங்களில் செய்த பாவங்கள்தான். நம்மால் பிறர் துன்பப்பட்டால் அதை உணரக்கூடிய பக்குவம் வேண்டுமென்றால், தினமும் "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்தால், நம்மால் பிறர் துன்பப்படும்போது அதை உணரக்கூடிய அறிவு வரும். அறிவு வந்தால் அப்போதே அவன் கடவுளாகலாம்.
13. திருக்குறளை பார்த்தால் கடவுளை பார்த்ததாக அர்த்தம். திருக்குறளை தொட்டால் கடவுளின் திருவடிகளை தொட்டதாக அர்த்தம். திருக்குறளை படித்தால் கடவுளிடம் தொடர்பு கொண்டதாக அர்த்தம். திருக்குறள் படிப்பதை கேட்டால் கடவுளின் பெருமையை கேட்டதாக அர்த்தம். திருக்குறள் பரப்பிரம்ம சொரூபியான சிவபெருமானே இயற்றியதாகும். அதில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் தெளிவாக சொல்லியிருப்பதால் அதை பார்ப்பதும், தொடுவதும், படிப்பதும், படிக்க கேட்பதும் புண்ணிய செயல்களாகும். தெய்வத்தமிழில் சொல்லப்பட்டிருப்பதால் நமது பிள்ளைகளை தமிழை கற்க செய்ய வேண்டும். கற்றால் நமது பிள்ளைகள் கடவுள்தன்மை அடைவார்கள். எனவே, திருக்குறளை போற்றுவோம்! பூஜிப்போம்! வினைகள் நீங்கி வெற்றி பெறுவோம்!!

எ.கா

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

ஔவையார்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

– இடைக்காடர்

14. தினமும் காலை, மாலை ஐந்து நிமிடமாவது "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்ய வேண்டும். பூஜை செய்ய தவறினால் எல்லா குணக்கேடுகளும் இருள்போல் நம்மை வந்து மூடிக்கொள்ளும். ஆகவே இதிலிருந்து விடுபடவேண்டுமென்றால் கட்டாயமாக சத்தியமாக "**ஓம் அகத்தீசாய நம**" என்று **பூஜை செய்வோம்! புகழுடனும் பொருளுடனும் வாழ்வோம்!!.**
15. நமக்கு துன்பம் வந்த காலத்தில், நாம் சொல்லாமலே குறிப்பால் அதை உணர்ந்து நமக்கு நல்ல மனதோடு உதவிகள் செய்திருப்பார்கள். அந்த உதவியை ஒருசிலர் மறந்து விடுவார்கள். அது குற்றமில்லை. நமக்கு உதவிகள் செய்தவர்கள் ஏதேனும்

அவர்களுக்கு இடையூறு செய்தால் அந்த பாவத்தை நீக்க பரப்பிரம்மத்தாலும் முடியாது. எனவே நன்றி உணர்வோடு வாழ **"ஓம் அகத்தீசாய நம"** என்று நாமஜெபம் செய்வோம். நன்றி மறவாது நடந்து கொள்வோம்.

16. தற்பொழுது வெளிநாடு செல்ல வேண்டும், வெளிநாடு செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் வெளிநாடு சென்றவர்களோ, ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அத்தனை பேரும் இங்கே பட்ட துன்பத்தைவிட அதிகமாக துன்பப்படுகிறார்கள். வெளிநாடு சென்று திரும்பி வரும்பொழுது வெறுங்கையோடு வருகிறார்கள். இங்கே வாங்கிய கடனையும் கட்டமுடியாமல், சொத்தையும் இழந்து விடுகிறார்கள். எனவே **"ஓம் அகத்தீசாய நம"** என்று நாமஜெபம் செய்தால் உள்நாட்டிலேயே ஒரு வேலைவாய்ப்பு அமைந்து நல்லபடி வாழலாம். எனவே, **அகத்தீசனை பூஜிப்போம்! ஆசிபெற்று வாழ்வோம்!!**

17. சில பெண்கள் அதிக ஆடைகளை வாங்குவதும், நிறைய நகைகளை வாங்குவதும், தேவையில்லாத ஒன்றாகும். கையில் பணமிருந்தால் அதை வங்கியில் போட்டால் அதற்கு வட்டியும் கிடைக்கும். பணத்திற்கும் பாதுகாப்பு உண்டு. இந்த பணம் நாட்டிற்கும் நன்மை தரும், வீட்டிற்கும் நன்மை தரும். எனவே **"ஓம் அகத்தீசாய நம"** என்று நாமஜெபம் செய்தால் எது எது அவசியமோ அதில் மட்டும் கவனம் செல்லும், மற்றதில் கவனம் செல்லாது. எனவே, **அகத்தீசனை பூஜிப்போம்! ஆசிபெற்று வாழ்வோம்!!.**

18. ஒரு வீடு கட்டுவதற்கு முன், அதற்குத் தேவையான பணம் கையில் வைத்து கொண்டு எந்த அளவிற்கு வீடுகட்ட வேண்டுமோ அதை மட்டும் கட்டவேண்டும். அதிகமாக வீட்டை விரிவுபடுத்தினால் கடன் சுமை வரும். கடைசியில் வீட்டை விற்று கடன்கட்ட வேண்டிய சூழ்நிலைவரும். எனவே **அகத்தீசனை பூஜிப்போம்! அளவறிந்து வாழ்வோம்!!** நாம் குடியிருக்க வீடு கிடைக்காத கஷ்டத்தில் உருவர் நல்மனதோடு வாடகைக்கு வீடு கொடுப்பார். அவர் விரும்பும் காலத்தில் வீட்டை காலி செய்து கொடுப்பது நல்லதாகும். அதை தவிர்த்து காலி செய்து தரமாட்டேன் என்று அழிவழக்கு பேசுவது பாவமாகும். எனவே **அகத்தீசனை பூஜிப்போம்! பண்புடன் வாழ்வோம்!!**

19. பொய்சொல்லாதே, பொறாமைபடாதே, புறம்கூறாதே, பிறரைகோபமாக பேசாதே, பிறர்சொத்தை அபகரிக்க நினைக்காதே என்று சொன்னாலும் நமது அறிவுக்கு படாது. ஆகவே **"ஓம் அகத்தீசாய நம"** என்று நாமஜெபம் செய்தால் மேற்கண்ட குற்றங்களெல்லாம் நம்மால் உணரமுடியும். இல்லையென்றால் அறிவுரையெல்லாம் ஏட்டளவிலேயே நின்றுவிடும். எனவே **அகத்தீசனை பூஜிப்போம்! பழியில்லா வாழ்வை மேற்கொள்வோம்!!**

20. ஒரு சிலருக்கு கையில் நிறைய பொருள் வசதி இருக்கும். இந்த பொருளை அறப்பணிகளுக்கு செலவு செய்து புண்ணியத்தை பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வராது. இதற்கு காரணம் கொடிய நோயான லோபித்தனம். இந்த லோபித்தனம் தீரவேண்டுமென்றால் அறக்கடவுளான ஆசான் அகத்தீசனை தினமும் பூஜை செய்து வந்தால் செல்வம் உள்ளபோதே அறப்பணி செய்து ஆன்மலாபம் பெற்று கொள்ளலாம்.

வரிசையாக சொல்லப்பட்ட 20 கருத்துக்களில் சிலருக்கு மனது புண்படலாம். ஆகவே பெரியோர்களும், தாய்மார்களும் மன்னித்துக்கொள்ளும்படி திருவடி பணிந்து

**குறிப்பு** : மேற்கண்ட கருத்துக்கள் மதிற்சுவற்றில் உள்ளபடியே அமைத்திருக்கிறோம்.

அகத்தியர் துணை

20.01.2000

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 7

## புண்ணிய செயல்களின் விவரம்

1. தாய்–தந்தை செய்த உதவிகளை நன்றி மறவாது அவர்களிடம் அன்புடன் நடந்து கொள்வதே புண்ணியமாகும்.
2. மனைவி அறிந்தோ அறியாமலோ குற்றம் செய்தால் அதை மன்னித்து மறப்பது புண்ணியமாகும்.
3. ஒருவரிடம் வேலை வாங்கும் போது அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் தருவதும் புண்ணியமாகும்.
4. உற்ற நண்பர்களுக்கு துன்பம் வந்த காலத்தில் உதவி செய்வது புண்ணியமாகும். விருந்தை உபசரித்து அவர்கள் மனம் மகிழும்படி நடந்து கொள்வதும் புண்ணியமாகும்.
5. நமக்கு மனது சோர்வு இருந்தாலும், நம்மை நோக்கி வரும் அன்பர்களிடம் இனிமையாக பேசுவதும் புண்ணியமாகும்.
6. வரவுக்கு உட்பட்டு செலவு செய்ய வேண்டுமென்ற எண்ணமும் புண்ணியமாகும்.
7. ஜாதிதுவேசம் பார்க்காமல் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்று எண்ணி அன்பு காட்டுவது புண்ணியமாகும்.
8. நாம் பேசும்பொழுது நமது பேச்சால் மற்றவர்கள் மனம் புண்படாது இருக்க வேண்டுமென்று நினைப்பது புண்ணயமாகும்.
9. நம்மீது பகை கொண்டவர்கள் நம்மிடம் வரும்பொழுது நாம் பகைஉணர்வை வெளிப்படுத்தாது இனிமையாக பேசுவது புண்ணியமாகும்.
10. எப்பொழுதும் உடன்பாடு உள்ளவர்களிடம் மனம்விட்டு பேசுவது எல்லோருக்கும் இயல்புதான். நம்மிடம் முரண்பாடு உள்ளவர்களிடம் மனம்விட்டு பேசி பகைமையை நீக்கிகொள்வது புண்ணியமாகும்.
11. புண்ணியவானாகிய ஆசான் அகத்தீசரை தினமும் பூஜித்து வருவதும் புண்ணியமாகும். இயற்கை அன்னை நமக்கு தானியங்களையும், காய்கறிகளையும், கீரை வகைகளையும், பல்வேறு கனிகளையும் கொடுத்திருக்கின்றாள். இந்த உணவுவகைகள் போதாது என்று மற்ற உயிர்களை கொன்று அந்த உடம்பை உண்ணாதிருப்பது புண்ணியமாகும். நம்மிடம் இருக்கக்கூடிய அறிவே தெளிவில்லாமல் இருப்பதால் மேலும் போதை பொருட்களும் மற்றும் மதுபானம் அருந்தி அறிவை மாசுபடுத்திக்கொள்ளாதிருப்பதும் புண்ணியமாகும்.
12. வருகின்ற செய்திதாள்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தற்கொலை போன்ற செய்திகள் மிகுதியாக வருவதால் அதை படித்தால் மனம் அமைதி கெடும். எனவே அதை படிக்காதிருப்பது புண்ணியமாகும்.
13. ஒருசிலர் குளிக்கும்போதோ அல்லது படுக்கும்பொழுதோ தங்கச்சங்கிலி, கைக்கடிகாரம், மோதிரம் ஆகியவைகளை எப்பொழுதும் வைக்கவேண்டிய இடத்தில் வைக்காமல் மாற்றி வைத்துவிட்டு மற்றவர்கள்மேல் பழிசுமத்துவார்கள். மேலும், தம்

சந்தேகப்படுவார்கள். மேலும் காவல்துறையில் புகார் கொடுப்பார்கள். எதையும் நிதானித்து முடிவெடுப்பதே புண்ணியமாகும்.

14. அறப்பணி செய்வோருக்கு வீடு அவசியம்தான். அதற்காக பெரிய வீடாக கட்டி ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று நினைக்காமல் இருப்பதும் புண்ணியமாகும்.
15. திருக்குறள், திருமந்திரம், திருவருட்பா, திருவாசகம் போன்ற அறநூல்களை பயபக்தியுடன் தொடுவதும், படிப்பதும் புண்ணியமாகும்.
16. சாலையில் செல்லும் காலத்தில் ஆணி, உடைந்த கண்ணாடிகள், கற்கள், முட்கள், வாழைப்பழத்தோல் போன்றவை கிடக்கும் அதை அப்புறப்படுத்துவது புண்ணியமாகும்.
17. கண்ட இடங்களில் சுகாதாரகேடு வரும்படி அசுத்தம் செய்யாதிருப்பதும் புண்ணியமாகும்.
18. வாரம் ஒருநாள் ஆசான் அகத்தீசன் ஆசி பெறுவதற்காக காலையிலும் மாலையிலும் உணவு உண்ணாது மதியம் ஒரு வேளை மட்டும் உணவு உண்ணுவது புண்ணியமாகும்.
19. எல்லாம்வல்ல பரப்பிரம்மமாகிய மெய்ப்பொருளை அறியாத மூடர்களை காணாதிருப்பதும் புண்ணியமாகும்.
20. மெய்ப்பொருளை கற்றுணர்ந்த ஞானிகளுக்கு தொண்டு செய்து ஆசி பெறுவது புண்ணியமாகும்.
21. பிறப்பென்னும் பேதமை நீங்க சிறப்பென்னும் செம்பொருள் காண்பது புண்ணியமாகும்.
22. பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொற்கள் ஆகிய நான்கு தீமைகள் நீங்கி வாழ்வது புண்ணியமாகும்.
23. பொருளின் இயல்பே நிலையில்லாதது என்று அறிந்து பொருள் இருக்கும்பொழுதே அறப்பணி செய்து ஜென்மத்தை கடைத்தேற்றிக்கொள்வது புண்ணியமாகும்.
24. நாம் காணுகின்ற அத்தனையும் அழியக்கூடியது என்று அறிந்து அதை கண்டு மயங்காது தெளிவடைவது புண்ணியமாகும்.
25. நாம் காணுகின்ற பொருள்களில் உண்மையும் உண்டு, பொய்யும் உண்டு. அதில் உண்மையை மட்டும் காண்பது புண்ணியமாகும்.
26. இந்த உடம்பு பொய்தான். அதில் னண்மைப்பொருள் இருப்பது அறிந்து அந்த உண்மைப்பொருளாக தாம் ஆகிவிடுவது புண்ணியமாகும்.
27. ஆன்மநாட்டம் உள்ளவர்கள் உண்மை உணர்ந்த ஆசானை தேடி அலைவார்கள். அவர்களுக்கு உண்மை பொருள் உணர்ந்த ஆசான் கிடைத்தால் அதுவும் புண்ணியமாகும்.
28. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக தீயநட்போடு சேர்ந்திருந்தாலும் அந்த நட்பு நம்மை விட்டு நீங்கி விடுவது புண்ணியமாகும்.
29. குடிப்பழக்க்ம், சூதாடும்பழக்கம் போன்ற பழக்கங்களிலிருந்து விடுபடுவதும் புண்ணியமாகும்.
30. சில பெண்கள் இளம் வயதிலேயே விதவையாகிவிடுவார்கள். அவர்கள் விரும்பினால் மறுமணம் செய்துவைப்பது புண்ணியமாகும்.
31. வியாபாரம் செய்யும் பொழுது நாம் விற்கக்கூடிய பொருட்களை நியாயமான விலைக்கு விற்பது புண்ணியமாகும்.
32. செத்துபிறக்கின்றவர்களை சமாதி வைத்து அதை பூஜை செய்யாதிருப்பதும் புண்ணியமாகும்.

33. நமக்கு தக்கசமயத்தில் உதவி செய்தவர்களை சாகும்வரை மறவாதிருப்பதும் புண்ணியமாகும்.
34. உண்மை பொருளறிந்த ஆசானுக்கு பண்புள்ள சீடன் அமைந்தால் அதுவும் புண்ணியமாகும்.
35. தகுதியுள்ள நண்பர்கள் சிலசமயத்தில் அறியாமையால் குற்றம் செய்தாலும் அதை அனுசரித்து நடப்பதும் புண்ணியமாகும்.
36. நமது செயல்பாடுகள் மற்ற உயிர்கள் மகிழ்ச்சியடையும்படி இருந்தால் அதுவும் புண்ணியமாகும்.
37. நமக்கு துன்வம் வந்த காலத்தில் கடன் கொடுத்து உதவி செய்தவர்களுக்கு நாம் பெற்ற கடனை திரும்ப கொடுத்துவிடுவது புண்ணியமாகும்.
38. நமக்கு விடு இல்லாத காலத்திலும், வியாபாரத்திற்கு கடை இல்லாத காலத்திலும், வாடகைக்கு விடும் கடையும் கொடுத்து உதவியவர்களுக்கு அவர்களுக்கு தேவையான காலத்தில் கடை மற்றும் விட்டை காலி செய்து கொடுப்பதும் புண்ணியமாகும்.
39. நமது வீட்டில் டேப்ரெக்கார்டர், ரேடியோ, டி.வி போன்றவைகளை பயன்படுத்தும் காலத்தில் அக்கம்பக்கம் உள்ளவர்கள் சத்தம் அதிக என்று சொன்னால் சத்தத்தை குறைத்து வைத்துக்கொள்வது புண்ணியமாகும்.
40. நாம் பேருந்தில் செல்லும் காலத்தில் கர்ப்பஸ்திரீகள், வயதானவர்கள், ஊனமுற்றவர்கள், கையில் குழந்தையோடு நின்று பயணம் செய்கின்றவர்களுக்கு நாம் அமர்ந்திருக்கும் இடத்தை விட்டுக்கொடுப்பது புண்ணியமாகும்.
41. நமது விட்டில் உள்ள பசு அல்லது எருமை பால்கறக்கும் முன்னர் கன்றுக்கு பால்விட வேண்டும் என்று நினைப்பது புண்ணியமாகும்.
42. தாய்ப்பால் இல்லா குழந்தைகளுக்கு பசும்பாலே தாய்ப்பால்போல் பாதுகாப்பாதால் நாம் பசுவை பாதுகாப்பது புண்ணியமாகும்.
43. கடவுளால் படைக்கப்பட்ட ஆடு, மாடு, கோழி மற்றும் ஜீவராசிகளை கடவுளுக்கே வெட்டி பலி கொடுப்பது பாவமாகும். அதுபோன்ற காரியங்கள் செய்யாதிருப்பது புண்ணியமாகும்.
44. நாம் கற்றறிந்த உண்மையை மற்றவர்களுக்கு மனதில் பதியுமாறு சொல்வதும் புண்ணியமாகும்.
45. நாம் அனுபவிக்கக்கூடிய இன்பங்கள் அனைத்தும் பிறரால் பழிக்கப்படாதிருப்பது புண்ணியமாகும்.
46. ஆசான் சுப்ரமண்யர் மேல் பக்தி கொண்டவர்களுக்கும், சமூக சான்றோர்களுக்கும் உதவி செய்வது புண்ணியமாகும்.
47. உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வது பாவமாகும். கலப்படம் செய்யாதிருப்பது புண்ணியமாகும்.
48. சில பெண்கள் இளம் வயதிலேயே விதவையாகிவிடுவார்கள். அவர்கள் சுபகாரியங்களில் கலந்துகொள்ளக்கூடாது என்றும், சுபகாரியங்களுக்குச் செல்லும் காலத்தில் அவர்கள் எதிரே வரக்கூடாது என்றும், அப்படி வந்தால் சுபகாரியங்கள் தடைபடும் என்றும் சொல்வது கருணை இல்லாத செயல்களாகும். அவ்வாறு அவர்கள் மனம் புண்படும்படி பேசாதிருப்பது புண்ணியமாகும்.
49. உண்மைப் பொருள் உணர்ந்த ஆசான் நமக்கு மனமுவந்து உபதேசித்தால் அது அளவில்லா புண்ணியமாகும்.

50. மனிதன் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு காரணம் மும்மலமாகிய களிம்புதான். களிம்பு அற பாடுபடுவது புண்ணியமாகும்.
51. கடவுளால் செய்யப்பட்ட திருக்குறளை தொட்டு வணங்குவதும், படிப்பதும், அதை பரப்புவதும் புண்ணியமாகும்.
52. குடும்பத் தலைவன் தன் மனைவியின் தாய், தந்தையாகிய மாமன், மாமிக்கு பாதுகாவலராக இருப்பது புண்ணியமாகும். அதே போல குடும்பத் தலைவி தன் கணவனுடைய தாய், தந்தையாகிய மாமன், மாமி மகிழும்படி நடந்துகொள்வது புண்ணியமாகும்.
53. ஆண்களை படைத்த அதே கடவுள்தான் பெண்களையும் படைத்திருக்கிறான். பெண்களை மதித்து நடப்பதே புண்ணியமாகும்.
54. மனித வர்க்கம் அத்தனையும் கடவுளால் படைக்கப்பட்டதாகும். எனவே, உள்ளும், புறமும் வேற்றுமையில்லாமல், சமமாக மதிப்பவர்கள் மனிதர்களில் தெய்வமாகும். அவர்களை கண்டு தரிசிப்பதே புண்ணியமாகும்.

**மேற்கண்ட அனைத்து புண்ணிய செயல்களுக்கும் ஆசான் அகத்தீசர் ஆசி இருக்க வேண்டும்.**

**ஆகவே, ஆசான் அகத்தீசரை பூஜிப்போம்,**

**ஆசிபெற்று இன்புற்று வாழ்வோம்.**

அகத்தியர் துணை

**19.02.2000**

## அனுபவ விளக்கப் பத்திரிக்கை – 8

## சித்தர்கள் வழிபாட்டின் நன்மைகள்

லபிக்கவழி(சித்திக்க வழி) சொல்லுகிறேன் ஆத்தாளே நந்திதிருமூலரையும்
லபிக்கக்காளாங்கியையும் ஆத்தாளே நாதாந்த போகரையும்
சத்திசிதம்பரமும் ஆத்தாளே சட்டமுனி பூசைசெய்வாய்
உத்தமக்கொங்கணரை ஆத்தாளே உசிதமாய் பூசைசெய்வாய்
கருவூரார் ஆனந்தர் ஆத்தாளே கண்டு வழிதெரிந்தோர்
ஒரு நெறியாய் இவர்களையும் ஆத்தாளே உண்மையுடன் பூசைசெய்தால்
சண்டாளன் ஆனாலும் ஆத்தாளே தான் வேதைகாண்பானே
கண்டசேதி சொன்னேன் நான் ஆத்தாளே.

**–மகான் அழுகண்ணர்.**

### மேற்கண்ட கவியின் சாரம்

இயற்கைப் படைப்புகளில் மனிதவர்க்கம்தான் உயர்ந்ததாகும். காரணம் மரணமில்லாப் பெருவாழ்வு பெறுவதற்குரிய அறிவு இவர்களுக்குத்தான் உண்டு. மனிதனுக்குள் சொர்க்கமாகிய மோட்சத்தை எல்லாம் வல்ல இயற்கை அன்னை அமைத்திருக்கிறாள். அப்படி அமைத்திருந்தாலும் அதை நம்மால் உணர முடியாது.

இல்லையென்றால் நம்மால் அதை அறிந்துகொள்ள முடியாது. அறிந்தவர்கள் நமக்குச் சொல்ல வேண்டுமென்றால் அதற்குரிய கொள்கைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். பசியாற்றி வைத்தலும், ஞானிகள் யார் என்று அறிந்து அவர்களின் திருவடியை உருகி பூஜித்தலும் வேண்டும்.

பூஜை செய்ய, பூஜை செய்ய சிறப்பறிவு உண்டாகும். அன்னதானம் செய்து வந்தால், புண்ணியமும் உண்டாகும். பூஜைசெய்வதால் அருள் பலமும், அன்னதானத்தால் புண்ணிய பலமும் சேரும். புண்ணிய பலமும், அருள் பலமும் சேரச்சேர எது நன்மை? எது தீமை? என்று உணர முடியும். நன்மையானவற்றைக் கடைப்பிடிப்பதும், தீமையானவற்றை நீக்கவும் நமக்கு ஆற்றல் உண்டாகும். உயிர்க்கொலை செய்வதாலும், புலால் உண்பதாலும் மனம் மென்மை ஏற்படாது.

பொருள் சேர்க்கும் பொழுது, இது நீதிக்குட்பட்டதா? அல்லது பிறர் வயிறெரிய வந்ததா? என்று உணர முடியும். மேலும் பொருளாதாரத்தின் இயல்பும் அறியலாம். இயல்பு அறிந்தவர்கள்தான் தனக்குப் பொருள் சேரும்பொழுதே அறப்பணிகள் செய்து ஆன்மபலம் பெற்றுக்கொள்வார்கள். ஆன்மபலம் பெற்றுக்கொண்டவர்களுக்குத்தான் முன்செய்த பாவத்தால் வருகின்ற தீமைகளை உடைத்தெறியும் வல்லமை உண்டு. மேலும் ஆன்ம ஜெயமாகிய (உயிராகிய மூச்சுக்காற்று புருவமத்தியாகிய சுழிமுனையில் ஒடுங்குவதாகும்) ரகசியத்தையும் அறிந்துகொள்வார்கள்; உடலின் மாசையும் அறிந்துகொள்வார்கள்; அறிந்துகொண்டால் மட்டும் போதாது. உடல் மாசாகிய களிம்பு நீங்க வேண்டும்; நீங்கினால் இந்த உடம்பு ஒளி உடம்பாகும்.

ஒளி உடம்பு பெறவேண்டுமென்றால், மகான் அழுகண்ணர்சித்தர் சொன்னதுபோல் நந்தீசர், திருமூலதேவர், காளாங்கிநாதர், போக மகாரிஷி, மகான் சட்டைமுனிநாதர், கொங்கண மகரிஷி, கருவூர் தேவர், சுந்தரானந்தர் மேற்கண்ட எட்டு மகான்களும் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றவர்கள் ஆவார்கள். மேலும் இவர்கள் திருவடியை யார் உருகி பூஜை செய்கின்றார்களோ அவர்கள் பாவங்களையெல்லாம் பொடிபடச் செய்து, மரணமில்லாப் பெருவாழ்வு பெறச்செய்வார்கள். அவர்கள் ஆணைப் பெண்ணாக்குவார்கள், பெண்ணை ஆணாக்குவார்கள். இறந்தவர்களையும் உயிர்பெறச் செய்வார்கள். இப்பேர்பட்ட ஆற்றல் பெற்றவர்களை அறிந்து பூஜை செய்வதே உண்மையான கல்வியாகும். மற்ற கல்வியெல்லாம் உணவு, உடை மற்ற வசதிகளுக்காக பயன்படுமே தவிர பிறவிப் பிணிக்கு மருந்தாக அமையாது.

எனவே, மகான் அழுகண்ணர் அவர்கள் உலகமக்கள்பால் கருணை கொண்டு இந்த பாடலை அமைத்துள்ளார்கள். மேற்கண்ட ஞானிகளைத் தினமும் பூஜித்து வந்தால் பஞ்சமா பாவிகளாகிய சண்டாளர்களுக்கே ஞானம் சித்திக்கும் என்று சொல்கிறார். இந்த காலத்தில் ஆன்மிகம் என்ற பெயரில் சிறுதெய்வங்களுக்கு உயிர்க்கொலை செய்தும், ஆரவாரச் சடங்குகள் செய்தும் ஆன்மபலம் பெறாது தன் பிறவியைப் பயனற்றதாக்கிக் கொள்கிறார்கள். வரப்போவது ஞானச்சித்தர் காலம் என்பதால் மேற்கண்ட ஞானியர் வழிபாடுதான் நிலைத்து நிற்குமே தவிர மற்றதெல்லாம் ஆடிக்காற்றில் இலவம்பஞ்சுபோல் நிலைபெறாது ஓடிவிடும்.

**குறிப்பு**

மேற்கண்ட எட்டு மகான்களில் யாரை அழைத்தாலும் அச்சணமே வந்து "அஞ்சேல்" என்று சொல்லக்கூடிய வல்லமை அவர்களுக்கு உண்டு. ஆகவே ஞானியர்களைப் பூஜிப்போம், ஞானம் பெற்று இன்புற்று வாழ்வோம்.

## தமிழ்த்தாயின் தவப்புதல்வர்
## மு. கருணாநிதி அவர்களின் சாதனை

அய்யன் வள்ளுவப்பெருமான் முக்காலமும் உணர்ந்த முனிவரும், மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற பெருந்தகையும் ஆவார். அவர் இயற்றிய திருக்குறளைத் தொடுதலும், படித்தலும், உணர்தலுமாகிய செயல்களே உண்மையான ஆன்மீகமாகும். கடவுள் யார்? என்று தேடித்திரிவதைவிட திருக்குறள்தான் தெய்வீக நூல் என்றும், அதை இயற்றிய அய்யன் வள்ளுவப் பெருமானே கடவுள் என்றும் போற்றி வணங்கிவந்தால் உலகோர் அடைய முடியாத பேரின்ப விட்டைப் பெறலாம்.

தமிழக முதலமைச்சரும் தமிழ்த்தாயின் தவப்புதல்வருமான மு. கருணாநிதி அவர்கள் திருவள்ளுவரை அய்யன் வள்ளுவன் என்று சொல்லியுள்ளார். அய்யன் என்றால் தலைவன் என்று பொருள்படும். ஈராயிரம் ஆண்டுகளாகவே வள்ளுவனுக்குச் சில கோவில்கள் இருந்தாலும் சென்னையில் பிரம்மாண்டமான அதிதொழில் நுட்பத்தோடு வள்ளுவர்கோட்டம் அமைத்தும், மேலும் முக்கடல் சங்கமமாகும் கன்னியாக்குமரியில் 133 அடி உயரமுள்ள வள்ளுவன் கடவுளுக்குச் சிலை அமைத்துள்ளார். இதுபோன்ற செயல்கள் புண்ணியம் செய்த மக்களுக்கே வாய்ப்பு கிடைக்கும். புண்ணியம் செய்த மக்கள்தான் தாம் மேற்கொண்ட செயல்களை வெற்றிகரமாக முடிப்பார்கள்.

வள்ளுவப் பெருமான் மும்மலமாகிய பாசதேகத்தை நீத்து ஒளிஉடம்பு பெற்றதால் உலகிலுள்ள எந்த மதத்தவராயினும், எந்த மொழியினராயினும், எந்த கலாச்சாரம் உடையவராயினும், எந்த சமயத்தைச் சார்ந்தவராயினும், எந்த இனத்தைச்சார்ந்தவராயினும் வள்ளுவப்பெருமான் கடவுள் என்று அறிந்து வள்ளுவப்பெருமானே எனக்கு அருள் செய்யவேண்டுமென்று திருவடி பணிந்து அழைத்தால் அஞ்சேல் மகனே! என்று அருள்செய்யக் கூடிய வல்லமை அய்யன் வள்ளுவருக்குண்டு.

வள்ளுவன் திருவடியை பூஜித்தால் முன்செய்த பாவம் தீரும், கொடிய வறுமை தீரும், கொடிய புற்றுநோய் முதல் எல்லா நோய்களும் நீங்கும். மேலும் ஆன்மாவைப்பற்றி அறிந்துகொள்வார்கள். ஆன்மா தோற்றமே தாய், தந்தையின் காமத்தால் தோன்றியதாகும். காமத்தால் தோன்றிய ஆன்மா மாசுபட்டிருப்பது இயற்கையே! அதன் காரணமாகவே பொல்லாத காமத்தையும் அறியாமையையும் உண்டுபண்ணும். அய்யன் வள்ளுவன் ஆசி இருந்தால் காமதேகமாகிய மாசு நீங்கும், அறியாமையும் நீங்கித் தெளிந்த அறிவு உண்டாகும். தனக்குள் எல்லாம் வல்ல பரம்பொருளைக் கண்டு தரிசிப்பார்கள்.

ஈராயிரம் ஆண்டுகளில் சேர, சோழ, பாண்டியர் காலங்களிலும் அதற்குப்பிறகு குறுநில மன்னர்களாலும் மற்றும் பெரும்புகழ் வாய்ந்தவர்களாலும் சாதிக்கமுடியாத ஒன்றான மகா மகத்துவம் பொருந்திய அய்யன் வள்ளுவனுக்கு வள்ளுவர் கோட்டம் அமைத்தும், சிலை அமைத்தும், பெருமை செய்த முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் நீடு வாழவேண்டுமென்று மனமார வாழ்த்துகிறோம்.

## குறிப்பு

வருங்காலத்தில் உலகெங்கும் திருக்குறளை வேதமாக எண்ணிப் போற்றி வணங்கக்கூடிய காலமே ஞானச்சித்தர் காலமாகும். மேலும் ஞானத்தைப்பற்றி அறிந்துகொள்ளவும் இனி பிறவாமையாகிய இரகசியத்தை அறிந்துகொள்ளவும் விரும்புகிறவர்கள் அய்யன் வள்ளுவர் அருளிய திருக்குறளில் துறவறவியல் பகுதியில் அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் ஆகிய 13 அதிகாரங்களில் ஞானக்கருத்துக்கள் உள்ளன. அதிலொரு சில குறள்கள் மட்டும் எடுத்துக்காட்டுகிறோம்.

(எ.கா)

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பு அறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை. (குறள் : 345 –துறவு)

ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு. (குறள் : 357 –மெய்யுணர்தல்)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. (குறள் : 358 –மெய்யுணர்தல்)

சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்
சார்தரா சார்தரும் நோய். (குறள் : 359 –மெய்யுணர்தல்)

### அய்யன் வள்ளுவப்பெருமான் அருளிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| **1.** | ஞானவெட்டியான் | – | 1500 |
| **2.** | திருக்குறள் | – | 1330 |
| **3.** | ரத்தினசிந்தாமணி | – | 800 |
| **4.** | பஞ்சரத்தனம் | – | 500 |
| **5.** | கற்பம் | – | 300 |
| **6.** | நாதாந்த சாரம் | – | 100 |
| **7.** | நாதாந்த திறவுகோல் | – | 100 |
| **8.** | வைத்திய சூஸ்திரம் | – | 100 |
| **9.** | கற்ப குருநூல் | – | 50 |
| **10.** | முப்பு சூஸ்திரம் | – | 30 |
| **11.** | வாத சூஸ்திரம் | – | 16 |
| **12.** | முப்புக்குரு | – | 11 |
| **13.** | கவுன மணி | – | 100 |
| **14.** | ஏணி ஏற்றம் | – | 100 |
| **15.** | குருநூல் | – | 51 |

(இவர்கள் அருளிய நூல்கள் இன்னும் இருக்கலாம்)

### குறிப்பு

உலகத்திலுள்ள சில அறிஞர்களுக்கு காமதேகம் இருப்பதனால் அவர்கள் சிந்தனையும் தெளிவாக இருக்காது. அவர்கள் சொல்லுவதில் முன்னுக்குப்பின் முரண்பாடு இருக்கும். வள்ளுவபெருமான் காமதேகத்தை நீத்து, பொன் உடம்பு பெற்றதால், மாசற்ற தெளிந்த அறிவு இருக்கும். அய்யன் வள்ளுவன் சொன்ன கருத்துக்களை இதற்குமுன் தோன்றி அறிஞர்களும், இனிமேல் வரக்கூடிய அறிஞர்களும், திருக்குறளை மாற்றவோ, மறுபரிசிலனை செய்வதற்கோ துணிச்சல் இருக்க முடியாது. காரணம், அய்யன் வள்ளுவன் ஒளிமிக்க கடவுள்.

அகத்தியர் துணை

## நாம் பாவத்திலிருந்து விடுபட

நாம் பாவத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால் உலகத்தில் உள்ள எந்த மதத்தினராயினும், எந்த சமயத்தினராயினும், எந்த கலாச்சாரம் உடையவராயினும், எந்த மொழியினராயினும், எந்த ஜாதியினராயினும் எல்லோரையும் கடவுளின் பிள்ளைகளாக பாவித்து அன்புகாட்டவேண்டும்.

மனித வர்க்கத்தில் இரண்டு ஜாதிகள் உண்டு. ஒருவர் பண்புள்ளவர், மற்றொருவன் பண்பில்லாதவன்.

மனித வர்க்கத்தை இனம் பிரித்து துவேசிப்பது பாவமாகும். புண்ணியத்தை விரும்புகின்ற மக்கள் ஜாதிதுவேசம் பார்க்கமாட்டார்கள். பார்த்தால், பாவம்தான் சூழும். எனவே, நாம் உலம மக்களை ஒருதாய் மக்களாகப் பாவிப்போம், அகத்தீசர் ஆசி பெற்று இன்புற்று வாழ்வோம்.

### குறிப்பு

ஜாதி, மத துவேசம் பேசுவது, நாட்டின் வளர்ச்சியையும் பாதிக்கும், அமைதியையும் கெடுத்துவிடும்.

**ஆசான் அகத்தீசனை பூஜிப்போம்! ஆசிபெற்று வாழ்வோம்!!**

அகத்தியர் துணை

**02.09.1999**

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

**29.02.2000, செவ்வாய்கிழமை** அன்று திருச்சி சங்கிலியாண்டபுரத்திலுள்ள ஸ்ரீஅகத்தியர் நாடி ஜோதிட நிலையத்தில், **ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களுக்கு **ஆசான் அகத்தீசர் அருளிய அருட்சுவடி.**

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

இறையருளே பரம்பொருளே அரங்கா போற்றி
இவ்வுலகை ஆளவந்த அரசா போற்றி
குறைநீக்கும் பேரருளே தேசிகா போற்றி
குருமுனியே சரவணனே உமை போற்றி போற்றி

போற்றியே கும்பன் யான் (அகத்தியர்) ஆசிபாகம்
பூவுலகில் இதன்காலம் அளிப்பேன் நன்றாய்
உற்றதொரு ஓம்கார சக்தியே வாழ்க
**உன்குடிலை அருள்ஞான குடிலே என்போம்** 2

**என்போமே அறப்பணிகள் அன்னதானம்**
**இடைவிடாது நடைபெற ஆசியுண்டு**
**உண்மையுடன் இதற்குரிய தனங்களுக்கும்**
**உயர்வடைய ஞானிகளின் ஆசியுண்டு** 3

**உண்டான அகிலத்தில் (உலகம்) ஞானம் ஓங்க**
**உருவெடுத்தாய் பூவுலகில் ஆசான் நீயே**
**கொண்டுரைக்க ஆன்மீகம் ஓங்கச் செய்தாய்**
**குவலயத்தில் மக்களை எல்லாம் ஞானிகளாக்கி** 4

ஆக்கியே கலியுகத்தை வாழச் செய்தாய்
**அவதார கல்கியே நீதான் என்போம்**
ஊக்கம்தரும் உன்சக்தி சூட்சுமசக்தி
உலகத்தை ஓங்கச் செய்யும் கருணை சக்தி 5

**சக்திநீ சகல உயிரை காத்து நிற்பாய்**
**சகல உயிரும் ஓங்கச் செய்து பின்பதாக**
**முக்திதரும் அமிழ்தபானம் உட்கொள்வாய் என்போம்**
மும்மலத்தை வென்றவன் நீ யோகி நீயே 6

யோகத்தால் ஆசான்நீ எண்ணும் காலம்
உன்அமுதம் சுரந்துமே இளமையாக்கும்
யோகத்தில் சூட்சுமத்தை கொண்டோன் நீயே
ஓம்கார நாயகனே வாழ்க வாழ்க 7

**வாழ்கவே உன்பணிகள் எங்கும் ஓங்கும்**
**வையகத்தில் அறப்பணிகள் எங்கும் ஓங்கி**
**வாழ்வளிக்க கும்பன்யான் அளிப்பேன் ஆசி**
**வையகத்தில் ஞானத்தின் பண்டிதன்(சுப்ரமண்யர்) நீயே** 8

பண்டிதன்உன் அறத்தொண்டு உயர்வாய் ஓங்க
பாருலகில் ஞானிகளின் ஆசியுண்டு
கொண்டுரைக்க தனசிறப்பு அடைய ஆசி
குவலயத்தில் இதன் காலம் வழங்குவோமே 9

வழுங்கிடுவோம் பலலக்கம்(பல லட்சம்) தனங்கள் கிட்ட
வளம்பெறவே அன்னதானம் மக்களுக்கு
வழுங்கிடவே கும்பன் (அகத்தியர்) என் ஆசியுண்டு
வழுத்திவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 10.

–சுபம் –

அகத்தியர் துணை

## குருநாதர் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் வகுத்த சன்மார்க்க திருமண நெறிமுறை விளக்கம்

1. திருமணம் ஆரம்பிக்கும் முன்பு மண மேடையில் திருவிளக்கு ஏற்ற வேண்டும். திருவிளக்கின் முன் நறுமணமுள்ள பத்திகளையும் அகல் விளக்கையும் ஏற்றிவைக்க வேண்டும். திருவிளக்கு ஏற்றும்போது "ஓம் அருட்பெருஞ்ஜோதி அகத்தீசாய நம" என்று உச்சரித்துக்கொண்டே ஏற்ற வேண்டும்.
2. அகல் விளக்கு முன்பு ஒரு தட்டில் தேங்காய், பழம், மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு, புஷ்பம் வைத்து அதன்மீது திருக்குறள் புத்தகம் வைத்து புத்தகத்தின் மீது திருமாங்கல்யம் வைக்கவேண்டும்.
3. கற்பூர தீபமேற்றி சித்தர்கள் போற்றித் தொகுப்பை முறையாகக் கூறி அகல்விளக்கு ஜோதிக்கு மலர்தூவி அர்ச்சிக்க வேண்டும். கற்பூர தீபம் திருமாங்கல்யம் சூட்டும் வரை தொடர்ந்து எரியவேண்டும்.
4. திருமாங்கல்ய தட்டை எடுத்துச்சென்று அனைவரிடமும் ஆசிபெற வேண்டும்.
5. மணமக்கள் அவரவர்களின் பெற்றோர்களுக்குப் பாதபூஜை செய்ய வேண்டும்.
6. பெண்ணினுடைய பெற்றோர்கள் திருமாங்கல்யத்தை மணமகனிடம் எடுத்துக் கொடுக்க வேண்டும்.
7. மணமகன் திருமாங்கல்யம் கட்டும்போது அனைவரும் உதிரி மலர்களைத் தூவி ஆசிகூற, ஆன்றோர்கள் "ஓம் அகத்தீசாய நம" என்ற நாமத்தைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.

### குறிப்பு

தற்போதுள்ள மரபு விதவை பெண் தன்னுடைய மகனுக்கோ அல்லது மகளுக்கோ திருமணம் நடைபெறுவதைப் பார்க்கக்கூடாதென்றும், அப்படி பார்த்தால் தோஷம் என்றும், அவர்களுக்குப் பாதபூஜை செய்யக்கூடாதென்றும் ஒரு கொடுமையான கட்டுப்பாடு உள்ளது. தாய் தன்னுடைய மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் செய்யும்போது பார்க்கக் கூடாது, அங்கே நிற்கக்கூடாது, அவர்களுக்கு ஆசி வழுங்கக் கூடாது என்று சொல்வது மிகவும் கொடுமை. இது எல்லாம்வல்ல ஞானபண்டிதனாகிய சுப்ரமணியருக்கே அடுக்காத செயலாகும்.

தாய் விதவையாக இருந்தபோதிலும் அவளை திருமண மண்டபத்தின் நடுவே

ஒப்பாகும். அது மட்டுமல்லாது உலகிலுள்ள அனைத்து சான்றோர்களிடமும் ஆசி பெற்றதற்கொப்பாகும். மணமகளின் தாய் விதவையென்ற போதிலும் அவள் தான் மணமகன் கையில் திருமாங்கல்யத்தை எடுத்துக் கொடுத்து மணமகளுக்கு அணியச் செய்ய வேண்டும். காரணம் அவள் உள்மனதில் எழும்பாசமும் அன்பு உணர்ச்சியும் மணமக்கள் நீடுவாழ உறுதுணையாக இருக்கும்.

மணமேடையில் ஏற்றி வைக்கப்பட்ட அகல் விளக்குக்கு மலர்களால் அர்ச்சிக்கும்போது அந்த ஜோதியில் அகத்தீசன் சார்ந்திருந்து மணமக்களுக்கு ஆசி வழங்குவார்கள். அதன் பலனாக மணமக்களுக்கு நீடிய ஆயுளும், புத்திர பாக்கியமும், செல்வமும் பெருகும்.

அகத்தியர் துணை

## மனிதன் கடவுளாக

**மனிதன் கடவுளாக** வேண்டுமென்றால் சரியை, கிரியை, யோக, ஞானம் ஆகிய நான்கும் அவன் அறிந்திருக்க வேண்டும். இதை அறியாமல் ஆன்ம லாபம் பெற முடியாது. கிரியை, சரியை, யோக, ஞானம் என்று முன்பு இருந்திருக்கலாம். காலப்போக்கில் சரியை, கிரியை, யோக, ஞானம் என்று மாறிவிட்டது.

**சரியை என்பது** பிற உயிர்களுக்கு நன்மை செய்தலும், நன்னெறியை கடைபிடித்து நடப்பதும், ஜீவகாருண்யமுமே சரியையின் முதல் படியாகும்.

**கிரியை என்பது** கடவுள் ஒருவன் உண்டு என்று அறிவதும், அதற்கு துணையாக இருப்பது உருவ வழிபாடாகும். ஆரம்பகாலத்தில் ஒரு உருவத்தை சுட்டிக்காட்டினால்தான் அதை பூஜித்து கடவுள் அருள் பெறுவார். கடவுளை எந்த உருவத்தில் வணங்கினாலும் கடவுள் மனமிரங்கி அருள் செய்வார்.

**எ.கா**

எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம்
அன்றேயிரங்கி யீந்தருளும் பதம்.
என்போன்ற வாக்குமிகு பொன்போன்ற
கருணைதந்து இதயத்திருக்கும் பதம்.

**மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய – அருட்பா – திருவடிப்புகழ்ச்சி.**

ஆகவே கடவுள் அருள்பெற வழிபாடு செய்வதே கிரியை மார்க்கமாகும்.

**யோகம் என்பது** தன் உடல் கூற்றை அறிந்து அதற்குள் இயங்கும் ஆன்மாவை அறிந்து அந்த ஆன்மா இயக்கத்திற்கு மூச்சுக்காற்றுதான் காரணம் என்று அறிந்து அந்த மூச்சுக்காற்றும் நாள் ஒன்றுக்கு 21,600 சுவாசமாக(போகின்ற காற்று மற்றும் வருகின்ற காற்று) ஆக 21,600 முறை இயங்கினால்தான் ஆன்மா இயக்கமும் மனித வாழ்க்கையும் நடைபெறும். இது ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒன்றேயாகும். ஆகவே, மூச்சுக்காற்றை அறிந்து அந்த காற்றின் இயக்கமாகிய இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகும். இடகலை என்பது இடது மூக்கில் வருகின்ற காற்றும், பிங்கலை என்பது வலது மூக்கில் வருகின்ற காற்றும், சுழிமுனை என்பது புருவ மத்தியில் ஒடுங்குகின்ற காற்றும் ஆகும். இதை நன்கு அறிந்து ரேசக, பூரக,

ஒடுக்குதல்) அறிவதே யோக மார்க்கமாகும். இது அனைத்தும் ஆசான் அகத்தீசன் அருள் இல்லாமல் யோகத்தை அறிந்துகொள்ள முடியாது.

**ஞானம் என்பது** இயற்கையின் இயல்பறிந்து அது உடம்பினுள் எவ்வாறு இயங்குகின்றது என்பதை அறிந்து, அந்த இயற்கை தூலதேகமாகிய புற உடம்பாகவும், சூட்சும தேகமாகிய அகஉடம்பாகவும் இருக்கின்ற இந்த இயல்பை அறிந்து அதே இயற்கை மும்மலமாகிய காமதேகமாகவும், மலமற்ற ஞானதேகமாகவும் அமைந்துள்ளது. இயற்கையின் இயல்பறிந்து அதனுடைய இயல்பாகிய (மாசு அல்லது களிம்பு) களிம்பு அற்றால் சதகோடி (100 கோடி) சூரியப்பிரகாசமான ஒளி உள்ளே தோற்றும். இதை அறிவதே ஞானமாகும். அந்த ஜோதியை காணவேண்டும் என்றால் ஆசான் அகத்தீசன் அருள்செய்ய வேண்டும்.

**எ.கா**

களிம்பறுத் தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான் அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே

**திருமந்திரம் உபதேசம் – கவி 114.**

ஆகவே, சரியை, கிரியை, யோக, ஞானமாகிய நான்கும் ஆசான் அருள்கொண்டுதான் அறிய முடியும்.

### மேற்கண்ட சரியை, கிரியை, யோக ஞானத்தின் சாரம்

சரியை என்பது நெறியுடன் வாழ்வதாகும். கடவுள் வழிபாடே கிரியை ஆகும். யோகம் என்பது மூச்சுக்காற்றைப்பற்றி அறிந்து மூச்சுக்காற்றை ஆசான் ஆசியோடு புருவ மத்தியில் ஒடுக்குவதே யோகமாகும். ஞானம் என்பது எல்லாம் வல்ல பரம்பொருள் உள்ளும் புறமுமாக இருப்பதை அறிந்து உள்ளெழும் ஜோதியை கண்டு தரிசிப்பதே ஞானமாகும் அல்லது மோட்சமாகும.

### ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டுமா?

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்கள் இதை பின்பற்றலாம்.

**திருவடி யேசிவ மாவது தேரில்**
**திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்**
**திருவடி யேசெல் கதியது செப்பில்**
**திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே**

**திருமந்திரம் – 138.**

### மேற்கண்ட கவியின் சாரம்

வீடுபேறு அடைவது எப்படி என்று ஆராய்ந்து பார்த்தால், ஆசான் திருமூலதேவர் திருவடிதான் உற்ற துணையாக அமையும். மேலும் திருவடியைப் பூஜித்த மக்களுக்கு இகலோகமே அவர்களுக்கு பரலோகமாக அமையும். மேலும் நிலை உயர்வதற்கு துணையாகவும் இருக்கும் மற்றும் திருவடியைப் பூஜிப்பவர்களுக்கு தளர்ச்சி வந்தபோது அகமும் புறமும் இருந்து "அஞ்சேல்! அஞ்சேல்!" என்று அருளுவார்.

மனிதனாகப் பிறந்தால் வீடுபேறுஅடைய முயற்சிக்க வேண்டும். வீடுபேறு அடைய விரும்புகிறவர்களுக்கு குருவருள் வேண்டும். குருவருள் இல்லாமல் நாம் பெற்ற கல்வி

தெரிந்தவர்கள் திருமூலதேவரை, எல்லாம் வல்லபரப்பிரம்மமாகவும், நமக்கு பிறவிப்பிணியைத் தீர்க்கும் பேரமுதமாகவும் எண்ணி, அவர் திருவடியைப் பூஜித்தால் பிறந்தவர்கள் சவமாகப் (பிணமாக) போகக்கூடியவர்கள் சிவமாவார்கள். மேலும் தொடர்ந்து திருமூலதேவரை பூஜை செய்து இந்த இகலோகத்திலேயே பரலோகமாகிய சிவலோகம் சேர்வார்கள். மேலும் சலிப்பில்லாமல் பூஜை செய்து வந்தால் யாராலும் சென்று அணுகமுடியாத மோட்சகதி பெறுவார்கள்.

மேலும், தொடர்ந்து பூஜை செய்து வருகின்றவர்களுக்கு ஆசான் திருமூலதேவர் அகமும் புறமும் இருந்து "அஞ்சேல்! அஞ்சேல்! " என்று அருளுவார். ஆசான் திருமூலதேவர், மலமாயையும், மனமாயையும், பந்தபாசமும் அற்று எக்காலத்திலும் அழிவில்லாத பேராற்றல் பெற்றவர் ஆவார். அவரை எல்லாம் வல்ல சிவபெருமானாகவே எண்ணி, பூஜித்து வந்தால் காமத்தால் வரும் கேடுகள் பற்றியும், கோபத்தால் வரும் கொடுமைகள் பற்றியும், அநித்தியத்தை நித்தியம் என்று எண்ணுகின்ற மடமை நீங்கியும் உண்மைப்பொருளை அறியலாம்.

காமத்தாலும், பேராசையாலும், பொறாமையாலும், ஜாதி வெறியாலும், மத வெறியாலும், யான் என்ற கர்வத்தாலும், உத்தியோகத் திமிராலும், ஆள் படையாலும், கல்வி கற்றோம் என்ற கர்வத்தாலும் செய்த பாவங்கள் அஞ்ஞானகாசமாகிய அறியாமையை உண்டுபண்ணும். அந்த அறியாமைதான் தொடர்ந்து வரும் பிறவிக்கு காரணமாகும். தினமும் ஆசான் திருமூலதேவரை பூஜை செய்தும், பசித்த ஏழைகளுக்கு அன்னதானமும் செய்து வந்தால், நாம் செய்த பாவங்கள் எல்லாம் நீங்கி சிறப்பறிவாகிய மெய்யுணர்வு உண்டாகும்.

சிறப்பறிவு இல்லாமல், மும்மலமாகிய பேதைமையை நீக்க முடியாது. பேதைமை நீங்கி வெற்றிபெற வேண்டும் என்றால் பேதைமையற்ற ஆசான் திருமூலதேவரை பூஜைசெய்து ஆசிபெற்றுக் கொள்வோம்.

### குறிப்பு 1

போலி ஆன்மீகவாதிகள், மனைவியோடு கூடாதே என்றும், விந்துவிடலாகாது என்றும் சொல்வார்கள். இவர்கள் இயற்கையின் இயல்பும், உடல்கூறும் அறியாத மூடர் ஆவார்கள். மேலும் பந்தபாசம் கூடாது என்றும், உலகம் பொய் என்றும் சொல்லி நம்மிடம் பணம் பறிப்பார்கள். இயற்கையின் அமைப்பே ஆணும் பெண்ணுமாக சேர்ந்தே படைத்துள்ளது. இதில் ஒன்றைவிட்டு ஒன்று ஞானம் பெற முடியாது. விந்துவைக் கட்டினால் உடம்பில் அசுத்தம் தங்கிவிடும். அதன் காரணமாக தலைவலி, மலச்சிக்கல், மன ஒருநிலைப்படாமை மேலும் இரத்த அழுத்தம் போன்ற கேடுகள் உண்டாகும். விசயம் தெரிந்தவர்கள் மனைவியை தெய்வமாக மதித்தும், பிள்ளைகளுக்கும் தாய்தந்தைக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தும், உடன்பிறந்தவர்கள், சுற்றத்தார், நண்பர்கள் இவர்களுக்குப் பாதுகாவலராக இருந்தும், ஆண் வாரிசு இல்லதா மாமன்–மாமி வசதியற்றவர்களாகவும், பாதுகாப்பு இல்லாதவர்களாகவும் இருந்தால் அவர்களை காப்பாற்றினால் திருமூலதேவரின் ஆசி பெறலாம். மேலும் விருந்தை உபசரித்தும், வறியோர்களுக்குப் பசியாற்றியும், சிறந்த முயற்சி உள்ளவராக இருந்து, பொருளை ஈட்டியும், அந்த பெருளைக் கொண்டு நற்காரியங்கள் செய்தும், காலை 10 நிமிடமும், மாலை 10 நிமிடமும் ஒரு வெண்ணிறத் துணியை விரித்து அதில் அமர்ந்து "ஓம் திருமூலதேவாய நம" என்று நாமஜெபம் செய்தும், பெறுதற்கரிய மானுடப் பிறவியைத் தக்கவாறு பயன்படுத்தி ஜென்மத்தைக் கடைத்தேற்றியும் கொள்வார்கள். இவர்கள் போலி ஆன்மீகவாதிகளை நம்பமாட்டார்கள்.

போலி ஆன்மீகவாதிகளோ, பெரிய மகான் போல் வேடம் தரித்து, நல்லதொரு

வேண்டும். இதற்கெல்லாம் திருமூலதேவரின் ஆசி வேண்டும். ஆசி இல்லாமல் இனம் கண்டுகொள்ள முடியாது.

**குறிப்பு 2**

சிலபேர் குண்டலிசக்தி ஏற்றுவதாகச் சொல்லுவார்கள். அதை ஆன்மீகச்சான்றோர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். குண்டலிசக்தி என்பது ஆசான் திருவருளால்தான் அறிய முடியும். திருமூலதேவரின் ஆசிபெற்ற புண்ணியவான்களை யாரும் ஏமாற்ற முடியாது. எனவே, திருமூலதேவரை பூஜிப்போம், ஆசி பெறுவோம், வெற்றி பெறுவோம்.

**குறிப்பு 3**

மது அருந்துதல், பொல்லாத காமம், கொலை, களவு, சூதாடல் போன்ற குற்றங்களை பூரணமாக நீக்கிய பின்புதான் தியானம் செய்ய வேண்டும் என்றால் நூறுகோடி ஜென்மமும் போதாது. மேற்கண்ட குற்றங்கள் நம்மிடம் இருந்தாலும் புண்ணியவானாகிய திருமூலதேவரைப் பூஜித்து வந்தால் எல்லா குணக்கேடுகளும் கதிர் கண்ட பனிபோல் விலகிவிடும். திருமூலதேவரின் ஆசி இல்லாமல் குணக்கேடுகளைப்பற்றி அறியவோ, நீக்கவோ நம்மால் அணுவளவும் முடியாது. திருமூலதேவரின் திருவருளே அஞ்ஞானகாசமாகிய அறியாமையை நீக்கி சிறப்பறிவை உண்டாக்கும். மேலும், தயை சிந்தையும், செல்வமும் பெருகும். நோயில்லா வாழ்வும், நீடிய ஆயுளும் உண்டாகும். ஞானமும் கைகூடும்.

**குறிப்பு 4**

சிலர் மனம் ஒருநிலைப்படுத்துவதை தியானம் என்பார்கள். மனம் ஒருகாலத்திலும் ஒருநிலைப்படாது. மனமாயை அற்றவரும் சாந்தமே வடிவான திருமூலதேவரை பூஜித்தால் அன்றி மனம் ஒருநிலைப்படாது. மனம் ஒருநிலைப்படுவதற்கு குருநாதர் திருமூலதேவரின் ஆசியால்தான் முடியும். **திருமூலதேவரை பூஜிப்போம், ஆசி பெற்று இன்புற்று வாழ்வோம்.**

- **08.03.2001 தஞ்சை மாசிமக விழா வெளியீடு.**

## திருச்சி BHEL கிளை சார்பாக வெளியீடு

ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்க நிறுவனர், ஓங்காரக்குடிலாசான், கல்கி அவதாரம், மோனநிலைகண்ட உலகப்பேராசான், மரணம் தவிர்த்த பெருமான், துறையூர் துறவியார், சிவராஜயோகி, ராஜரிஷி, பிரம்மரிஷி தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** ஞானிகள் வழிபாடுதான் உண்மை ஆன்மீகம் என்று உலகறியச் செய்து வருகின்றார்கள். மேலும் திருக்குறள் கடவுளால் இயற்றப்பட்ட நூல் என்றும், நமது வேதம் திருக்குறள் என்றும், நமது இறைவன் திருவள்ளுவர் என்றும் அருளியுள்ளார்கள்.

**"ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்"** ஆதலால் பசித்தோர்க்கு பசியாற்றுவித்தலே இறைவனுக்கு செய்யும் தொண்டு என்று மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய வாக்குபடி பலகோடி மக்களுக்கு எங்கள் ஓங்காரக்குடிலாசான் பசியாற்றி வருகின்றார்கள். ஆகவே, மகான் இராமலிங்க சுவாமிகள்தான் ஓங்காரக்குடிலாசான் என்று பலரும் போற்றி வணங்குகின்றார்கள்.

நவகோடி சித்தர்களும் தங்கள் ஓலைச் சுவடி மூலம் ஓங்காரக்குடிலாசானை அனுதினமும் புகழ்ந்து வருகின்றார்கள்.

தஞ்சை பெரியகோவிலை நிர்மானம் செய்த ராஜராஜசோழன்தான் ஓங்காரக்குடிலாசான் ஆவார்கள். அவர்கள் தமது ராஜகுரு கருவூர் முனிவருக்கு ஆண்டுதோறும் சித்ரா

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு கருணைக்கடல் கருவூர் முனிவரை பூஜை செய்து அருள்பெற்ற பிரசாதம் வழங்கியும் வருகின்றார்கள்.

ஓங்காரக்குடிலாசான் நிறுவிய ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம் உலகத்தில் உயர்ந்தது, புனிதமானது, புண்ணியமானது. எவ்வித பிரதிபலனும் எதிர்பாராது மக்களுக்கு தொண்டாற்றி வருகின்றது. இங்கு வருகின்ற அன்பர்களும் ஆசான் காட்டி வழியில் ஞானிகளை பூஜை செய்தும், முடிந்த அளவு அன்னதானம் செய்தும் தங்கள் துன்பங்கள் நீங்கி வாழ்வில் முன்னேற்றம் அடைகின்றார்கள். எனவே வாருங்கள் ஓங்காரக்குடிலுக்கு என்று இருகரம் கூப்பி வணங்கி வரவேற்கிறோம்.

## பரமானந்த சதாசிவ சத்குரு
## குருநாதர் தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்
## அவர்களின் உபதேசம்

மனிதனாகப் பிறந்தால் அவன் மோட்சகதி அடையமுயற்சிக்க வேண்டும். மோட்சகதி அடையவேண்டுமென்றால் மனிதாபிமானத்தை கடைப்பிடித்தும், பசித்த ஏழைகளுக்கு அன்னதானம் செய்தும், தினமும் காலை, மாலை பத்து நிமிடம் "**ஓம் இராமலிங்க தேவாய நம**" என்று நாமஜெபமும் செய்யவேண்டும்.

சிறுதெய்வ வழிபாடு என்ற பெயரில் ஆடு, கோழி போன்ற உயிர்பலியிடுதலை பாவம் என்று எண்ணவேண்டும். மேலும் தாய், தந்தைக்கு பாதுகாவலராகவும், மனைவியை மதித்தும், பிள்ளைகளுக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்தும், விருந்தை உபசரித்தும், தகுதியுள்ள நட்பை பெருக்கியும், நண்பர்களிடம் சிறு குற்றங்கள் இருந்தாலும், அனுசரித்து நடந்துகொள்ளவேண்டும். மேலும் ஜாதிவெறி, மதவெறி இருக்ககூடாது. எல்லோரையும் கடவுளின் பிள்ளைகளாக எண்ணி நேசிக்கவேண்டும். இப்படி செய்து வந்தால் வீடுபேறு அடையலாம்.

## ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்க நோக்கம்

மரணமில்லா பெருவாழ்வு பெறுவதாகும். மரணமில்லா பெறுவாழ்வு பெற விரும்புகிறவர்கள் ஆசான் இராமலிங்க சுவாமிகளை எல்லாம் வல்ல பரப்பிரம்மமாகவும், நமது பிறவிப்பிணியை உடைத்தெறியும் வல்லமை உள்ள வல்லவராகவும் நினைத்து, பூஜித்து வருகிறோம். அவரை தினமும் பூஜை செய்து வந்தால் பல ஜென்மங்களில் செய்து வந்த பாவங்களெல்லாம் பொடிப்பொடியாகிவிடும். பாவங்கள் நீங்க நீங்க அறியாமை நீங்கி சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு வந்தால் அங்கு மனிதாபிமானம் தானே வெளிப்படும். மனிதாபிமானம் இல்லாமல் ஆன்மீகத்தை கடைப்பிடிக்க முடியாது. மனிதாபிமானம் இல்லாத ஆன்மீகம் உயிரற்ற பிணத்திற்கு ஒப்பாகும்.

நித்தமும் ஞானிகளை பூஜைசெய்து வந்தால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும், பண்புள்ள புத்திரபாக்கியம் உண்டாகும், பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள், எந்த விபத்தும் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு ஏற்படாது. மேலும் தகுதியுள்ள நட்பும் அமையும். மற்றும் எது நன்மை? எது தீமை? என்று உணர்கின்ற பரிபக்குவம் உண்டாகும். நன்மை தீமை உணர்கின்ற பரிபக்குவம் வந்தபோதே கடவுள் நம்மை நெருங்கி வருகிறார் என்பதை நம்மால் அறியமுடியும்.

உலகத்தின் அமைதியை கெடுப்பது கணவன் மனைவி மீது சந்தேகப்படுவதும், மனைவி கணவன்மீது சந்தேகப்படுவதும், தகுதியுள்ள நண்பர்கள் மீது சந்தேகப்படுவதும், தந்தை மகன்

சந்தேகப்படுவதும், தம்பி அண்ணன் மீது சந்தேகப்படுவதும், வேலை செய்பவர்கள் மீது முதலாளி சந்தேகப்படுவதும், முதலாளியை வேலையாட்கள் சந்தேகப்படுவதும், ஒரு நாட்டுக்கு நாடு சந்தேகப்படுவதும் போன்ற கேடுகளுக்கு அறியாமைதான் காரணம். முடிந்த அளவிற்கு அன்னதானம் செய்தும், தினமும் பூஜித்தும் வந்தால் அறியாமை நீங்கி தெளிந்த அறிவு உண்டாகும். தெளிந்த அறிவுள்ள மக்கள் எதையும் திடீரென முடிவெடுக்காமல் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பார்கள். அவசரப்பட்டு முடிவெடுப்பதனால் பல அடாத செயல்கள் நடந்துவிடுகிறது. எனவே, ஞானிகளை பூஜிப்போம், சிறப்பறிவு பெற்று, செல்வம் பெற்று வாழ்வோம்.

## பூஜை செய்யும் முறை

ஒரு வெண்ணிற துணியை விரித்து அதில் அமர்ந்து ஒரு திருவிளக்கு ஏற்றி "**ஓம் அகத்தீசாய நம**" என்றும், "**ஓம் நந்தீசாய நம**" என்றும், "**ஓம் திருமூலதேவாய நம**" என்றும், "**ஓம் கருவூர் தேவாய நம**" என்றும் தொடர்ந்து காலையில் பத்து நிமிடமும் மாலையில் பத்து நிமிடமும் நாமஜெபம் செய்து வந்தால் ஆன்மாவைப் பற்றி அறியலாம்.

ஆன்மா தற்பொழுது மும்மலமாகிய சிறையில் அகப்பட்டுள்ளது. இந்த மும்மலமாகிய சிறையை உடைத்தெறிந்து ஆன்மா விடுதலை பெறவேண்டுமென்றால் ஆன்மா விடுதலை அடைந்த ஞானிகளை உருகி தியானிக்க வேண்டும். உருகி தியானிக்க தியானிக்க பொல்லாத காமதேகத்தை அறிந்து கொள்ளமுடியும். இந்த காமதேகத்தின் இயல்பை அறிந்துகொண்ட பின்பு மெல்லமெல்ல காமதேகத்தை பக்குவப்படுத்தமுடியும். காமதேகம் நீத்தால் சீவன் சிவமாகும். சிவமானவர்கள் என்றும் மரணமில்லா பெருவாழ்வு பெறுவார்கள்.

காமதேகத்தின் இயல்பே உண்மையை பொய் என்று எண்ணுவதும், பொய்யை உண்மை என்று எண்ணுவதுமாகிய பேதைமை இருக்கத்தான் செய்யும். இந்த மும்மலமாகிய பேதைமையை ஆசான் அகத்தீசர் ஆசியால்தான் மாற்றமுடியும். இதை மாற்ற வேண்டுமென்றால் உயிர்கொலை செய்தலை தவிர்த்தும், புலால் உண்ணாமலும், மது அருந்தாமலும் இருக்கவேண்டும். இதை கடைப்பிடிக்கவேண்டுமென்றால் ஜீவகாருண்யத்திற்கு தலைவராகிய இராமலிங்க சுவாமிகளும், தாயுமான சுவாமிகளும், திருஞான சம்மந்தரும், மாணிக்க வாசகரும், மகான் அகத்தீசர் அவர்களின் ஆசியும் இருக்கவேண்டும். ஆசி இல்லாமல் நாமாக நூல் அறிவு கொண்டு முயற்சித்தால் எதுவும் நடக்காது.

### குறிப்பு

**ஒலிபடரும் குண்டலியை உன்னியுனர் வாலெழுப்பிச்**
**சுழுமுனையின் தாள்திறந்து தூண்டுவதும் எக்காலம்.**

**–மகான் பத்ரகிரியார்.**

ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு குண்டலினி சக்தியை ஏற்றமுடியாது. அப்படி ஏற்றுவதாக சொல்வதும் குண்டலினி ஏறிவிட்டதாக நினைப்பதும் ஒரு பிரமையே ஆகும். ஆசான் ஆசியால்தான் குண்டலினி சக்தியை அறியமுடியும். குண்டலினி சக்தியை எழுப்புவதற்கு இடகலையாகிய சந்திரகலையையும், பிங்கலையாகிய சூரியகலையையும் சேர்த்து ரேசித்து, பூரித்து, புருவமத்தியில் கும்பித்தால் அந்த காற்று சுழிமுனை வழியாக சென்று மூலாதாரத்தில் ஒடுங்கும். ஒடுங்கினால் அங்கிருந்து எழுவதுதான் தசநாத ஓசையாகும். அதுவே குண்டலினி சக்தியாகும். அந்த சக்தியை பெறுவதற்கு உப்பில்லா உணவு

பிராணாயாமம் செய்யவேண்டும். பிராணாயாமம் செய்வதற்கு முன் மலஜலம் சுத்தமாக கழித்துவிடவேண்டும். வயிற்றில் உணவு இருக்கக்கூடாது. வெறும் வயிறாக இருக்க வேண்டும். உடம்பில் காய்ச்சல் மற்றும் நோய்கள் இருக்கக்கூடாது. உடம்பில் நோய் இருந்தால் பிராணாயாமத்தை நிறுத்தி விடவேண்டும். பிராணாயாமம் செய்யும்பொழுது பத்மாசனமிட்டு வினாதண்டை வில்போல் நிமிர்த்தி இருக்கவேண்டும். இப்படி இருந்து அகத்தீசனை ஓம் அகத்தீஸ்வரா அடியேனின் மூச்சுக்காற்றோடு கலந்து உணர்வோடும், உணர்ச்சியோடும், நாடி நரம்புகளில் சார்ந்து இருந்து வாசி வசப்படவேண்டுமென்று வேண்டிக்கொள்ளவேண்டும். இப்படி தினமும் பிராணாயாமம் செய்து வந்தால் மனித வர்க்கம் அறிய முடியாத ரகசியங்களை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

மேலும், அகத்தீசனை பூஜிக்க பூஜிக்க எழுபத்து ஈராயிரம் நாடி நரம்புகள் பற்றியும் அதில் முக்கியமாக உள்ள தச நாடிகள் பற்றியும், தச நாடிகளில் மிக முக்கியமான பிரம்ம நாடியை அறிந்துகொள்ள முடியும். பிரம்மநாடி என்பது குண்டலினி சக்திக்கும், ஆக்னைக்கும் தொடர்புடையதாக இருக்கும். இதை அறிந்தவர்கள்தான் குண்டலினி சக்தியின் இயல்பை அறிந்துகொள்ளமுடியும். அவரவர்களாகவே முயற்சித்து குண்டலினி சக்தியை எழுப்பவேண்டுமே தவிர மற்றவர்களால் நமக்கு குண்டலினி சக்தி ஏற்ற முடியாது. குருநாதன் ஆசி இல்லாமல் பிராணாயாமம் செய்து வந்தால் குடல் புண் வந்தும், மலச்சிக்கல் வந்தும், இரத்த அழுத்தம் வந்தும், மூலம் வந்தும், இன்னும் அனேக நோய்கள் சூழ்ந்தும் அற்ப ஆயுசாக மாண்டுவிடுவார்கள்.

எனவே குருவருள் துணை கொண்டுதான் எதையும் செய்யவேண்டும்.

## உலக மக்கள் உய்வதற்கு ஒரு உபாயம்!

**28.01.2001**

சீசனாம் எனத்தேர்ந்தால் மௌனம்சொல்வார்
சிற்றெறும்பு ஊறையிலே கற்குழிந்தாப்போலே
பாசமங்கே வைக்கவைக்கப் பாவமெல்லாம்
பர்வதம்போல் பஞ்சுவைத்து அணுவளவுதீயை
நேசமுடன் வைத்தகதை போலேயாச்சு
நிலைத்துநின்ற குருவுக்கு மனங்கோணலாகா
வேசைமனம் போலாகி அலையாதேநீ
வேதாந்த குருபதத்தை மேவுமேவே.

–மகான் கொங்கண மகரிஷி அருளிய கடைக்காண்டம் கவி 270.

### மேற்கண்ட அருட்கவியின் சாரம்

மகான் கொங்கண மகரிஷி உலக மக்கள்பால் கருணை கொண்டு அருளிய அமுத கவியாகும். இந்த பாடலை யாரெல்லாம் பக்தியுடன் படிக்கிறார்களோ, அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கும். அவர்களை பார்த்தாலே பாவம் தீரும்.

ஞானிகளிடத்தில் பக்தி செலுத்தசெலுத்த நாம் பல ஜென்மங்களிலும், இந்த ஜென்மத்திலும் செய்த பாவங்களெல்லாம் பெரியமலைபோன்ற பஞ்சில் அணுவளவு தீயை

வைத்ததுபோல் நமது பாவங்களெல்லாம் சாம்பலாகிவிடும். எனவே சலிப்பில்லாமல் பூஜை செய்து வந்தால் இல்லறமும் சிறக்கும். ஞானமும் கைகூடும்.

இந்த பாடலை பக்தியுடன் பாராயணம் செய்து வந்தால் எரிமலை, நிலநடுக்கம், புயல், கடல் கொந்தளிப்பு, நிலச்சரிவு, கடும்வறட்சி, கொடுமையான வெயில், சூறாவளி, பெரும் வெள்ள சேதம், அதிகமழை, இடி, மின்னல், அதிக பனி, விண்கற்கள் விழுதல், கடல் அரிப்பு, கொடிய நோய்கள், தீ பரவுதல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் இந்தியாவிலும் மற்றும் உலக நாடுகளிலும் நடைபெறாது. மேற்கண்ட பாடல் புனிதமான வேதமாகும். இதை தொட்டு வணங்குவதே பூஜையாகும்.

சமுதாயத்தில் ஜீவதயவு குறைந்து வருவதால், எங்கு பார்த்தாலும் இயற்கை சீற்றங்கள் அளவு கடந்து நடக்கிறது. ஜீவதயவு இருந்தால் எல்லாம் வல்ல இயற்கை அன்னை சாந்தமடைந்து நல்வாழ்வு தருவாள்.

ஜீவதயவு அல்லது மனிதாபிமானம் அல்லது மனிதநேயம் அல்லது ஜீவகாருண்யம் ஆகிய நான்கும் ஒரே பொருளாகும். ஜீவதயவு உண்டாக வேண்டுமென்றால் சாந்தமே வடிவான மகத்துவம் பொருந்திய "அகத்திய முனிவர்", சிந்தையில் நிலைத்திடும் "ஆசான் நந்தீசர்", திக்கெல்லாம் புகழ் வாய்ந்த "மகான் திருமூலதேவர்", அருள் கருவுருவாய் வந்த "மகான் கருவூர் முனிவர்", அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய "மகான் இராமலிங்க சுவாமிகள்"
ஆகிய ஐந்து மகான்களை
"ஓம் அகத்தீசாய நம",
"ஓம் நந்தீசாய நம",
"ஓம் கருவூர் தேவாய நம",
"ஓம் இராமலிங்க தேவாய நம"
என்று நாமஜெபம் செய்யவேண்டும்.

மேற்கண்ட ஐந்து மகான்களும் ஜீவகாருண்ய தலைவர்கள் ஆவார்கள். அவர்கள் நாமத்தைச் சொல்லி காலையில் பத்து நிமிடமும், மாலையில் பத்து நிமிடமும் நாமஜெபம் செய்து வந்தால் நமக்கு ஜீவகாருண்ய உணர்வு வரும். ஜீவகாருண்யம் இல்லாதவர்களுக்குத்தான் மூர்க்கத்தனமும், பொல்லாத வறுமையும், கொடிய நோயும், அடிக்கடி விபத்தும் நடக்கும். மேலும் புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல் போன்ற குணக்கேடுகளும் பற்றிக்கொள்கின்றன.

மேற்கண்ட மகான்களை பூஜை செய்வதால் சிறந்த குணப்பண்பு உண்டாகும், தன்னையும் அறியலாம், தலைவனையும் அறியலாம். தலைவனை அறிந்த மக்கள்தான் பேதைமையை உண்டுபண்ணும் மும்மலமாகிய காமதேகத்தைபற்றி அறிந்துகொள்ளமுடியும். காததேகத்தின் சீற்றத்தை தணித்து கொண்டாலே நாமும் கடவுளாகலாம். மேலும் பொல்லாத வறுமைத் தீரும், செல்வம் பெருகும், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும், பண்புள்ள புத்திரபாக்கியம் தோன்றும், நோயில்லா வாழ்வும், நீடிய ஆயுளும் உண்டாகும். நம்மிடம் தீயபழக்கவழக்கங்கள் இருந்தாலும் நீங்கிவிடும். தீயநட்பு நீங்கி தகுதியுள்ள நட்பு அமையும். புலால் உண்ணுதல், மது அருந்துதல் போன்ற குணக்கேடுகள் நம்மைவிட்டு நீங்கிவிடும்.

**சாந்தமே வடிவான ஞானியர்களின் அருளை பெறவிரும்புகிறவர்கள், நித்தியம் மேற்கண்ட பாடலை பயபக்தியோடு படித்தும், மேற்கண்ட ஐந்து மகான்களின் நாமத்தைச்சொல்லி பூஜை**

**வியாபாரம், உத்தியோகம், தொழில், கல்வி ஆகிய அனைத்தும் நல்லபடி நடக்கும், இல்லறமும் சிறக்கும், ஞானமும் கைகூடும், மரணமில்லா பெருவாழ்வு கைகூடும்.**

குறிப்பு 1

மேற்கண்ட ஞானிகளை எந்த நேரத்தில் நினைத்தாலும் "அஞ்சேல்", "அஞ்சேல" என்று அருளும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்கள் நாமத்தைச் சொல்லி பூஜை செய்கிறவர்களை கொடிய நோய் உள்ளவர்கள் பார்த்தால் நோய் தீரும், புண்ணியமும் பெருகும். இந்த நூல் எங்கெல்லாம் உள்ளதோ அங்கு ஞானிகளும் இருப்பார்கள். நம்மை யாரும் வஞ்சிக்க முடியாது. எல்லாம் நன்மையே நடக்கும்.

குறிப்பு 2

பெண்கள் திருவிளக்கு ஏற்றி அதன்முன் அமர்ந்து இந்த பாடலை பாராயணம் செய்வதோடு, மேற்கண்ட ஐந்து மகான்களின் நாமத்தைச் சொல்லி பூஜை செய்துவந்தால் தகுதி உள்ள கணவன் அமைவான். பண்புள்ள புத்திர பாக்கியம் அமையும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். உதிரபோக்கு, வெள்ளைபடுதல் போன்ற துன்பங்கள் நீங்கும். கல்வி கற்கும் பெண்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள். குடும்பத்தில் உள்ளவர்களுக்கு எந்த விபத்தும் ஏற்படாது. துன்பம் வந்தபோது தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற கோழைத்தனம் இருக்காது. எதையும் தாங்கிக் கொள்ளும் மனவலிமை உண்டாகும். வீண் ஆடம்பர செலவுகள் செய்வதில் நாட்டம் இருக்காது. குடும்ப வருவாய்க்குத்தக்க செலவு செய்ய வேண்டும் என்ற பக்குவம் உண்டாகும். கிடைத்ததைக்கொண்டு மனநிறைவு கொள்ளும் பண்பு உண்டாகும். குடும்பத்தலைவனை அனுசரித்தும் மற்றும் மாமன், மாமி நாத்தனார் இவர்களிடம் கனிவுடனும் நடந்துகொள்ளும் பரிபக்குவம் உண்டாகும். மேலும்வறுமையில்லாத வாழ்வு உண்டாகும். குடும்பத்தைச் சார்ந்தவர்கள் நம்மிடம் முரண்பாடு இல்லாது அன்புடன் நடந்து கொள்வார்கள். நாமும் அவர்களை மதிக்கக்கற்குக்கொள்ளும் சிறப்பறிவு உண்டாகும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு அலுவலகத்தில் எவ்வித இடையூறும் வராது.

ஆகவே மேற்கண்ட ஞானிகளை பூஜிப்போம், எல்லா நலமும் வளமும் பெற்று இன்புற்று வாழ்வோம். எல்லாம் வல்ல ஒளவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்ற ஞானிகளை போல் ஞானவாழ்வு பெற்று விடுபேறு அடைவோம்.

குறிப்பு 3

பிறப்பை ஒழிக்கவேண்டும் என்றால் சிறப்பறிவு வேண்டும். அதை புண்ணியத்தினாலும் பக்தியினாலும் அன்றி வேறுவகையில் பெறமுடியாது. அந்த பக்தியும் முற்றுப்பெற்ற முனிவர்களின் திருவடியைப் பூஜித்தால்தான் சிறப்பறிவு வரும். பக்தி செலுத்த செலுத்த புண்ணியம் செய்துகொள்ள வேண்டும் என்ற அறிவும், அதற்கு தேவையான சூழ்நிலையும், மேலும் மேலும் பக்தி செலுத்த வேண்டும் என்ற அறிவும், அதற்குரிய பரிபக்குவமும் உண்டாகும். சிறப்பறிவு துணைக்கொண்டுதான் ஜென்மத்தைக் கடைத்தேற்ற முடியும்.

## தஞ்சை மாசிமக விழாவில் வெளியிட்ட பத்திரிக்கை

ஜென்மத்தை கடைத்தேற்ற விரும்புகிறவர்கள் தினமும் **"ஓம் அகத்தீசாய நம"** என்று காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் நாமஜெபம் செய்ய வேண்டும். மேலும்

தவிர்க்க வேண்டும். பொருள் சேர்க்கும் பொழுது பிறர் ''பாவி'' என்று சொல்லாமல் நடந்து கொள்ள வேண்டும். சிறந்த முயற்சி உள்ளவராக இருக்க வேண்டும். வரவுக்குட்பட்டு செலவு செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்பதற்காக ஆடம்பர வாழ்வை விரும்பக்கூடாது.

மேலும், எந்த வகையிலும் கடன்வாங்கி செய்யவேண்டும் எனற் எண்ணம் வரக்கூடாது. விருந்தை உபசரிக்க வேண்டும். விருந்தை உபசரிப்பதற்குக் காரணம் நட்பு பெருகும். நட்பை பெருக்குவதன் நோக்கம் நமக்கு நான்கு பேர் துணை வேண்டும். நட்புதான் நமது வாழ்க்கைக்கு மூலதனம். தகுதியுள்ள நட்பு அமையுமானால் அதுவே நமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

மேலும், மனைவியை மதித்து நடக்க வேண்டும். அப்போதுதான் விருந்தை உபசரிக்கவோ, அன்னதானம் செய்யவோ அவள் துணையாக இருப்பாள். மேலும், தாய் தந்தைக்கு நன்றியுள்ளவனாக நடந்துகொண்டால் அவர்கள் நம்மை மனமார வாழ்த்துவார்கள். அதுவே நமக்கு கடவுளின் அருளுக்கு பாத்திரமாகும்.

வீட்டில் உள்ளவர்களிடம் எந்த அளவிற்கு அன்பு காட்டுகின்றோமோ அந்த அளவிற்கு நாம் மேற்கொள்ளும் வியாபாரம் மற்றும் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருப்பார்கள். வீட்டில் உள்ளவர்களின் மனம் நோகும்படி நடந்துகொண்டால் எந்த காரியத்திலும் வெற்றிபெற முடியாது. ஒருசிலர் வீட்டில் உள்ளவர்களிடம் கடுமையாக நடந்துகொண்டு வெளியில் உள்ளவர்களிடம் இனிமையாக நடந்துகொள்வார்கள். முடிவில் வீட்டில் உள்ளவர்தான் நம்மை பாராட்ட வேண்டுமே தவிர மற்றவர்கள் பாராட்டுவதால் யாதொரு பயனும் இல்லை.

நம் வீட்டில் ஏதேனும் குறைகள் இருந்தால் அவன் செய்வினை செய்துவிட்டான் இவன் செய்வினை செய்துவிட்டான் என்று எண்ணாமல் நமது வினைப்பயன்தான் வந்துள்ள துன்பத்திற்கு காரணம் என்று எண்ண வேண்டும். மனைவி மீது கணவன் சந்தேகப்படுவதும், கணவன்மீது மனைவி சந்தேகப்படுவதும் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். மேலும் அமைதியும் கெட்டுவிடும்.

மாதம் இருவருக்கு அன்னதானம் செய்வதனால் பிறருக்கு கொடுக்கக்கூடிய மனம் உண்டாகும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை உண்டாகும். செல்வம் பெருகும், உடல் ஆரோக்கியம் உண்டாகும், மேற்கொள்ளும் செயல்பாடுகள் தடையில்லாமல் நடக்கும். இதற்குமுன் அறியாமையால் பகை உருவாகி இருந்தாலும் பகை நீங்கி நட்பு உண்டாகும். அன்னதானம் செய்யச் செய்ய குடிப்பழக்கம், சூதாடும் பழக்கம், புலால் உண்ணும் பழக்கம், சிறுதெய்வங்களுக்கு உயிர்பலி கொடுக்கும் எண்ணங்கள் நீங்கிவிடும்.

ஜீவதயவு இருந்தால்தான் கடவுளின் அருள்பெற முடியும். ஜீவதயவு இல்லாத பூஜை அனுஷ்டானங்கள், மரப்பசுவில் (பொம்மை) பால் கறப்பதற்கு ஒப்பாகும்.

நாம் பிள்ளைகளுக்கு, பிறருக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தை சிறுவயதிலேயே போதிக்க வேண்டும்.

சிவபெருமானான வள்ளுவன் இயற்றிய திருக்குறளை தொட்டு வணங்கி, படிக்கச்செய்ய வேண்டும். திருக்குறளை பார்த்தல், தொடுதல், படித்தல், படிக்கக் கேட்டல் அத்தனையும் கடவுளின் ஆசி பெறுவதற்கு துணையாக இருக்கும். திருக்குறளைப் படிக்கப் படிக்க முன்செய்த பாவங்கள் தீரும். பாவங்கள் தீரத்தீர அறியாமை நீங்கும். அறியாமை நீங்கினால் சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு உள்ள மக்கள்தான் ஜீவகாருண்யத்தை கடைப்பிடிப்பார்கள். புலால் உண்ணுவதால் மூர்க்கத்தனமும், எது நன்மை தீமை என்று புலப்படாது போய்விடும். எனவே திருக்குறளை படித்துவருகின்ற மக்களுக்கு நல்வினை பெருகும், ஞானமும் சித்திக்கும்.

மகத்துவம் பொருந்திய அகத்தியர் முனிவர் முற்றுபெற்ற முனிவர் ஆவார்.

பொடிப்பொடியாகிவிடும். நாம் மேற்கொள்ளும் விவசாயம், வியாபாரம், தொழில், உத்தியோகம், தடையில்லாமல் நடக்கும். செல்வமும் பெருகும், தொட்டது துலங்கும், உடல் ஆரோக்கியமும் இருக்கும், பண்புள்ள புத்திரபாக்கியம் தோன்றும், கணவன் மனைவிக்குள் ஒற்றுமை உண்டாகும். ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய சிறப்பறிவு உண்டாகும். நமக்கு அமைந்த இந்த தேகம் இயற்கை கடவுளின் கருணை என்று எண்ணுகின்ற அறிவு உண்டாகும். நமது உடம்பில் உண்மையும் பொய்யுமாக கலந்துள்ளது. பொய்யை ஏன் சேர்த்து அமைத்தான் என்றால் பொய் நீங்காமல் மெய்யாகிய ஒளி தேகம் தோன்றாது. அதற்குத்தான் நெல்லில் உமி தவிடு வைத்ததுபோல் பொய்யையும் மெய்யையும் உடம்பில் சேர்த்து வைத்திருக்கிறான். உமி நீங்கினால் அரிசியாவதுபோல் பொய் உடம்பு நீங்கினால் மெய் உடம்பு வெளிப்படும். மெய் உடம்பு வெளிப்படுவதற்கு ஒரே வழி பசியாற்றி வைத்தலும் உருகி தியானிப்பதும்தான்.

### குறிப்பு

1. நெல்லில் உமி நீங்கினால் முளையாததுபோல காமதேகம் நீங்கினால் பிறவி அற்றுப்போகும்.
2. பொய் உடம்பாகிய காமதேகம் நீங்குவதற்கு மெய் உடம்பாகிய ஒளிதேகம் பெற்ற ஆசான் அகத்தீசர் ஆசி இருக்கவேண்டும். மெய் உடம்பாகிய ஒளிதேகம் பெற்றவர்களுக்கு மரணமில்லா பெருவாழ்வு உண்டாகும். மேலும் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்வார்கள். அவர்களே எல்லாம் வல்ல பரப்பிரம்மம் ஆவார்கள்.

**ஆசான் அகத்தீசரை பூஜிப்போம், ஆசி பெற்று இன்புற்று வாழ்வோம்.**
**இதில் உள்ள கருத்துக்கள் வேதத்தின் சாரமாகும்.**

## அகத்தீசனை பூஜித்தால் அனைத்தும் சித்தி

**14.04.2002**

எல்லாம் வல்ல பரப்பிரம்மமே பரமான்மாவாக உள்ளது. பரமான்மாவின் ஒரு பகுதியே ஜீவான்மாவாகும். பரமான்மா என்பது எங்கும் நீக்கமற இயக்குகின்ற காற்றாகும். அதில் ஒரு பகுதியே நமது ஆன்மாவின் மூச்சுக்காற்றாக உள்ளது. அந்த ஆன்மா தங்கியுள்ள இந்த உடம்பில், எல்லாம் வல்ல பரம்பொருள் அடங்கியுள்ளது. தேகம் காமதேகம் என்பதனால் நமக்குள் இருக்கும் பரம்பொருளை அறியமுடியாமல் உள்ளது. ஞானிகள் என்ன செய்கின்றார்கள் என்றால் முதுபெரும் தலைவன் ஆசான் அகத்தீசனை பூஜை செய்து ஆசிபெறுகிறார்கள். ஆசான் அகத்தீசன் ஆசியால் ஜீவான்மா பற்றியும், பரப்பிரம்மமாகிய பரமான்மா பற்றியும் அறிந்துகொள்கிறார்கள். அறிந்துகொண்டு ஆன்மாவை மாசுபடுத்தும் இந்த காமதேகத்தை ஆசான் துணைகொண்டு அணுஅணுவாக காமதேகத்தை நீத்து ஜீவான்மாவே பரப்பிரம்மமாக ஆகிவிடுவார்கள். நம்முள் உள்ள ஜீவான்மா என்று சொல்லப்பட்ட அணு மிகப்பெரிய பிரம்மாண்டமான ஒரு ஒப்பில்லா பேரொளியாக மாறுகிறது. அந்த ஒளியைக் காண்பதுவே பேரின்பம் அல்லது முக்தி அல்லது வீடுபேறு ஆகும்.

இதை **ஆசான் கருவூர் முனிவர்,** குருபக்தியால்தான் வீடுபேறு அடைய முடியும் என்பதை அறிந்து தினமும் தடையில்லாமல் காலை, மாலை அகத்தீசனை பூஜைசெய்து

**அறிந்துகொள்ள முடியும். பாவபுண்ணியத்தின் தன்மையை அறிந்துகொண்டவர்கள் நிச்சயமாக ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்வார்கள்.** தொடர்ந்து பூஜைசெய்துவந்தால் உயிரினங்களுக்கு காமதேகம் வருவதற்கு காரணம் என்ன என்று அறிந்து இடகலையாகிய சந்திரகலையையும், பிங்கலையாகிய சூரியகலையையும், புருவமத்தியாகிய சுழிமுனையில் ஆசான் அகத்தீசன் ஆசியோடு இடகலையையும், பிங்கலையையும் சேர்த்து ரேசித்து, பூரித்து, புருவமத்தில் கும்பித்து ஸ்தம்பித்துக்கொள்வார்கள். ஸ்தம்பித்தால் உடல் மாசு நீங்கும். பிறகு தச நாதமும் தோன்றும், தோன்றுவதோடு அமிழ்த பானமும் சிந்தும். இந்த வாய்ப்பைப் பெற்றவர்கள் கோடானுகோடி முனிவர்கள் ஆவார்கள். அதில் ஒருவர்தான் கருவூர் முனிவர் ஆவார்.

ஆசான் கருவூர் முனிவரை **"ஓம் கருவூர் தேவாய நம"** என்று காலை 5 நிமிடமும் மாலை 5 நிமிடமும் நாமஜெபம் செய்துவந்தால் முன்செய்த பாவங்கள் எல்லாம் பொடிபட்டுப் போகும். முன்செய்த பாவங்கள்தான் அறியாமையை உண்டுபண்ணும். பாவங்கள் நீங்க நீங்க தெளிந்த அறிவு உண்டாகும். தெளிந்த அறிவுள்ளவர்கள்தான் உடம்பாகிய காமக்கடலை கடக்கமுடியும். எனவே ஆசான் கருவூர் முனிவரை எல்லாம் வல்ல பரப்பிம்மமாகவும், மோட்சத்தைத் தரக்கூடிய வல்லவர் என்றும் நாம் நினைத்ததையெல்லாம் தரக்கூடிய பேராற்றல் பெற்றவர் என்றும் பூஜைசெய்து ஆசிபெற வேண்டும்.

### குறிப்பு

1. சான்றோர்களில் இருவகை உண்டு. ஒருவகையினர் சமூகச்சான்றோர்கள் ஆவார்கள். மற்றொருவகையினர் ஆன்மீகச் சான்றோர்கள் ஆவார்கள். சமூகச் சான்றோர்கள் என்பது உலக நடையை அனுசரித்து சகிப்புத் தன்மையுடன் நாட்டுக்குத் தம்மை அர்ப்பணித்து செயல்படுவதே சமூகச் சான்றோர்களின் இயல்பாகும். ஆன்மீகச் சான்றோர்கள் என்பது இம்மை, மறுமை ஆகிய (இப்பிறப்பு, மறுபிறப்பு) இயல்பை அறிந்து தன்னடக்கத்தோடு தவத்தை மேற்கொள்பவர்கள் ஆன்மீகச் சான்றோர்கள் ஆவார்கள். எடுத்துகாட்டாக ஆன்மீகச் சான்றோர்கள் என்பவர் இராமலிங்க சுவாமிகள் போன்றோர்கள். ஆன்மீகச் சான்றோர்கள் தவவலிமையால் கோடானுகோடி யுகங்கள் வாழ்வார்கள். அவர்களுக்கு மரணமில்லை.

   மனிதவர்க்கம் வீடுபேறு அடைய விரும்பினால் குருவருள் வேண்டும். குருவருள் இல்லாமல் வீடுபேறு அடையமுடியாது என்பது சத்தியமாகும். அருள்குருவாகிய கருவூர் முனிவர் அருள் இருந்தால்தான் மூலிகை வகைகளாலும், செந்தூரங்களாலும், பற்பங்களாலும் மற்றும் சுன்ன வகைகளாலும் காயசித்தி ஆகாது என்பதை அறிந்துகொள்ள முடியும். குருநாதராகிய கருவூர் முனிவர் தயவு இல்லாமல், பிராணாயாமம் (யோகநெறி) செய்தால், அவர்களுக்கு குறுகிய காலத்தில் மலச்சிக்கல் ஏற்பட்டும், குடல்புண்ணாகிய அல்சர் வந்தும் மற்றும் கை கால் விங்கியும் அநியாயமாக சாவார்கள். எனவே, ஆன்மீகத்துறைக்கு குருநாதர் ஆசிவேண்டும். சிலர் வாதம் என்ற தங்கம் செய்ய முயற்சிப்பார்கள். கடைசி வரையிலும் தங்கம் செய்ய முடியாது. கையில் உள்ள பொருள்களையெல்லாம் இழந்தும் மனைவி மக்களின் ஆதரவு இல்லாமல் திருவோடு எடுத்து பிச்சை எடுக்கின்ற அளவிற்கு வந்துவிடுவார்கள். எனவே கருவூர் முனிவரின் ஆசிபெற்று வீடுபேறு அடையவேண்டும்.

2. சிலர் யோகப் பயிற்சி தருவதாக சொல்வார்கள். யோகப் பயிற்சி செய்யவேண்டும்

அனுசரித்துத்தான் யோகப்பயிற்சி தரவேண்டும். உடல் ஆரோக்கியம் உள்ளவர்கள்தான் யோகப்பயிற்சியில் ஈடுபட வேண்டும். இல்லையென்றால், நோய்வாய்ப்பட வாய்ப்புள்ளது. மூச்சுக்காற்று இயக்கத்திற்கு மட்டும் இந்த கருத்துகள் பொருந்தும்.

3. குருபக்தி செலுத்த வேண்டும். அந்த பக்தியும் யாரிடத்தில் செலுத்த வேண்டும், எப்படி செலுத்த வேண்டும் என்பதை அறிந்துகொண்டு பக்தி செலுத்த வேண்டும். இதனுடைய விளக்கம் தெரியாமல் பக்தி செலுத்தினால் காலம்தான் வீணாகுமே தவிர அதனால் எந்த காரியமும் நடக்காது.
4. **ஈரேழு 14 லோகத்தில் எந்த மூலையில் இருந்தும் "கருவூர் தேவா" எனக்கு அருள்செய்ய வேண்டும் என்றால் "அஞ்சேல் மகனே" என்று அருள்செய்யும் வல்லமை ஆசான் கருவூர் முனிவருக்கு உண்டு.**

**அழைத்துப் பாருங்கள் உண்மை தெரியும்.**

**ஞானியர்களை பூஜிப்போம், ஞானம் பெற்று இன்புற்று வாழ்வோம்.**